# கானல் தாகம்



## பாலகுமாரன்

# கானல் தாகம்

''என்ன செண்ட் எடுத்து வைக்கணும்.''

''ப்ரூட்!''

''எத்தனை கர்ச்சீஃப்''

''ம்... ஆறு''

''டவல் வேணுமா?''

''தேவை இருக்காது. ஹோட்டல் டவல் போறும்.''

''ஹவாய் சப்பல்ஸ் ப்ளாஸ்டிக் பேக்ல சுத்தி வச்சிருக்கேன். அது தவிர லெதர் செருப்பு வேணுமா?''

''வேணாம்.''

''பாக்கெட் ஷாம்ப்பூவா, பாட்டிலா''

''தயவு செய்து பாட்டில் போன தடவை பாக்கெட்டைப் பல்லால கடிச்சு பாதி ஷாம்ப்பூ வாய்க்குள்ளாற போயிடுச்சு.''

''எதுக்கு பாக்கெட்டைப் பல்லால் கடிக்கணும்? சின்ன கத்திரிக்கோல் பௌச்சில வச்சிருக்கேன்ல.''

''வெச்சிருந்தே. பாதி குளியல்லதான் ஷாம்ப்பூ ஞாபகமே வந்தது. ஈரத்தோட கத்திரிக்கோல் தேடறத விட பல்லால கடிக்கறது தேவலாம்னு தோணிச்சு. தயவு செய்து பாக்கெட் வேணாம். பாட்டிலே வை.''

''பெட்டியில இடமில்லப்பா, இருக்கறதுல சின்ன பெட்டியா எடுத்துக்கிட்டுப் போறீங்க. எல்லாத்தையும் போட்டுத் திணிச்சு அப்புறம் துணி கசங்கிப்போச்சுன்னு எஸ். டி. டி. போட்டுக் கத்தறதுக்கா.''

''போன தடவை நீ வெச்ச மெதட் தப்பு''

''இந்தத் தடவை சரியா வெச்சிருக்கேன். வழில ஷாம்ப்பூ பாட்டில் வாங்கிக்கறீங்களா? வீட்ல பாக்கெட் தான் இருக்கு.''

''சரி.''

''வேறென்ன.''

''ஒரு அஞ்சு நிமிஷம் ஊருக்குக் கிளம்பறதுக்கு முன்னாடி கொஞ்சம் அமைதியா இருக்கணும். கொஞ்சம் பேசாம இரு.''

வீழிநாதன் முழுமையாய் உடுத்திக் கொண்டு ஹால் சோபாவில் சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டான். வெளியூருக்குப் போவதற்கு முன்னால் அமைதியாய் பரபரப்பு அறவே அகன்ற நிலையில், இதமாய் இனிமையாய் வீட்டிலிருந்து கிளம்ப வேண்டும் என்பது அவனுடைய எண்ணம். இதையும் தவிர முக்கியமான எதையும் மறந்து விட்டுப் போகாமல் எல்லாம் எடுத்துக் கொண்டோமா என்று நினைவுபடுத்திப் பார்த்துக் கொள்வதும் அவன் வழக்கம். ஆனால் இதற்கு அவசியம் ஏதுமில்லை. ஊருக்குப் போவது தெரிந்த முதல் நாளே, விஜயா அவன் தேவைகளைப் பெட்டியில் அடுக்கி விடுவது வழக்கம். வழக்கமாய் இரண்டு நாள் மூன்று நாள் என்றுதான் பிரயாணம் இருக்கும். இந்த முறை ஆறுநாள் பிரயாணம். ஹைதராபாத் வாசம், நியூட்ரின் சாக்லேட்டுக்கு தமிழில் விளம்பரங்கள் தயாரிக்க வேண்டும். பத்திரிகை விளம்பரம், போஸ்டர் விளம்பரம், சினிமா ஸ்லைடு விளம்பரம், பெரிய ஹார்டிங் விளம்பரம் என்று நாலு வகையான விளம்பரங்கள் தயாரித்துக் காட்ட வேண்டும். நியூட்ரின்



சாக்லேட் பெரிய கம்பெனி. வீழிநாதனுக்கு கிடைத்தற்கரிய பெரிய கஸ்டமர். வீழிநாதன் விளம்பரக் கம்பெனி ஆரம்பித்து ஆறு வருடமாகிறது. இவ்வளவு வளமான பார்ட்டி இதுவரை அவனுக்குக் கிடைக்கவில்லை. பேச்சு சாமர்த்தியமும், வேலைத்திறனும், கடவுள் அருளும் இருந்தால் இந்தப் பார்ட்டி கிடைக்கும். நியூட்ரினுக்கு விளம்பரம் செய்கிறேன் என்றால் போதும். இன்னும் நாலு பெரிய பார்ட்டி கிடைக்கும். வீழிநாதனின் சிறிய விளம்பர கம்பெனிக்கு ஐந்து பெரிய பார்ட்டிகள் கிடைத்தால் போதும். கம்பெனி பலமாக வளர்ந்து விடும். கம்பெனி வீடு வளம் பெறும். விஜயாவுக்கு வைரத்தோடு வாங்க முடியும். பழைய ஃபியட்டை விற்றுவிட்டும் புதிய மாருதி வாங்க முடியும். மேல்மாடி எழுப்பி அங்கேயும் ஏ. ஸி. போட்டு பத்து வயசுப்பிள்ளை ஆசைப்படுகிறாற் போல் ஒரு ஆள் நீள பாத் டப்பும், சலவைக் கல் பாத்ரூமும் கட்டமுடியும். விஜய் பப்ளிசிட்டீஸ் என்று நியான் போர்டு வைக்க முடியும்.

ஆனால், நியூட்ரின் சாக்லேட் சாதாரண பார்ட்டி அல்ல. அது ஒரு கெட்டிக்கார கம்பெனி. ஏகபோகமாய் அவர்களுக்கிருந்த ஒரு விளம்பர கம்பெனியைத் தவிர்த்து வட இந்தியாவை அவர்களுக்கும் தென்னிந்தியாவை நான்கு தனிக் கம்பெனிகளுக்கும் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் அவர்களுக்கு விளம்பரம் செய்ய கடும் போட்டி இருக்கிறது. நியூட்ரின் கம்பெனிக்கென்று ஒரு லோகோ உண்டு. லோகோ என்பது விளம்பரச் சின்னம். நியூட்ரினின் விளம்பரச் சின்னம் முயல். பெரிய முன் பற்களும், நீண்ட காதுகளும் கொண்ட சிரிக்கும் வெண் முயல்.

முயல் சுறுசுறுப்பானது, சுத்தமானது. சுகமானது, பார்க்க அழகானது. ஒரு குழந்தையைப் போல் குணம் கொண்டது. சாக்லேட் குழந்தைகளுக்கான விஷயம். முயல் குழந்தைகளுக்குப் பிடித்த விஷயம். முயலின்

பற்கள் உறுதியானவை. எவ்வளவு சாக்லேட் சாப்பிட்டாலும் கெட்டுப் போகாதவை. சாக்லேட் சாப்பிட்டால் பல் கெட்டுப் போகும் என்று யார் சொன்னார்கள். இந்த வெண் முயலைப் பாருங்கள். எவ்வளவு ஆரோக்கியமான பற்கள். முயலின் காதுகள் வேடிக்கையானவை. எல்லாக் குழந்தைகளுக்கும் பிடித்தவை. சுலபமாய் மனசில் பதிபவை. பெரியவர்களுக்குக்கூட முயல் பிடிக்கும். முயல் சாதுவான, சுறுசுறுப்பான பிராணி. நியூட்ரின் சாக்லேட் சாப்பிடும் குழந்தைகளும் சாதுவானவை. சுறுசுறுப்பானவை. நியூட்ரின் முயல் ஒரு கெட்டிக்காரத்தனமான லோகோ. புத்திசாலித்தனமான சின்னம். சிரிக்கும் வெண் முயல் ஒரு கவர்ச்சியான சின்னம். சந்தோஷத்தைச் சொல்லும் சின்னம். ஆரோக்யமான விஷயம். அதே போல் நியூட்ரின் சாக்லேட்டுகளும் சந்தோஷமானவை. ஆரோக்கியமானவை.

'இந்த லோகோவைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று தாஜ்கோரமண்டலில் நியூட்ரின் ஓனர் மிஸ்டர். ரெட்டி கேட்டபோது, தயக்கமின்றி மளமள வென்று வீழிநாதன் பேசினான். அந்தப் பேச்சுதான் ஹைதராபாத்திற்கு வரவழைத்திருக்கிறது. ஆறேழு விளம்பரங்களை வாக்கியங்களுடன் வரைந்தனுப்பும்படி கேட்டிருக்கிறது. கலர் கலராய் வரைந்த விளம்பர அட்டைகள் தனிப்பெட்டியில் முனை முறியாமல் வைக்கப் பட்டிருக்கின்றன. அவன் கம்பெனியில் அவன் கண்ணெ திரில் பாக் செய்யப்பட்டு பெட்டியில் வைத்துப் பூட்டப் பட்டது. இது இன்னொரு பெட்டி. இதை விஜயா பாக் செய்தாள். உள்ளே என்ன இருக்கிறதென்று தெரியாது. பாட்டில் ஷாம்ப்பூவைத் தவிர உள்ளே எல்லாம் இருக்கும். அவனுக்கு என்ன வேண்டுமென்று விஜயாவுக்குத் தெரியும். சிலசமயம் தேவையேயில்லாத சில விஷயங்கள் கூட தேவைப்படுமோ என்று வைக்கப்பட்டிருக்கும். போன மாதம் நாலுக்கு ஆறங்குலம் அவன் அப்பா படம் வைக்கப்பட்டிருந்தது.



"இதென்னடா திடீர்ன்னு அப்பா படம்" ஆச்சர்யப் பட்டான். வீட்டிற்கு ஃபோன் போட்டுக் கேட்டான்.

"நாளைக்கு உங்கப்பா திவசம். நீங்க ஊருக்குப் போறதும் முக்கியம், தெவசம் பண்ண முடியாது, குளிச்சுட்டு படத்தை வெச்சு ரெண்டு பூப்போடுங்களேன். தெவசம் பண்ணலைன்னாலும் ரெண்டு நிமிஷம் அவரை மனசுக்குள் நினைக்கலாமில்லையா?"

வீழிநாதனுக்கு அவன் அப்பாவைப் பிடிக்காது. ஆனால் பதினேழு வருஷம், தவறாமல் திவசம் செய்தான். அம்மாவுக்காகச் செய்தான்.

"பரவால்ல செய். அது அங்கேயாவது ஆத்திரப் படாத, அசூயைப்படாத சந்தோஷமா இருக்கட்டும் செய். நமக்குப் புடிக்கிறதோ, புடிக்கலையோ அது எனக்குப் புருஷன். உனக்குத் தகப்பன்! உன் புள்ளைக்கு தாத்தா. பிதா மகன் பித்ரு. அங்கே நின்னாவது, 'உங்களையெல்லாம் கஷ்டப்படுத்திட்டேன். நீங்க சந்தோஷமாயிருங்கன்னு' அது சொல்லட்டும். அப்படிச் சொல்றது உனக்கு நல்லது. உன் புள்ளைக்கு நல்லது."

அன்று இரவு அப்பா படத்தை, ஹோட்டல் கண்ணாடியில் சாய்த்து வைத்துப் படுக்கையில் அமர்ந்து பார்த்த போது அம்மா பட்ட கஷ்டங்களெல்லாம் நினைவுக்கு வந்தன. 'ல்ண்டி நாறி, நாற முண்டை' என்ற வார்த்தைகள் காதில் விழுந்தன. வீழிநாதன் அப்பா, தன்னை கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொண்டார். ஆனால் யாரோடும் தோழமை கொள்ளத் தெரியாதிருந்தார். தம்பியோ, அண்ணனோ, மாமனோ, மாமியோ, மனைவியோ, மகனோ, அண்டை வீட்டானோ, முதலாளியோ யாரும் தோழமையில்லை. தானும் சந்தோஷமாக இல்லாது, பிறத்தியாரையும் சந்தோஷப்படுத்தாத ஜீவன் அது. கோழைத்தனமும், பொறாமையும் கொண்ட பிராணி அது. தெளிவும் தைரியமும் சாகும்வரை அதற்குக்

கை கூடவில்லை. புத்தியில் ஒரு இழை தப்பியிருந்தால், எல்லோரும் அவரைப் பைத்தியம் என்று சொல்லியிருக்கக் கூடும். அம்மாவைக் கல்யாணம் செய்து கொண்ட அதிர்ஷ்டம் அவருக்கு ஒரு மயிர் பிடுங்கி வேலையும், மதிப்பும் கிடைத்தன. வீழிநாதனுக்கு அப்பாவை நினைக்கும் போதெல்லாம் உள்ளூர ஒரு சினம் பொங்கும். அவர் இறந்துபோன பிறகும் இரக்கமில்லாது அவர்மீது ஒரு சினம் பொங்கும். தானும் அவரைப்போல் பதட்டம் உள்ளவனோ, இந்தப் பதட்டம் பைத்தியத்தில் கொண்டு போய் விடுமோ என்ற பயம் வீழிநாதனுக்கு உண்டு.

ஆனால், வீழிநாதன் கெட்டிக்காரன். விவேகி. அப்பாவின்மீது பொங்கும் கோபத்தை அம்மாவின்மீது அன்பாய்க் கொட்டினான். அம்மா பட்ட துன்பத்தை வேறு எந்தப் பெண்ணும் படலாகாது என்று நினைத்தான். விஜயாவை சமதையாய், ஸ்நேகிதியாய் நடத்தினான். விஜயா அந்த சமதையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டாள். ஸ்நேகத்தை அலட்சியப்படுத்தாமலிருந்தாள். ரசத்தில் உப்பில்லை என்றால் வீழிநாதன் கோபித்துக் கொள்ள மாட்டான்.

''என்ன விஜி எதாவது வேண்டுதலா?''

''ஒண்ணுமில்லியே, ஏன் கேக்கறேள்?''

''ரசத்துல உப்பில்ல அதனால கேட்டேன்.''

''ஐயோ, நிஜமாவா?'' ஒரு கரண்டி ரசம் வாயில் விட்டுக் கொள்வாள். முகம் மாறுவாள்.

''ஸாரி, ஒரே நிமிஷம்ப்பா, உப்பபோட்டு ஒரு கொதி இறக்கிடறேன்'' அங்கும் இங்கும் ஓடுவாள். அலை பாய்வாள்.

''கடங்காரா எல்லாம் உன்னாலதான். உன் ரப்பரைத் தேடி எடுக்கறதுக்கு நான் வரணுமா? சமைக்கற



போது கூப்பிடாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? ஏம்ப்பா குழம்பு எப்படியிருக்கு?''

''தேவாமிர்தம்...''

''கத்திரிக்கா கூட்டு?''

''நளபாகம்.''

''தயிர் பச்சடில உப்பு இருக்கா?''

''பக்காவா இருக்கு.''

கை உலர காத்திருந்து ரசம் சாப்பிட்டு விட்டுப் போவான். அன்று முழுவதும் உப்பில்லாத ரசத்திற்கு விஜயா மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருப்பாள்.

''நூறு தடவைக்கு ஒரு தடவை தப்பா போகும். ஏன் புலம்பற. சும்மா இரு'' செல்லமான அதட்டலில் விஜயா அடங்கிப் போவாள்.

உண்பதில் மட்டுமல்ல, உடுப்பதிலும் வீழிநாதன் மனைவியை ஸ்நேகமாகக் கருதினான்.

''சுடிதார் உனக்குச் சவுரியமா? போட்டுக்க, இதுல என் பர்மிஷன் எதுக்கு?''

''உங்கம்மா எதாவது சொல்லுவாளோ?''

''சொல்லமாட்டா. சொன்னாலும் விஜயா என் பொண்டாட்டி. அவ உடுப்பு அவ இஷ்டம்னு சொல்லிடுவேன்.''

காலையில் புடைவையும், மாலையில் சுடிதாரும், இரவில் நைட்டியும் உடுத்திக் கொள்வதே விஜயாவுக்குப் பெரிய சுதந்திரமாய் இருந்தது. இதைக் காட்டிலும் பெரிய சுதந்திரம் இருந்தாலும் அது தேவையில்லை என்று தோன்றியது. வீட்டின் வரவு செலவுக் கணக்குகள் அவளிடம் இருந்தன. கூடுதல் செலவு செய்துவிட்டு அவனிடம் சொல்லும் தைரியமிருந்தது.

''இது என்ன புது சோபா?'' மெத்து மெத்தென்று அம்மாவின் மடிபோலிருந்த சோபாவில் லேசாய்க் குதித்துக் கொண்டு வீழிநாதன் கேட்டான்.

''மொள்ள குதிங்க.''

''ஏன்?''

''நாலாயிரத்து நானூறு ரூபா.''

''ஏய். வெளையாடுறியா? ஏது காசு?''

''கடவுள் கொடுத்தார்.''

''நான் இல்லாதபோது கடவுளைக் கூப்பிட்டு, ஜல்சா பண்றியா?''

''தூத்தேரி...பேச்சைப்பாரு.''

''ஏது காசு, உண்மையைச் சொல். இல்லையேல் உன்னைச் சித்திரவதை செய்து, உண்மையை வாங்குவேன். உண்மையைக் கக்க வைப்பேன்'' சடசடவென்று இடுப்பு பெல்ட்டை உருவி சோபாவில் அடித்தான். அவன் நடிப்புக்கு உற்சாகமாகி, பிள்ளையும் பெல்ட் உருவி, அம்மாவின் எதிரே நின்றது. அவள் முழங்காலில் மெல்ல அடித்தது.

''ஒரே அறை. அப்பனும் புள்ளையும் காணாத போயிடுவீங்க, பெல்ட்டைப் போடறா கீழே.''

''ஏது காசு?''

''ஏது காசு?'' பிள்ளையும் எதிரொலித்தது.

''ஜல்சா பண்ணினேன்.'' அவள் உதடு கழித்து உடல் நெளிந்தாள். இரண்டு பெல்ட்டும் அவள் முழங்காலில் இறங்கின.

''ஹஹ்ஹ'' கொக்கரிப்பு எழுந்தது.

''அடீ, தொடப்பக் கட்டைங்களா, பெல்ட்டாலயா அடிக்கிறீங்க...'' விஜயா ஒட்டடைக்குச்சி எடுத்துச்



சுழற்றினாள். எதிரிகள் பின் வாங்கினர். பிள்ளையை 'பே' என்று பயமுறுத்த, பெல்ட்டை அது கீழே போட்டது. புருஷனை சோபாவில் தள்ளி முழங்காலை அவன் நெஞ்சில் வைத்து, தலைமுடியை வலிக்கப் பிடித்து, அவன் உதட்டைத் திருகி ரத்தச் சிவப்பாக்கினாள். புருஷன் வலி தாங்காது அலறினான். பிள்ளை அம்மாவின் முதுகுப் பக்கம் ஏறி அவளை இழுத்து விலக்கப்பார்த்தது. இடது கையால் புருஷன் முகத்தை சோபாவில் அழுத்தி, பிள்ளையை வலது கையால் இறுக்கினாள்.

''அப்பா, அம்மாவை அடி. கொல்லு'' பிள்ளை கத்தியது. ஒரு பெண்ணை, ஒரு ஆண் வினாடி நேரத்தில் அடித்துத் தாக்க முடியும், துன்புறுத்த முடியும். ஆனால் பெண்ணைத் துன்புறுத்துவதற்கா கல்யாணம்? துன்பப் படவா குடித்தனம்?,

''தாயே, என்னை விட்டு விடுங்கள்!'' அப்பன் கை கூப்பலைப் பார்த்து பிள்ளை தலையில் அடித்துக் கொண்டது. ''சரியான பயந்தாங்கொள்ளிப்பா'' என்றது.

ஆனால், வீரமென்பது தன்னிலும் மெலியாரை இம்சிப்பது அல்ல, மனைவியை அடித்துத் துன்புறுத்துவது அல்ல, வீரமென்பது தன்னிலும் வலியாரை எதிர் கொள்ளல்.

நியூட்ரின் சாக்லேட் வலியது, பெரியது, அதற்கு முன்பு வீழிநாதனின் விளம்பரக் கம்பெனி ஒரு தூசு, தமிழ் நாடு முழுவதற்கும் விளம்பரம் செய்யும் ஆர்டர் வாங்கி விட்டால் அது வீரம். அதைத் தக்க வைத்துக் கொள் வதே விவேகம்.

''சோபா வாங்க ஏது காசுன்னு சொல்ல மாட்டே. வேணாம் போ.''

''சொல்றேம்ப்பா, ஸ்ரீராம்ல பத்தாயிரம் ரூபா சீட்டு போட்டேன்ல. போன மாசம் சும்மா பார்க்கலாம்னு ஆக்ஷன் போனேன். ஆளேயில்லை. எண்ணூற்றி அம்பது

ரூபா தள்ளி எடுத்தேன். முந்தா நேத்து செக் வந்தது. நாலாயிரத்து நானூறு சோபா. மிச்சம் அறுநூறு ரூபாய்க்கு சில்லரை சாமான், ஒரு நாலாயிரத்துச் கொச்சம் கையில இருக்கு. வேற என்ன செய்யலாம்?''

''எது வேணாலும் செய்.''

''கோபமா?''

''சீச்சி... எனக்கென்ன கோபம்.''

''எங்கப்பாவுக்கு நூறு ரூபா அனுப்பட்டுமா?''

''எதுக்கு?''

''ரொம்ப இருமறாராம். குளிர் ஒத்துக்கலையாம். தம்பி லெட்டர் எழுதியிருக்கான். மருந்து வாங்கிக் கட்டுமே....''

''நூறு ரூபா எப்படிப் போதும்.''

''நம்மால அவ்வளவுதானே முடியும்.''

''ஐநூறு அனுப்பு விஜயா.''

''நான் ஏதாவது உருப்படியா வாங்கிக்க வேண் டாமா?''

''உருப்படியான்னா?''

''ஒண்ணு, ஒண்ணேகால்ல மோதிரம், தோடு.''

''நீ வேணுங்கறத வாங்கிக்க, தனியா ஐநூறு அப்பா வுக்கு அனுப்பு.''

''ஐநூறு ஜாஸ்தி, முன்னூறு அனுப்பறேன். ஒண்ணுக்கு ரெண்டா புள்ளை பெத்து வச்சிருக்காரில்லே அவங்க பார்த்துக்கட்டும்...''

இருநூறுதான் அனுப்பினாள். சோபா வாங்கின மிச்சக் காசில் மாட்டலும், ஸ்டட்டும், வாங்கிக் கொண் டாள். அடுத்ததாய், இருபத்தையாயிரம் சீட்டு சேர்ந் தாள். அப்பாவிடமிருந்து வந்த நன்றிக் கடிதத்தைப் பெருமையோடு காட்டினாள்.



''சோபா எப்படியிருக்கு?'' மறுபடி கேட்டாள்.

''பரம சுகம். டி. வி. பார்த்துக்கிட்டே தூங்கலாம்.''

''அப்பனும், புள்ளையும் பெல்ட்டால அடிச்சீங்கள்ள இதுக்கு'' பொய்யாய்க் கோபப்பட்டாள். பின்னால் பாயும் குதிரைப் படமிருக்க புருஷனும், மனைவியும் பிள்ளையை சோபா நடுவில் உட்கார வைத்து, விழிநாத னின் கம்பெனி ஆள் போட்டோ எடுக்க, ஒன்னரைக்கு ரெண்டேகால் படமெடுத்து அதில் எலக்ட்ரானிக் கடிகா ரம் பொருத்தி வீட்டில் மாட்டிக் கொண்டார்கள்.

அதைப் பார்த்தவுடன், யாரும் அதைச் சந்தோஷ மான குடும்பம் என்று சொல்லிவிட முடியும். ஒரு சந் தோஷமான குடும்பத்திற்குத் தேவையானது அன்பு, பொறுமை, கடும் உழைப்பு, நிதானம், பரஸ்பரம் விட்டுக் கொடல் என்கிற ஐந்தும் அவசியம். இதையெல்லாம் தவிர கடவுள் அருளும் வேண்டும். கஷ்டமே வேண்டாம் என்கிற இறை வேண்டல் அபத்தமானது. ஆத்திரம் மிக்கது. இருட்டால்தான் வெளிச்சத்துக்குப் புகழ். வெயிலால்தான் நிழலுக்கு மதிப்பு.

அகாலமாய் எதுவும் கொடுத்துவிடாதே என்பதுதான் விழிநாதனின் இறை வேண்டல். திடீரென்று பத்துலட்ச ரூபாயும் வேண்டாம். திடீரென்று இழப்பும் வேண்டாம் என்பது அவன் பிரார்த்தனை. இயல்பான வரவு. இயல் பான இழப்பு தாங்கிக் கொள்ள முடியும். அப்படி வரும் இழப்பை அனுபவிப்பது கூடச் சுகம்.

பிள்ளைக்கு வைரஸ் ஃபீவர் வந்த மூன்று நாளிலேயே விஜயாவுக்கும் ஜுரம் வந்தது.

''எங்கம்மாவுக்கு தந்தியடிங்கோ, ஒத்தாசைக்கு வரட்டும்'' விஜயா வேண்டினாள். விழிநாதன் மறுத்து விட்டான். கம்பெனியிலிருந்து வீட்டுக்கு நாலுமுறை ஓடி வந்து கவனித்துக் கொண்டான். சமைத்தான். சாதம் பரிமாறினான். டாக்டருக்கு அலைந்தான். தரையில்

உட்கார்ந்து ஆரஞ்சு நறுக்கி சாறு பிழிந்து கொட்டை விலக்கி குடிக்கக் கொடுத்தான். கணுக்கணுவாய் வலிக்கிறது என்று அழுத பிள்ளையை, மடியில் போட்டுப் பாட்டுப் பாடினான். உடம்பு தேறி அவளே கடிதமெழுதி அம்மாவை வரவழைத்தாள். பெற்றவளிடம் புருஷனைப் பற்றி மாய்ந்து, மாய்ந்து சொன்னாள்.

''என் சமையல் சுமார்தான். அது நன்னா சாப்பிடும். அதுக்கு வாய்க்கு ருசியா பண்ணிப் போடேன்.'' அம்மாவுக்கு உத்தரவிட்டாள். உணவு என்பது ருசியில் மட்டுமில்லை. பரிமாறும் அன்பிலும் இருக்கிறது. மாமியாருக்கு மாப்பிள்ளை மேல் தேவதா விசுவாசம். அது தட்டில் கவிழ்த்த சோறில் தெரிந்தது. புருஷனும் மனைவியும் ஒற்றுமையாய் இருந்தால் போதும். மற்ற உறவுகள் மதிப்பும், மகிழ்வுமாய்த் தலை வணங்கும். அப்படி உறவுகள் வணங்குவது ஒரு கௌரவம். அந்தக் கௌரவம் ஒரு சந்தோஷம். அந்த சந்தோஷம் அதிக ஒற்றுமை தரும். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் வீழிநாதனின் அப்பாதான். அப்பா அம்மாவுக்குச் செய்த கொடுமையை கண்ணாரக் கண்டு துடித்த வீழிநாதன் தன் மனைவிக்கு இதுபோன்று நேரக்கூடாது என்று கொண்ட உறுதியும் காரணம். வாழ்க்கைப் பாடங்கள் நல்லவைகளைக் காட்டிலும் கெட்டவைகளிலிருந்தே தெளிவாய்க் கிடைக்கும்.

ராமன் ஏக பத்தினி விரதனாய் இருந்ததற்குக் காரணம் தசரதனாகவும் இருக்கலாம், வருடத்திற்கு ஒரு முறை சாபத்திற்கு பயந்து, புதுப்புதுப் பெண்ணாய் திருமணம் செய்து கொண்டதாலும் இருக்கலாம். அப்பாவின் கல்யாணத்தை, அம்மா கோசலை தலைவிதியே என்று மௌனமாய் பார்ப்பதைக் கவனித்துவிட்ட சிறு பிராயத்து ராமன், 'இவ்வித காரியத்தை ஒரு நாளும் செய்யமாட்டேன்' என்று உறுதி பூண்டிருக்கலாம். இதைப் பற்றி யாரும் கதை எழுதியதில்லை. காலட்சேபம்



செய்ததில்லை. ராமன் ஏக பத்தினி விரதனாய் இருந்ததற்கு தசரதன் காரணமா? தெரியவில்லை. ஆனால், தன் மனைவி விஜயாவிடம் பிரியமாயும், ஸ்நேகமாயும் இருப்பதற்கு வீழிநாதனின் அப்பா காரணம். அம்மாவை அல்ப காரணத்துக்கெல்லாம் துன்புறுத்திய அப்பா காரணம்.

வீட்டை விட்டு வேலை நிமித்தம் இரண்டு நாள் பிரியலாம். மூன்று நாள் பிரியலாம். நான்கு நாள் தாங்கும். ஆனால், ஆறு நாள் அதிகம். இந்த முறை ஆறு நாளில்லை. ஏழெட்டு நாள் கூட ஆகலாம். தமிழ்நாடு முழுவதும் நியூட்ரின் கம்பெனி விளம்பரத்திற்கு ஆர்டர் வாங்கிய பிறகுதான் வரவேண்டும். இதற்கு எத்தனை நாளானாலும் தாங்கித்தான் ஆக வேண்டும். நியூட்ரின் கம்பெனி விளம்பரம் செய்யக்கிடைப்பது ஒரு கௌரவம். நல்ல வருமானம், வளர்ச்சியின் அடையாளம். வீழிநாதன் சோபாவை விட்டு எழுந்தான். பூஜை மாடத்திற்குப் போய் கண்மூடி நின்றான். 'இறையே, நான் கடினமாய் உழைக்க விரும்புகின்றேன். உழைத்து வளர விரும்புகின்றேன். அதற்கான வாய்ப்பு எனக்குக் கொடு. மனசார வேண்டினான். ஹாலுக்கு வந்து மறுபடி சோபாவில் உட்கார்ந்து பவர் ஷூ போட்டுக் கொண்டான். மணி பார்த்தான். எழுந்து கைகளை விரித்தான். விஜயா அவன் அருகே வந்து அவன் சட்டை கசங்காமல் கட்டிக் கொண்டாள். உதட்டில் முத்தமிட்டாள். அவன் இடுப்பு தடவி இறுக்கிப் பிடிக்க, சிணுங்கினாள். அவன் இரண்டு காதுகளையும் கைகளால் பிடித்து ஆட்டினாள். இந்த முறை முத்தம் வாங்கினாள். காமம் என்பது ஒரு மொழி. காதல் என்னும் கவிப்பொருளைச்சொல்லும் மொழி. வீழிநாதன் வீட்டை விட்டு இறங்கும் பொழுது, அவன் மனசு முழுவதும் நியூட்ரின் சாக்லேட்டும், உதடு முழுவதும் மனைவியின் முத்தமும் இனிப்பாய் இனித்தன.

# 2

அவளுக்கும் தித்தித்தது. உதடு. இடுப்பு. முதுகு கன்னம் எல்லாம் தித்தித்தன. தித்திப்பு என்பது ஒரு சுவையல்ல, ஒரு உணர்வு. ரொம்ப சந்தோஷம் என்கிற உணர்வு இன்னும் வேண்டும் என்கிற உணர்வு. எல்லா சந்தோஷமும் ஒரு மயக்க உணர்வு. நான் எனது என்கிற எண்ணமில்லாத உணர்வு. தான் என்பது கொஞ்சம் மறையும் நேரம்தான் சந்தோஷ நேரம். இதனால்தான் மனிதனுக்கு சந்தோஷத்தில் அத்தனை பிடித்தம்.

இன்னும் ஆறு நாட்களுக்கு புருஷனில்லையே என்பது துக்கமாக இருந்தாலும் உள்ளடங்கிய ஒரு சந்தோஷமும் இருந்தது. கடிகாரத்தைப் பார்த்துப் பார்த்து வேலை செய்ய வேண்டிய அவசியமில்லை என்று தோன்றியது. வீட்டிற்கருகேயுள்ள லேடீஸ் க்ளப்பில் அவர்களுக்குள்ளாகவே ஒரு பட்டிமன்றம் நடந்தது. புருஷன் அவசியமா? அவசியமில்லையா? என்று கேட்கப்பட்டது. ‘புருஷன் அவசியம்தான், அப்பப்போ! என்று யாரோ பதில் சொன்னார்கள். எல்லோருக்கும் சிரிப்பு வந்தது. அந்த பதில் பிடித்திருந்தது. ஆனால், ‘‘அப்பப்போ’ என்பது என்ன என்று யாரும் விவரித்துப் பேசவேயில்லை. கல்யாணமாகாத இருபத்தியெட்டு வயதுப் பெண் ஒருத்தி தடார், புடாரென்று பேசினாள்.

‘காதலன் ஒருவனைக் கைப்பிடித்து, அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து’ என்று முழங்கினாள்.

‘‘அதெல்லாம் முடியாது, அவா அவா காரியத்த அவா கவனிச்சுக்கணும். அப்புறம் என் காரியத்துக்கு அவா கவனிச்சுக்கணும். அப்புறம் என் காரியத்துக்கு யார் கை குடுப்பா.’’ நாற்பது வயதுப் பெண் வெட்டினாள்.



‘‘இதைச் சொன்னது பாரதி’’ இருபத்தி எட்டு வயதுப்பெண் சீறினாள்.

‘‘அதனால என்ன?’’

‘‘பாரதி ஆம்பளை. அவருக்கு பொம்மனாட்டி கஷ்டம் தெரியாது.’’ கடுமையாய் எதிர்த்தார்கள்.

‘‘பாரதிக்கா தெரியாது?’’ இருபத்தி எட்டு வயது எகிற,

‘‘இதோ பார். உனக்கு ரொம்ப சீக்கிரம் கல்யாணம் ஆகணும். உன் ரெண்டு கையையும் உன் புருஷனுக்கு கொடுத்துடணும். இதே கிளப்புக்கு வந்து நான் நொண்டியா இருக்கேனேன்னு நீ அழணும்.’’ பதிலுக்கு சீறினார்கள். அந்தப் பெண்ணை அழ வைத்தார்கள்.

‘‘கல்யாணமான பொண்ணோட கஷ்டம் உனக்குத் தெரியல. அதனாலதான் பாரதியாரை சொல்லிண்டிருக்கே’’ என்றார்கள். அங்கே நடந்ததை நடந்தபடி வீட்டுக்கு வந்து வீழிநாதனிடம் விஜயா சொன்னாள். வீழிநாதன் ஆர்வமாகக்கேட்டான். யோசனை செய்தான்.

‘‘பாரதியார் ஒண்ணும் முட்டாளில்லை. புருஷனுக்கு அடிமையா இருக்க வேண்டாம். சமதையா இருன்னு சொல்ற லைன் இது. பாரதியார் காலத்துப் பெண்களுக்கு காதலன் ஒருவனை கைப்பிடித்து என்பதே பெரிய விஷயம். ‘எனக்குத் தெரியாது, எல்லாம் என் ஆத்துக்காரர் பார்த்துப்பார்’ என்று இருப்பதை எதிர்க்கும் பாட்டு இது. ‘இன்னைக்கு நிறைய பேர் இப்படி இருக்கறதுனாலேயே அன்னிக்கு அவர் பாடினது அபத்தமாயிடாது. ஒரு குடும்பத்துக்கு ஒரு லீடர்தான். ரெண்டு லீடர் குழப்பம், ரெண்டு பேர் வண்டிய ஓட்டினா குடை சாயும். இது பாட்டில உள்ளடங்கி இருக்கு. உங்களுக்கு பாட்டு இப்பிடியிருந்தா சந்தோஷமா இருக்குமோ! காதலி ஒருவனைக் கைப்பிடித்து, அவள் காரியம் யாவினும் கைகொடுத்து...’ உச்சி குளிர்ந்துடுமோ? இதுக்கு பேர்

சாவனிஸம், ஃபீமேல் சாவனிஸம் அவன் சொன்னதை லேடீஸ் க்ளப்பில் இரைத்தாள்.

''எஸ்...எஸ்...எஸ்'' இருபது, முப்பது பெண்கள் கூச்சலிட்டார்கள்.

''ஆமாம். எங்களுக்கு உச்சி குளிர்ந்துடும். எங்களுக்கு உச்சி குளிர்ந்தா ஆம்பளைக்கு உடம்பெல்லாம் எரியுமே. அதனால்தான் எல்லாப் பெண்ணையும் நம்பர் டூவா இருங்கறேள். ஏன் ஆம்பளை இருக்கட்டுமே நம்பர் டூவா. பொம்பளையால நம்பர் ஒன்னா இருக்க முடியாதா? இருந்ததில்லியா? இந்திராகாந்திக்குப் பின்னாலே கை கட்டிண்டுதானே போனேள். மேம்சாகேப்னு தானே கூப்பிட்டேள். இந்திராகாந்திய கூப்பிடலாம். உன்னைக் கூப்பிடக் கூடாதா? ஒரு வாரம் உன்னை மேம்சாகேப்னு தான் கூப்பிடணும்னு சொல்லிப்பாரு. உன் புருஷன் ஒத்துப்பானா?''

விஜயா இந்த மிரட்டலுக்குப் பயந்தாள். 'சொல்லலேன்னா எம் புருஷனை எல்லோரும் சேர்ந்து அடிச்சு சாய்ச்சிருவேள் போலருக்கே' கேள்வி கேட்டாள்.

''அடிக்கமாட்டோங்கற தைரியம்தானே பாரதியாரை சப்போர்ட் பண்ண வச்சது'' உன் புருஷன் மேல் தப்பில்லடீ, கை கொடுத்து, கால் கொடுத்துன்னு பேசறாளே அவளை உதைக்கணும்.'' அந்த இருபத்து எட்டு வயதுப் பெண் அதற்குப் பிறகு க்ளப்பிற்கு வரவேயில்லை.

இந்தப் பேச்சையும் வீழிநாதனிடம் விஜயா சொன்னாள். அருகே சோபாவில் உட்கார்ந்து கொண்டிருந்த வீழிநாதன், சட்டென்று அவள் காலடியில் அமர்ந்தான்.

''மாதா, மரகதசியாமா, மாதங்கி, மதசாலினி'' என்று பாடினான். அது நிஜமா, கேலியா என்று விஜயாவுக்குக் குழப்பம் வந்தது.



''ஒரு வீட்ல ஆம்பளை முக்கியமா, பொம்பளை முக்கியமா?'' இதுதானே விஷயம். இதை எங்கிட்டேயும் கேட்க வேண்டாம். உன் கிளப்புலேயும் பேச வேண்டாம். நீ, முடிவு பண்ணு. நீயா முடிவு பண்ணு. எந்தச் சார்பும் இல்லாம முடிவு பண்ணு'' ஆழ்ந்து யோசிக்க சில இடங்களில் தானும், சில இடங்களில் அவனும் உயர் வென்பது தெரிந்தது. மாதம் பதினெட்டாயிரம் ரூபாய் சம்பாதிக்க, பெண்பிள்ளையாய் சில இடங்களில் அவன் குழைய வேண்டிய அவசியம் தெரிந்தது. வீட்டு மராமத்து முழுவதையும் ஆணால்தான் நிர்வகிக்க வேண்டிய நேரம் தெரிந்தது. இங்கே ஒற்றுமை அழிய சகலமும் குலையும் என்பது தெரிந்தது.

''ஆனா அத்தனை ஆங்காரமா ஆம்பளையஎதிர்த்துப் பேசறாங்களே, ஏன்?'' வீழிநாதனையே இதற்கு விளக்கம் கேட்டாள்.

அடக்கப்பட்டிருப்பார்கள், ஆங்காரப்படுகிறார்கள். அந்த ஆங்காரத்திற்கு லேடீஸ் கிளப் ஒரு வடிகால். இத்தனை நாள் நீ அடக்கினாய் அல்லவா? இப்போது நான் அடக்குகிறேன் என்று ஆர்ப்பரிக்கிறார்கள். அன்பு என்பது அடக்குவதோ அடங்குவதோ அல்ல. ஆளுமை செய்வதோ ஆளுமைப்படுவ்தோ அல்ல. அறிவது, பரஸ்பரம் ஒருவரைஒருவர் அறிவது வீழிநாதன் விளக்கிப் பேசினான்.

ஆனால், இதெல்லாம் பெத்தத் பேச்சு. வெறும் தியரி. சொல் முழக்கம். அவன் கம்பெனிக்கு கிளம்புவதற்குள் 'திபுதிபு' என்று ஏற்படும் அவசரத்தை ஒரு நாளும் விட முடியவில்லை. அந்த அவசரம் சில சமயம் சிக்கலாகும் போது எரிச்சல் வருகிறது.

''நேரத்திற்கு புரை குத்தின தயிர் உறையவே இல்லை. நேத்தைக்கு சமையலறையுள்ள யாரு வந்து உருட்டினது அப்பாவா, புள்ளையா?''

''இரண்டு பேரும்தான்.''

''உருட்ட முடியாத ஓசரமான எடத்ல நான் தயிர் வச்சிருக்கணும்.''

''ஆக மொத்தம் இப்ப தயிர் இல்லை. அவ்வளவு தானே'' அவன் விலகி நடந்தாலும் தயிர் தோயாத கோபம் மறையாது. திருமணம் பெண்ணுக்கு விலங்கு தான். வீட்டுத் தயிரிலிருந்து, புருஷன் வருமானம் வரை. குளிர்பெட்டி ஒட்டத்திலிருந்து பிள்ளையின் ராங்க் வரை பொறுப்போடு கவனிக்கத்தான் வேண்டும். ஒருவேளை இந்தப் பொறுப்பின் மிகுதிதான் கோபம் தருகிறதா? அலுப்பு வருகிறதா? பதினோரு வருஷக் குடித்தனம். ஆயுசு கெட்டியாக இருந்தால் இன்னும் இருபது அல்லது முப்பது வருடம் தினம் தினம் பால் உரை குத்தி, தயிராய் மாறியிருக்கிறதா என்று பார்க்கும் முப்பது வருடம்.

''ஸ்வீடன்ல எந்தப் பொம்மனாட்டியும் அஞ்சு வருஷத்துக்கு மேலே ஒரு புருஷனோட வாழறதில்ல. தொண்ணூற்றி ஆறு சதவீதம் டைவர்ஸ் பண்றா. அப்படி டைவர்ஸ் பண்ணாத நாலு பர்சண்ட்ல ரெண்டு பேருக்கு வேற ஆஃபேர் இருக்கு.'' க்ளப்பில் கணக்கு சொன்னார்கள்.

''ஐயோ என்ன கணக்கு இது? அசிங்கம் பிடிச்ச கணக்கு. அஞ்சு வருஷத்துக்கு ஒரு ஆம்படையானா, தூததேறிக்கா.''

''ஸ்வீடன்கறது எங்கேயிருக்கு?'' அப்பாவியாய் ஒரு மாமி கேட்க, 'மாமிக்கு ஆசையைப் பாரு' கிள்ளிச் சிரித்தார்கள்.

''அஞ்சு வருஷத்துக்கு ஒரு ஆம்படையான். இதை யாரவது உங்களால ஏத்துக்க முடியுமா?'' ஹேர்ப்பின் விழும் நிசப்தம். யாருமே பதிலே சொல்லவில்லை. ''ஆனா காதலன் ஒருவனை கைப்பிடிச்சதுக்கு ஏன் அத்தனை கூச்சல் போட்டேள்.''



உடனே கூச்சல் கிளம்பியது.

''அடிமையா இருக்க வாண்டாம்னு சொன்னா அதுக்காக அவுசாரியா இருக்கணும்னு அர்த்தமா? நன்னாருக்கே உன் கேள்வி. டோண்ட் ப்ரீச் இம்மாரல்'' தலைக்குத் தலை கத்தினார்கள்.

''அப்படியானால், அப்படியானால் வாட் டு யூ வாண்ட்'' கணக்கு கொடுத்தவள் பதிலுக்குச் சீறினாள்.

''ஒரே ஒரு ஆம்படையான். நிறைய சம்பாதிக்கற ஆம்படையான். ரெண்டு குழந்தேள். ஒரு புள்ளை. ஒரு பொண்ணு, மாமனார், மாமியார், நாத்தனார், மச்சினர் கூடாது. என் வீட்ல நான் வச்சதுதான் சட்டமா இருக்கணும்.'' முப்பத்தைந்து வயது பெண்மணி எழுந்து நின்று கத்தினாள்.

''நீங்க வச்சதுதான் சட்டம்னா அது என்ன விதமான சட்டம், அந்த சட்டத்தில் என்னவெல்லாம் அடக்கம்'' என மறுபடியும் கேட்கப்பட்டது.

யாரும் பதில் சொல்லவில்லை. பதில் சொல்லப்பிடிக்கவில்லையா? அல்லது தெரியவில்லையா என்பது புரியவில்லை.

''அஞ்சு வருஷத்துக்கு ஒரு ஆம்படையான். அதுதான் என் சட்டம்'' யாரோ குறும்புக்காரி பதில் சொல்ல அவளை சூழ்ந்து கொண்டு கைப்பையால் அடித்தார்கள்.

''இப்படி கெட்ட பேச்சுப் பேசினா இந்தக்கிளப்புக்கு நான் வரமாட்டேன்'' நாற்பது வயசுப் பெண்மணி விறைப்பாய் நின்று கத்தினாள்.

''எது கெட்ட பேச்சு... நெருப்புன்னா வாய் வெந்துடுமா?''

''நெருப்புன்னா வாய் வெந்துடணும். கற்புங்கறது நெருப்பு மாதிரி இருக்கணும்.'' அந்தப் பெண்மணி பதிலுக்குச் சொன்னாள்.

'ப்பூவ்' என்று எல்லோரும் பதிலுக்குக் கத்தினார்கள்.

'நீங்க திருப்புகழ் க்ளாஸ், லேடீஸ் க்ளப் இல்ல.'' யாரோ கேலி செய்தார்கள்.

''ச்சீ, பன்னாடைங்களா, நீங்க நன்னா யிருப்பேளா.'' அந்தப் பெண்மணி அழுது கொண்டே க்ளப்பை விட்டு ஓடினாள்.

''பெண்ணுக்குப் பெண்தான் எதிரி என்பதற்கு இப்பொழுது போன திருமதி. ஜெயலக்ஷ்மி ஒரு உதாரணம். ஆண்கள் இட்ட சட்டம்தான் ஜெயலக்ஷ்மியின் சட்டம். தன் மரபு எது? அதன் உபயோகம் என்ன? அது யாரால் இயற்றப்பட்டது என்பதை யோசிக்கக்கூட பயப்படுகிறார்கள். திருமதி. ஜெயலக்ஷ்மிக்கு லிப்ஸ்டிக் வேண்டும். ஹேர் டை வேண்டும். பிரா வேண்டும். ஷிபான் வேண்டும். உடை மட்டும் புதுசு. மனசு பழையது. இது ஒரு பரிதாபமல்லவா?'' ஸ்வீடன் கணக்குச் சொன்னவள் கேள்வி எழுப்பினாள்.

''வேர் எக்ஸாட்லி யு ட்ரைவ் அஸ்? வசுமதி அஞ்சு வருஷத்துக்கு ஒரு புருஷனா?'' கேட்டவளை மடக்கித் கேட்டார்கள்.

''என்னிடம் எந்தத் தீர்மானமும் இல்லை. என்னைக் கேள்வி கேட்கிறேள். அதே கேள்வியை உங்களிடம் கேட்கிறேன்.''

''ஸ்வீடன் பெண்களைப் பற்றி உன் அபிப்ராயம் என்ன? அது வாழ்க்கையா? இல்லையா? அவர்கள் முட்டாள்களா? இல்லை நாமா? அது மலர்ச்சியா, அழிவா, அப்படி அவர்கள் வாழக் காரணம் தட்பவெட்ப சூழ்நிலையா? சமுதாய நிலைக்களனா?'' அடுத்த அறை



மணியில் அவரவர்கள் வேறு எதுவோ பேச, அந்தக் கேள்
விகள் தரையில் இறைத்த வேர்க்கடலைத் தோல்களாய்
மாறின. ஒரே ஒரு தோல் விஜயாவின் நெஞ்சில் சிக்கிக்
கொண்டது உறுத்தியது.

இரண்டு மணிக்கு வீழிநாதன் கிளம்பினான். மூன்று மணிக்கு விமானம் ஏறியிருப்பான். நான்கு மணிக்கு விமானம் ஹைதராபாத் தரை தொடும். நாலரை மணிக்கு ஃபோன் வரும்.

''வந்து சேர்ந்துட்டேன். ரூம் நம்பர் 203, வழக்கமான ஹோட்டல், வேறென்ன?''

''ஒண்ணுமில்லை.''

''ஏதாவது அவசியமானா ராத்திரி ஃபோன் பண்ணு.''

அந்தப் போனுக்குப் பிறகு டென்ஷன் குறையும்.
போன் வந்தது. விஜயாவின் டென்ஷன் குறைந்தது.
வீழிநாதன் நல்ல புருஷன். ஏனைய புருஷர்களோடு ஒப்
பிட்டுப் பார்க்கையில் உத்தம குணவான். அவ்வப்போது
தவறுகள் செய்வான். சுட்டிக் காட்ட திருத்திக் கொள்
வான். போன வருஷம் கிறிஸ்மஸ் பாட்டிக்குப் போய்
விட்டு வந்து, முழு குடிபோதையில் இரவு இரண்டு
மணிக்கு 'போலேரே பப்பி' உரக்கப்பாடினான். கட்டிலில்
குட்டிக் கரணம் போட்டான். 'கொங்கு தேர் வாழ்க்கை'
கவிதை சொல்லி தருமி மாதிரி நடித்தான். பிள்ளை அப்ப
னைப் பார்த்து வயிறு குலுங்கச் சிரித்தது. மறுநாள்
அப்பனும், பிள்ளையும் செம டோஸ் வாங்கினார்கள்.

''என்னிக்கோ ஒருநாள் தானேம்மா, ஏன் திட்டறே.'' கெஞ்சினான்.

''பக்கத்து வீட்ல உங்களுக்கு என்ன பேர் தெரியுமா? தருமி மாமா. நான் இனிமே மிஸஸ் தருமின்னு கையெழுத்துப் போடட்டுமா?'' எந்தப் பார்ட்டியிலும் இரண்டு பெக்குக்கு மேல் குடிப்பதில்லை என்றதும் சினம்

தணிந்தாள். கார் ஓட்டும்போது மற்றவர்கள் தவறுக்கு வீழிநாதன் எரிச்சலடைவான்.

"போடா, போயி லாரில வுழுந்து சாவு. ஏன்? என் கார்ல விழுந்து இடிக்கற. நீ அடிபட்டு கூழா போகணும். உன் மூஞ்சிய நான் பேப்பர்ல பார்க்கணும்." காரை நிறுத்தி சைக்கிள் ஓட்டுபவனைக் கத்துவான். அவள் சொல்லிச் சொல்லி அந்தக் கோபமும் குறைந்தது.

"இன்னா, கார்ல இடிச்சுட்டீங்களா? பரவால்ல நான் அப்படி ஓரமா நிறுத்தறேன். உங்க ஓட்டை சைக்கிளால டொம்மு டொம்முன்னு நாலு தடவை இடிங்க. உங்களுக்கும் சந்தோஷம்' எனக்கும் நிம்மதி." இப்பொழுதெல்லாம் அவன் கோபம் தமாஷாகத்தான் வருகிறது.

இதெல்லாம் விட ஒரு பெரிய தவறு வீழிநாதன் செய்தான். 'வினய் பப்ளிசிட்டீஸ்' என்று வேறு ஒரு விளம்பரக் கம்பெனி திறக்கப்பட்டது. திறந்து வைத்தது வீழிநாதன். திறக்க வைத்தது கல்யாணி. 'வினய் பப்ளிசிட்டீஸ்' உரிமையாளர் கல்யாணி திருமணம் செய்து கொள்ளவில்லை. திருமணம் செய்து கொள்வதான உத்தேசமும் இல்லை. வீழிநாதன் அவள் கம்பெனியை மட்டுமில்லை. அவளையும் திறந்தான். இரண்டு பேரும் தனித்தனியே பாம்பே போய் அங்கே ஒன்றாகி, டிராயிங் மெட்டீரியல்ஸ் வாங்கினார்கள். ஆர்டர் தேடினார்கள். பம்பாயிலிருந்து கல்யாணியை விசாரித்து வீழிநாதனுக்கு ஃபோன் வந்தது. விஜயா எடுத்து மொத்த விவரமும் கேட்க, சந்தேகம் வந்தது. சந்தேகம் சவேரா ஹோட்டலில் ஊர்ஜிதமாயிற்று. சல்யாணியின் டிரைவர்தான் காட்டிக் கொடுத்தான். கல்யாணியிடம் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போனாள். விஜயா, எம் புருஷனை மட்டும் எடுத்துண்டா எப்படி? இந்தப் புள்ளையையும் எடுத்துக்கோ. இவன் தேர்ட் ஸ்டாண்டர்ட் டி. ஏ. வில படிக்கிறான். காரம் சாப்பிடவே மாட்டான், அப்படிக் காரம் சாப்பிட்டா



நாலு நாள் கழிவான். லாங்க்வேஜ்ல கெட்டிக்காரன். கணக்கிலே வீக் தினம் கூடவே படிப்புக்கு உட்காரணும், ராத்திரிபக்கத்ல போட்டுக்கதை சொல்லணும். பதினோரு வயசில பூணூல் போடலாம்னுருக்கேன். பூணூல் போட்டுட்டு உன்கிட்டே அனுப்பட்டுமா. இல்லே போடாதயே அனுப்பட்டுமா? கௌத்தம் இதுதான் உன் புது அம்மா, இந்த அம்மாவை உனக்குப் புடிச்சிருக்கா" பிள்ளை பாதி புரிந்து விசும்பி அழுதது. கல்யாணி மன்னிப்புக் கேட்டாள். இனி இதுபோல் நடக்காது என்று உறுதி சொன்னாள்.

நாலு நாள் வீழிநாதன் பேசவில்லை. ஐந்தாம் நாள் இரவு அவளைக் கட்டிக் கொண்டான். ஒற்றை வார்த்தையாய், 'ஸாரி' என்றான். பதிலுக்கு அவளும் ஒரே ஒரு வார்த்தை சொன்னாள். 'போனாப் போகட்டும்' இது நடந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. போனவருடம் கல்யாணிக்கு அப்பல்லோவில் கர்ப்பப்பை கட்டி நீக்கும் ஆபரேஷன் நடந்தது. கட்டி மூன்று மாத வளர்ச்சியாய் இருந்தது. கொஞ்சம் சீரியஸான ஆபரேஷன் என்றார்கள். வீழிநாதன் தகவல் கேட்டுவிட்டு அன்று சாப்பிடவில்லை. மறுநாள் விஜயாவே அவனைத் தட்டிக்கொடுத்து ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போனாள்.

கல்யாணி அவன் வரவை எதிர்பார்க்கவில்லை போலிருக்கிறது. பூங்கொத்தோடு நுழைந்த வீழிநாதனின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். 'இப்போது எனக்குப் புரிகிறது, வீழிநாதன். திருமணம் அவசியம் என்று இந்த க்ஷணம் புரிகிறது' அழுதாள். வீழிநாதன் அவளை மெல்ல அணைத்து படுக்கையில் சாய்ந்தான். அவள் உடம்பு தேறி வெளியேறும் வரை உதவிகள் செய்தான். பிறகு விலகினான்.

"கல்யாணி செமகட்டை இல்ல. ஆஸ்பத்திரி ட்ரெஸ்ல கூட ஜிங்குன்னு இருக்கா, என்ன நான் பேசறது காதில விழறதா."

''வேணாம். அப்புறம் நான் எதாவது பேசுவேன்-உனக்கு கஷ்டமாயிடும்.''

''பேசுங்களேன்.'' ஊக்கப்படுத்தினான். சிலது பேசினான். பலது அவள் புரிந்து கொண்டாள்.

காதல் என்பதில் காமம் இருப்பினும், காமம் என்பதில் காதலே இல்லை. கல்யாணி, வீழிநாதனுக்குக் காமம். பண்டமாற்று வியாபாரம் அது தானாகவே உடைந்திருக்கும் விஜயா தன் காலின் கட்டை விரலால் உடைத்தா லேடீஸ் கிளப்பில் ரகசியமாய், இதை ஸ்நேகிதிகளிடம் சொன்னாள்.

''அந்த கல்யாணி ஓரளவுக்கு நல்லவள்னு நினைக்கறேன். சட்டுன்னு ஒதுங்கிட்டா. சிலதுங்க சொன்னதுக்காகவே ரேங்கும்.''

''அப்படியில்லை- இந்த வீழிநாதன் போனா, இன்னொரு சாமிநாதன். அதனால விட்ருப்பா.''

''ஆனா மறுபடியும் நீ ஆம்படையானைக் கூட்டிண்டு ஆஸ்பத்தி போனியே அதுதான் ஆச்சர்யம்.''

''பாவம். அவளும் பொம்மனாட்டி தானே.''

''பாவந்தான். அதுதான் சாக்குன்னு உன் ஆம்படையான் ஒட்டாதிருந்தானே.''

''யூட்ரசில் கட்டின்னா, ஆம்பளைக்கு ஒரு பயம். கன்னத்ல போட்டுண்டு ஓடியே போயிடும் நீ என்ன சொன்ன விஜயா?''

''இதப் போயி தாம்தூம்னு பெரிசு பண்ணாத. நீ பண்ணினது பெரிய தப்பு ஒண்ணும் இல்ல, ஆனா தயவு செய்து பொண்டாட்டிய மாத்தாதேங்கற மாதிரி ஒரு லெக்ச்சர் பண்ணினேன். என் பொண்டாட்டி இத்தனை நல்லவளான்னு எம் புருஷன் ஒதுங்கிட்டான்.''



''மறுபடியும் எவ பின்னாடியாவது புடிச்சுக்கினு போனா!'' தோழி சந்தேகம் கேட்டாள்.

''எங்க வேணா போ. ஒழுங்கா வீட்டுக்குத் திரும்பி வந்துரு. எமோஷனல்ல முட்டாத்தனமெல்லாம் பண்ணாதே. எனக்கொண்ணுமில்லை. புள்ளை அவஸ்தைப் படும். அது பாவம்னு சொல்லிருக்கேன்.''

''இப்படி இருக்க முடியுமாடீ.''

''போகாதேன்னு மடக்க முடியுமா?''

''ஏன் போறான். அதுதான் புரியலை எனக்கு?''

''திமிர். அதுக்குப் பேருதான் ஆம்பளை திமிர். ஆத்தோட தண்ணி போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கும்.''

''ச்சீ...இந்தப் பேச்சு தப்பு. புருஷனை நாய்ன்னு சொல்லக் கூடாது.''

''ஆம்பளைக்கு பொம்மனாட்டிய ஜெயிக்கறது ஒரு அச்சிவ்மெண்ட். யுத்தம் பண்ணி கோட்டையைப் பிடிக்கற அச்சீவ்மெண்ட். ஆம்பளை கெட்டிக்காரனாகவும் இருந்தா இந்த அச்சிவ்மெண்ட் பர்ஸண்டேஜ் கூடும்.''

''ஸ்வீடன் பொம்மனாட்டியெல்லாம் கெட்டிக்கார ஆளோ?''

''அஞ்சு வருஷத்துக்கொரு புருஷனை மாத்தறாளே, அந்த பொம்மனாட்டியெல்லாம் கெட்டிக்காரளோன்னு கேட்டேன்.''

''எனக்குத் தெரியலடியம்மா.'' தோழிகள் எழுந்தார்கள். அந்தக் கேள்வியும் தரையில் போட்ட வேர்க் கடலைத் தோலியாய் அவர்களுக்கு நடுவே கிடந்தது. வழக்கம் போல ஒரு தோல் விஜயாவின் மனதில் ஒட்டிக் கொண்டது. உறுத்தியது.

# 3

**வீ**ழிநாதனின் ஃபோன் வந்த அரைமணி நேரத்திற்குள் வளர்மதி, வீட்டிற்குள் வந்தாள். வளர்மதியின் அம்மா அரசாங்க பொது மருத்துவமனையில் ஆயாவாக இருக்கிறாள். அவளுக்கு மூன்று பெண்கள். ஒரு பையன். வளர்மதி மூன்றாவது பெண். வளர்மதிக்கு இரண்டு வயது மூத்ததாய் ஒரு பையன். நான்கைந்து வயது பெரியதாய் இரண்டு தமக்கைகள். இரண்டு தமக்கைகளுக்கும் கல்யாணமாகிவிட்டது. அதில் ஒருவளுக்கு காதல் கல்யாணம். காதல் கல்யாணம் செய்தவள் மற்றவளைவிடச் சிறப்பாக இருக்கிறாள் என்பது வளர்மதியின் அபிப்ராயம். வளர்மதிக்கு, 'அம்மா சொல்படி கல்யாணம் செய்து கொள்வதா?' அல்லது காதலித்துக் கடிமணம் செய்து கொள்வதா? என்று குழப்பம்.

வேலைக்கு ஆள் வேண்டும் என்று கேட்ட பொழுது வளர்மதி, வீட்டு வாசலில் புஸ்புஸ் என்று ஷாம்பு போட்ட தலையோடு வந்து நின்றாள்.

''எனக்கொண்ணும் வேலைக்குப் போகணுமின்னு கட்டாயம் இல்ல. என் செலவுக்கு அம்மாவை எதிர் பார்க்க வேண்டாம்னுதான் வேலைக்கு வரேன். நல்லபடியா நடத்தினா, நல்லபடியா வேலைக்கு வருவேன்'' நல்ல கண்டிஷன் போட்டாள்.

''நல்லபடியா வேலை செய்தா, நல்லபடியா நடத்தறோம்.'' பதிலுக்கு விஜயா பேச, புடைவையைச் செருகிக்கொண்டு உள்ளே வந்தாள். வளர்மதியின் வேலை சுத்தமான வேலை. சுறுசுறுப்பான வேலை. மெலிசாய்ப் பாட்டுப் பாடிக் கொண்டு செய்கிற சுகமான வேலை.

''என்னடீ பாத்ரூம்ல உட்கார்ந்து காபி குடிக்கற...''

''வேற எங்க உட்கார்ந்து குடிக்கறது?''



''இங்கே உட்கார்ந்து குடி.'' டைனிங் டேபிள் சேரை விஜயா இழுத்துப் போட்டாள்.

''வேலைக்காரங்க உட்காரலாமா அங்க?''

''உட்கார்ந்தா என்ன? பாத்ரூம்லேயா காபி குடிக்கறது?'' வளர்மதிக்கு விஜயாவைப் பிடித்து விட்டது.

''என்னம்மா பாதி சமையல்ல படுத்துட்டே?''

''கிறுகிறுன்னு வருதுடீ.''

''மிச்சத்த நான் முடிச்சிடட்டுமா?''

முடித்து மேடை துடைத்து சுத்தமாக்கியவளுக்குக் கூட ஐந்து ரூபாய் தர, வாங்க மறுத்து விட்டாள். 'எதுனா படம் போடு பார்த்துட்டுப் போறேன்.' ஆட்டுக்கார அலமேலு பாதிப்படம் பார்த்தாள்.

வீழிநாதன் வரவும் அணைத்துவிட்டு வீட்டுக்குப் போனாள்.

''வளர்மதி வேலைக்காரியா, இல்லை உனக்கு உடன் பிறந்தவளா?''

''இன்னும் பீரோவைத் திறந்து காசுதான் எடுக்கல. மத்தது எல்லாம் பண்றாள்னு நினைக்கறேன்.''

ஆனால், பீரோவை ஒழிக்கற பொழுது வளர்மதி உதவி வசதியாய் இருந்தது. வளர்மதியிடம் பத்து சவரன் நகை இருந்தது. ''கீழ் வீடு வேலை ஒத்துக்கறேன், மாசம் நூத்தம்பது ருபா பேசறேன். அந்த துட்ட அப்படியே போட்டு எனக்கு நல்ல பட்டுப்புடைவை வாங்கித் தரியா?'' ஆயிரத்து எழுநூறுக்கு பட்டுப்புடைவை எடுத்துத் தந்தபோது வளர்மதியைக் கையால் பிடிக்க முடியவில்லை. வளர்மதியின் நன்றி செய்கையாய் சொல்லாய் வெளிப்பட்டது. அவள் வாழ்க்கையும் அவளைச் சுற்றியுள்ளவர்கள் வாழ்க்கையும் கதையாக விஜயாவுக்குச்

சொல்லப்படும். அந்தக் கதை கிளப்புக்குப் போகாத பகல் வேளைகளில் கேட்கப்படும்.

''நேத்து ஒரே சண்டை.''

''எங்கடி?''

''எங்க வூட்லதான்.''

''என்னாச்சு?''

''எங்க பெரியக்காள வூட்ல கொண்டு வந்து விட்டுட்டான்.''

''யாரு?''

''அவ புருஷன்தான்.''

''ஏனாம்?''

''எங்கக்கா நடத்தை சரியில்லையாம்.''

''ஐயோ.'' பயமும், வியப்புமாய் விஜயா அவளை உடனே திரும்பிப் பார்த்தாள். மொத்தக் கதையையும் விரிவாய்க் கேட்க, மனசு உடனே ஆசைப்பட்டது. ஆனால் வேலைகள் அதிகமிருந்தன. இரவுச் சாப்பாடு தயாராக வேண்டும். பள்ளியிலிருந்து வரும் பிள்ளைக்கு பசிக்கு எதாவது தர வேண்டும். குரோம்பேட்டையிலிருக்கிற அம்மாவுக்கும், அடையாரிலிருக்கிற தம்பிக்கும் ஃபோன் செய்து புருஷன் வெளியூர் போனதைச் சொல்லி இரவு யாராவது துணைக்கு வரமுடியுமா என்று கேட்க வேண்டும். அம்மாவுக்கு டெலிஃபோன் செய்ய அரை மணி நேரமாவது பேச்சு ஓடும். இன்று வியாழக்கிழமை. பூஜை மாடம் சுத்தம் செய்ய வேண்டும். அதே சமயம் வளர்மதியினுடைய அக்காவின் கதையையும் கேட்க வேண்டும்.

''வளர்மதி ஒண்ணு பண்ணு. இப்ப பேசாதே. மடமடன்னு வேலையைக் கவனி, உனக்கு உடனே போகணும்னு இல்லியே? வேலை செஞ்சுக்கிட்டுபேசினா பேசின



மாதிரியே இல்ல. இது ரொம்ப சீரியஸ் மேட்டர்.'' கொஞ்சம் பரபரத்தாள்.

அரட்டைக்கு ஆசைப்படுகிறோமோ? புத்திக்குள்ளே ஒரு சிகப்பு விளக்கு மின்னி மின்னி எழுந்தது. அலட்சியம் செய்தாள்.

''ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு சோகம். இவ சோகத்தைக் காது கொடுத்துக் கேட்கப் போறேன். அவ்வளவுதான்...'' சமாதானப்படுத்திக் கொண்டாள் நீர் கலக்காமல் டம்ளரில் பால் ஊற்றிக் கெட்டியாய் காபி போட்டாள். நுரை பொங்க ஆற்றி வளர்மதியிடம் நீட்டினாள். 'பாவம், நல்ல காபியாவது வளர்மதி குடிக்கட்டும். வீழிநாதன் இல்லையே! பால் மிச்சப்படுமே' உள்ளே கணக்கும், கனிவும் ஒன்றாய், எழுந்தன. அந்தக் காபி, வளர்மதிக்கு புது சக்தியைக் கொடுத்தது. கீழ்மாடி தெலுங்கு பொம்பளையும் காபி கொடுக்கிறாள். துடைக்கிற துணியை நீரில் முக்கி ஒட்டப் பிழிந்தது போலிருக்கும். பழைய சோறு கொடுக்கக்கூட அந்தப் பொம்பளை யோசிக்கும். பழைய புடவையை கிழித்துதான் கொடுக்கும். விஜயா அம்மாவுக்கு கருணை மனசு. வஞ்சனையில்லாத மனசு. கூட ஒரு கைக்ளினிங் பௌடர் எடுத்துப் பாத்திரங்களை அரக்கித் தேய்த்தாள். பளபளக்க வைத்தாள். பட்டுப்போல் வீடு பெருக்கினாள். சின்ன கறை கூட இல்லாமல் ஈரத்துணியால் அழுத்தித் தேய்த்தாள். தானே டெட்டால் எடுத்து டைனிங் டேபிளை சுத்தம் செய்தாள். உதவிகள் பரஸ்பரமெனில் நன்றியும் பரஸ்பரம். சொல் நன்றியை விட செய்நன்றிக்கு மதிப்பதிகம்.

''எத்தனை நறுவிசு, இப்படி ஒரு வேலைக்காரி கிடைத்தது, லக்'' விஜயா நினைத்துக் கொண்டாள்.

'எத்தனை பிரியம். இப்படியொரு முதலாளியம்மா கிடைத்தது அதிர்ஷ்டம்' வளர்மதி நினைத்துக் கொண்டாள்.

ஐந்தே முக்கால் நிமிடத்தில் ப்ரெட் உப்புமா செய்து, குக்கரில் களைந்த அரிசியை வைத்து மூடி மணி பார்த்தாள். மணி ஐந்தரை. டைனிங்டேபிளில் பேப்பர் பரப்பி, கேரட்டும், கத்திரிக்காயும் நறுக்க உட்கார்ந்தாள்.

‘‘என்னம்மா காய் நறுக்க உட்கார்ந்துட்ட?’’

‘‘ராத்திரிக்கு எதாவது வேணுமே. எம்புள்ள வெறுஞ் சோறு திங்காதே.’’

‘‘ஐயாவ இன்னுங் காணும்.’’

‘‘வெளியூர். வரதுக்கு ஆறுநாள் ஆகும்.’’

‘‘உம்மேல ஐயா எப்போதாவதுசந்தேகப்பட்டிருக்காராம்மா?’’ தடேலென்று ஒரு கேள்வி டைனிங் டேபிளில் விழுந்தது.

‘‘என்னடீ, எப்படியிருக்கு உடம்பு? நாக்கை ஒட்ட நறுக்கிடுவேன்’’ விளையாட்டுக் கோபமாய் விஜயா கத்தியை நீட்ட, வளர்மதி அந்தக் கத்தியை வாங்கிக் கொண்டாள். நின்றபடி கேரட்டையும், கத்திரிக்காயையும் நறுக்கத் துவங்கினாள்.

‘‘எத்தினி கோபம் வருது உனக்கு? இப்பிடி ஒரு சொல்ல சொன்னா எந்தப் பொம்பளையால தாங்கிக்க முடியும். எங்கக்காவ தினம் கேட்டுத் தொந்தரவு பண்றான் அவ புருஷன். தொடப்பத்தால அடிச்சிருக்கான், தொடையெல்லாம் பட்டை பட்டையா. அவனைக் வெட்டிக் கொல்லணும் போல ஆத்திரம் வருது.’’

‘‘என்ன நடந்தது சொல்.’’

‘‘ஒரு மாசமாகவே தகராறுதான். எங்கக்கா டெய்லரிங் கம்பெனில வேலை செய்யுது. கவுன், ஷர்ட்டு எல்லாம் நல்லா தைக்கும். அங்க ஆம்பள டைலர், பொம்பள டைலர் எல்லாம் உண்டு. நூறு நூத்தம்பதுபேர் வேலை செய்யற கம்பெனி. அங்க வேலை செய்யறவரோட பேசாதன்னா முடியுமா? ஒரே பஸ்ல போயி, ஒரே பஸ்ல



வரவேண்டியிருக்கு. அங்க பார்த்தசாரதின்னு ஒரு பையன். எங்கக்காவை விட வயசில சின்னவன். அந்தப் பையனுக்கும் எங்கக்காவுக்கும் தொடர்பு இருக்குன்னு அத்தானுக்குச் சந்தேகம்.’’

‘‘தொடர்பு இருக்கா?’’

‘‘இல்லை’’

‘‘அப்பறம் என்ன சந்தேகம்?’’

‘‘லட்டர் வருதாமே?’’

‘‘என்னது?’’ விஜயா முகம் சுருக்கிக் கேட்டாள்.

‘‘மொட்டை கடிதாசி’’

‘‘நடத்தை கெட்டவன்னா?’’

‘‘ஆமாம். பார்த்தசாரதிக்கும், மணிமேகலைக்கும் கள்ளத் தொடர்பு இருக்கிறது. கவனித்து சரி செய்யவும். கடவுள் அருளால் எல்லாம் நலமாக முடியும் கவலைப் படாதே. பதினெட்டு லட்டர். நான்கூட ஒண்ணு படிச்சேன்.’’

‘‘எந்த எழவெடுத்தவன்டி எழுதினது?’’

‘‘எழவெடுத்தவன் இல்ல, எழவெடுத்தவள்.’’

‘‘பொம்பளையா?’’

‘‘எங்கக்கா அப்படித்தான் சொல்லுது, அந்தக் கம்பெனில ஒரு சாமியாடித் தேவிடியா முண்டை இருக்காளாம். வாரம் ரெண்டு ரூபா பூஜைக்கு கேக்கறாளாம். எங்கக்கா தரமாட்டேன்னுடுச்சாம், தரவங்களையும் குடுக்காதேன்னு தடுத்துச்சாம். அந்தப் பொம்பளைதான் செய்திருக்கும்னு எங்கக்கா சொல்லுது.’’

‘‘என்னடீ இது? பீடையே போச்சுன்னு ரெண்டு ரூபா குடுக்காத இத்தனை பெரிய கஷ்டத்த வாங்கிண்டு வந்திருக்க.’’

''ஏன் குடுக்கணும்! அந்தக் குரங்கு வேலையே செய்யாதாம். பத்து சட்டை தைக்கற இடத்ல நாலு தான் தைக்குமாம். நடுவேலைல எழுந்து கத்துமாம். யாரோ தீட்டுப்பட்ட பொம்பளை மேலேபட்டுட்டான்னு கத்துமாம்.''

''ஏன்? அவ தீட்டுப்பட மாட்டாளாம்மா, பெரிசாகாத சின்னப் பொண்ணாவே, இருக்காளாம்மா.''

''அந்த தீட்டில்லை. வீட்ல ஆம்பளையோடருந்துட்டு தலைக்குக் குளிக்காத கம்பெனிக்கு வந்தவ, அவமேலே பட்டுட்டா எரியுது, எரியுதுன்னு கத்துவாளாம்.''

''என்ன கருமம்டி இது? இவ ஏன் வேலைக்கு வரா?''

''அதைத்தான் எங்கக்கா கேட்குது. அதனாலதான் கோபம். 'உன்னை அழிக்காத விடமாட்டேன்'ன்னு ஊசிலால கையைக் கீறி, சுவத்ல அடிச்சு சத்தியம் பண்ணினாளாம். அக்காவுக்கு கோபம் வந்திடுச்சாம். அந்த ரத்தம் படிஞ்ச இடத்ல தண்ணி ஊத்தி சுவத்தை அசிங்கம் பண்ணாதேன்னு சொல்லிடுச்சாம். அக்காவுக்கு சப்போர்ட்டா பார்த்தசாரதி,இன்னும் சிலவங்கள்ளாம்பேசினாங்களாம். கடவுள்னா அன்பு. அது சாமியாடாது, சாபம் குடுக்காது. அகங்காரம் பிடிச்ச பேய்தான் ஆடும். உனக்கு பேய்பிடிச்சிருக்குன்னு அந்த பொம்பளைகிட்ட சொல்லிட்டானாம் பார்த்தசாரதி. அத்தோட நிக்கல, துண்டு வெள்ளை துணில, 'பெண் பேய்'ன்னு எழுதி அவ ரவிக்கையில அவளுக்குத் தெரியாம ஒட்டிட்டாங்களாம். அது வெவரம் தெரியாம, எழுதின ஜாக்கெட்டோடவே பஸ்-ஸ்டாப் வந்து பஸ்ஸில ஏறி, கண்டக்டர் அந்த பொம்பளைகிட்ட உன் காலைக் காலைக் காட்டு அப்பதான் டிக்கட் தருவேன்னு சொல்லிட்டானாம். அதுக்கு ஒண்ணும் புரியல, கூட பஸ்ல போறவரு, இவங்க பல்லவன் அடிச்சுக் கொன்ன பொம்பளையாதான் இருக்கணும். கண்டக்டரையும். டிரைவரையும் பழி வாங்கறதுக்கு வந்திருக்காங்க. அவங்க பழி வாங்கட்டும். நான் அடுத்த பஸ்ல வரேன்னுட்டு இறங்கிப் போயிட்டா



னாம். ஒரே சிரிப்பு, கேலி, அந்த பொம்பளைக்கு விஷயம் தெரிஞ்சு, வாய்க்கு வந்தபடி கத்தி, பஸ்ஸிலேயே சாமியாடி அந்தப் பொம்பளைய கைத்தாங்கலா அடுத்த ஸ்டாப்லே இறக்கி விட்டுட்டாங்களாம். அந்தப் பார்த்தசாரதி டிரைவர் சீட்டுக்கிட்ட நின்னு சத்தம் போடாத எல்லாத்தையும் கவனிச்சு, மறுநாள் கம்பெனில வந்து சொல்லிட்டான். அங்கேயும் கேலி, சிரிப்பு, கும்மாளம்.''

கதை கேட்கும்போது சிரிப்பாகவும் வந்தது. பாவமாகவும் இருந்தது. இரண்டு ரூபாய் காசுக்கு சாமியாடக் காரணம் வறுமையாகவும் இருக்கலாம். மனசு வெறுமையாகவும் இருக்கலாம். இவளை இத்தனை கேலி செய்திருக்க வேண்டுமா? புறக்கணித்திருக்கலாமே. பேய் என்கிற மாதிரி எட்டியிருக்க வேண்டுமா? போனால் போகிறது என்று விட்டிருக்கலாமே. ஆனால், அத்துமீறல் ஒரு தொற்று வியாதி. ஒருவர் மீற, அடுத்தவர் அதிகம் மீறச் செய்யும். ஆத்திரம் ஏற்படுவது சகஜம். இங்கே அசிங்கப்பட்டது மனிதர்கள் மட்டுமல்ல. கடவுள் என்கிற விஷயமும்கூட. ஆனால் இவ்வளவும் யோசிக்க இங்க யாருக்குத் தெரிகிறது? விஜயா நொந்து கொண்டாள்.

''சரி, இப்ப என்ன சொல்றா உங்கக்கா!''

''இந்தப் புருஷனே வேணாம்னு தாலிய அறுத்துப் போட்டுட்டா. அதுதான் எங்கம்மாவுக்கு கோபம். அவ வேற ரெண்டு அடி போட்டா, ஒரே ரகளை போயேன்.''

''தாலியறுக்காத என்னடி பண்றது? வெவரமில்லாத சந்தேகப்படறவனோட எப்படி குடித்தனம் பண்ண முடியும்?''

''நீ குடித்தனம் பண்ணு, பண்ணாதே, வெளக்கு வைக்கற நேரத்ல தாலிக்கயிறு அவுக்கறியே. நீ பொம்பளையான்னு கத்தறா எங்கம்மா.''

''அவளுக்கு ஆத்திரம். நாம நல்லபடியா இருக்கச் சொல்லவே புருஷன் சந்தேகப்படறானேன்னு கோபம்.''

''அப்படியில்லம்மா.'' வளர்மதி கொஞ்சம் தழதழத்த குரலில் கூறிவிட்டு, நின்றபடியே தொடர்ந்து காய் நறுக்கினாள்.

''அப்படியில்லைன்னா என்ன சொல்ற நீ?''

''அந்தப் பார்த்தசாரதி எங்க வீட்டுக்கு வந்தான். எங்க அக்கா புருஷன் விட்டுட்டுப் போன அரைமணி நேரத்ல வந்து நிக்கறான். வந்து 'என்னால தானே உங்களுக்கு இவ்வளவு கஷ்டம்' அப்படின்னு அழறான். அவனைப் பார்த்துட்டு எங்கக்காவும் அழுவுது. நான் டாக்டர் வூட்டுக்குப் போறேன்னு எங்ககிட்ட சொல்லிட்டு அக்கா அவன் கூட பீச்சில உட்கார்ந்து பேசிட்டு வருது. அது திரும்பி வரும்போது ராத்திரி என்ன மணி தெரியுமா?''

''என்ன மணி?''

''ராத்திரி பத்துமணி. ஆம்படையான் பொண்டாட்டி மாதிரி உரசி நடந்து வர்றாங்க... எங்கம்மாவுக்கு கடுங் கோபம். உன்னைய பாம்புன்னு அடிக்கறதா, பழுதைன்னு மிதிக்கறதா ஒண்ணும் தெரியலையே கடவுளேன்னு அழுவறா அவ. எங்க அண்ணனும், அண்ணன் ஸ்நேகிதகாரனும் பார்த்தசாரதிய தேடிக்குனு போனாங்க. இது வரைக்கும் வரல.''

''என்னடீ இது? இவ்வளவு பெரிய கதை சொல்ற?'' விஜயாவுக்கும் ஒன்றும் புரியவில்லை. யாரை ஆதரிப்பது யாரை எதிர்ப்பது தெரியவில்லை.

''இதுல மாட்டிக்கினு சாகறது நான்தான்'' வளர்மதியின் விழி ஓரங்களில் நீர் துளித்தன.

''ஏன் உனக்கென்ன இதனால...?''

''உன்கிட்ட சிலது நான் சொல்லவே இல்ல.''



''என்னது... சொல்லவேயில்லை?''

''சொல்லணும் சொல்லணும்னு நினைப்பேன். நீ எதுனா நினைச்சுக்குவியோன்னு ஒரு பயம்.''

''கடங்காரி நீ யாரையாவது லவ் பண்ணித் தொலையறியா?''

ஒன்றும் ஒன்றும் இரண்டு. வாழை சரியக் காரணம் குலை. வளர்மதி பேசவில்லை. நறுக்கின காயைப் பாத்திரத்தில் போட்டு சமையலறையில் வைத்துவிட்டு வந்தாள். மேஜை சுத்தம் செய்தாள். விஜயாவின் பிள்ளை பள்ளிக்கூடத்திலிருந்து துள்ளிக் கொண்டு வந்தது. 'அம்மா பேய்ப் பசி' என்று கத்தியது. மணல் ஒட்டிய ஷூக்களை, மூலைக்கொன்றாய் வீசியது. புத்தகப் பையை நடுக்கூடத்தில் போட்டது.

''கொஞ்சம் இருடி. இவன் இருக்கும்போது பேசாதே'' விஜயா கட்டளையிட்டுவிட்டு பிள்ளையைக் கவனிக்கத் துவங்கினாள்.

''சாப்பிட்டு சமர்த்தா விளையாடப்போ.'' தானாகச் சொன்னாள். பிள்ளைக்கு ஆச்சர்யமாக இருந்தது.

''என் ஹோம் ஒர்க் பத்தி கேக்கவே இல்லியே நீ?''

''அப்புறம் கேக்கறேன், இப்ப எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு.''

''அப்பா ஊருக்கு போயாச்சா?''

''போயாச்சு.''

''எப்ப வருவா?''

''ஒரு வாரம் ஆகும்.''

''போர் இல்லம்மா, அப்பாயில்லாத?''

''என்ன போர்? மாசத்துக்கு நாலு தரம் ஊர் போறவர் தானே? நீ போய் விளையாடு...'' பிள்ளைக்கு உடை மாற்றி செருப்பு போட கட்டாப்படுத்தி வெளியே அனுப்பினாள்.

''அம்மா நான் ஒரு ஃபோன் பண்ணிக்கட்டுமா?''

''யாருக்கு வளர்மதி?''

''எங்க வூட்டுக்கு எதிர்க்க ஜெயலட்சுமி ஸ்டோருக்கு அங்க வரதுக்கு லேட்டாகும்னு சொல்லிடறேன். இல்லை யின்னா என்னை பத்தியும் தேவையில்லாத கவலைப்படு வாங்க.''

''அது சரி, போய் என்ன வேலை உனக்கு.''

''ஒரு வேலையுமில்ல. உட்கார்ந்து ரேடியோ கேட்பேன்.''

''அதை இங்க கேக்கறது. இன்னிக்கு என் கூடத் தங்கிடேன்.'' வளர்மதி தயங்கினாள். பிறகு சரியென் றாள். வீழிநாதன் இருந்தால் விஜயா சொல்லவும் மாட் டாள். வளர்மதி தங்கவும் மாட்டாள். வளர்மதி உதவி யோடு சமையல் முடிக்க அரைமணி நேரம்தான் ஆயிற்று. சமையலறை சூட்டில் முதுகெல்லாம் பிசுபிசுத்தது.

''இருடி குளிச்சிட்டு வரேன்.'' ஜில்லென்று குளித்து விட்டு வர ஒரு காதல் கதை கேட்கற சந்தோஷம் அதி கரித்தது.

''ரெண்டு மூணு வாரமாவே உன்னை கவனிச்சுண்டு வரேன். வளர்மதிக்கு திடீர்ன்னு அழகு காட்டறதே. வயசா மனசான்னு யோசனை. இப்பதான் காரணம் புரியுது.'' டர்க்கி டவல் சுற்றியிருந்த உடம்பை அகல நைட்டிக்குள் நுழைத்தபடி பேசினாள். தலையை உதறி துவட்டினாள். நைட்டிக்குள் கைவிட்டு டவலை அவிழ்த் தாள். கீழே கிடந்த டவலை எடுத்து வளர்மதி, விஜயா வின் தலைமுடியைத் துவட்ட முதலாளியம்மா, வேலைக் காரி வேற்றுமை மறைந்து அங்கே ஒரு ஸ்நேகம் பொங் கிற்று.

''அந்தக் கடன்காரன் பேரு என்ன?''

''பார்த்தசாரதி.''



''ச்சீ, நான் அவனை கேக்கலடி. நீ லவ் பண்ற ஆள் பேறென்ன?''

''அதாம்மா, பார்த்தசாரதி.''

''என்னடி சொல்ற?'' விஜயா தன் முடியைத் தட்டிப் பறித்துக்கொண்டு திரும்பினாள்.

''நீ அவனையா லவ் பண்ற?''

வளர்மதி பேசாதிருந்தாள்.

''அவன் உன்னை லவ் பண்றானா?'' கொஞ்சம் கூச்சலாய்க் கேட்டாள்.

''தெரியலையே.'' வளர்மதியின் கண் மருளல் பாவ மாய் இருந்தது.

''சனியனே! முழுக்க சொல்லித் தொலை. மொத்த வாழ்க்கையையும் சாக்கடை ஆக்கிக்காதே. சொல்லித் தொலை.'' ஒரு உரிமையோடு விஜயா கத்தினாள்.

''எங்கக்காதான் சொல்லிச்சு.''

''என்ன சொல்லிச்சு?''

''எங்க கம்பெனில பார்த்தசாரதின்னு ஒரு பையன் இருக்கான். ரொம்ப நல்ல மாதிரி. நம்ம ஜாதிதான். அவங்க குடும்ப விபரமெல்லாம் எனக்குத் தெரியும். உன் ராசியும், அவன் ராசியும் சரியாப் பொருந்துது. உனக்கு அவனைக் கட்டி வைக்கலாம்னு பார்க்கறேன்.''

''எப்ப சொல்லுச்சு?''

''ஆறு மாசம் இருக்கும்.''

''உன்கிட்டே மட்டும் சொன்னாளா? உங்கம்மா கிட்டேயும் சொன்னாளா?''

''வூட்ல எல்லாரும் இருக்கறபோதுதான் சொல் லிச்சு...''

''அப்புறம்...?''

''பார்த்தசாரதி உன்னைப் பார்க்கணும்னு ஆசைப் படறான். பொண்ணு பார்க்கற மாதிரியில்லாத நான் சும்மா இட்டாறான். ரெண்டு பேரும் பார்த்துக்கோங் கன்னு சொல்லிச்சு. எங்கம்மா அதெல்லாம் வேணாம். தப்புன்னாங்க. எடுத்த உடனேயே அஸ்து போடறியே. எந்தக் காலத்துல நீ உன் கடைசிப் பொண்ண கட்டிக் கொடுப்ப. உன் கை கால் ஒழுங்காருக்கச் சொல்லவே உன் பொண்ண கட்டிக் கொடுக்க வேணாம்னு கத்தல். கல் யாணத்துக்கு மறுத்து சொல்லல். பையன் தனியா வந்து பொண்ணு பார்க்கறது தப்புன்னுட்டாங்க அம்மா.''

''உடன் பொறந்தாளாச்சே என்னால ஆனத செய்வ மேன்னு பாக்கறேன். இதைவிட நல்ல மாப்பிள்ளை உனக்கு சத்தியமாக் கிடைக்காதுன்னு சொல்லிச்சு அக்கா.''

''அம்மா ஒத்துக்கலை. என்ன மட்டும் ரகசியமா கம்பெனிக்கு வரச் சொல்லுச்சு. போன புள்ளையார் சதுர்த்தியன்னிக்கு உன்கிட்ட நான் அரை நாள் லீவு கேக்கல அன்னிக்குத்தான்... வீட்ல வேலைக்குப் போறேன்னு சொல்லிவிட்டு நான் நேர கம்பெனிக்குப் போயிட்டேன். பார்த்தசாரதியைக் கூட்டிக்கினு வந்து காமிச்சிது அக்கா. ஒன் அவர் பர்மிஷன் போட்டுட்டு ரெண்டு பேரும் கிளம்பினாங்க, பீச் ரோடில ஒரு ஹோட்டல் இல்ல. அங்க போயி சமோசா, டீ சாப்பிட் டோம். எனக்கும் அக்காளுக்கும் பார்த்தசாரதி மல்லிப்பூ வாங்கிக் கொடுத்தது. எனக்கு ஒரே வெட்கம். வெச்சுக்கோ வெச்சுக்கோன்னு சொல்லுச்சு எங்கக்கா. அது கையால பூ வாங்கி வெச்சுக்கிட்டேன்.'' குரலில் துக்கம் குழைய வளர்மதி பேசுவது பார்த்து விஜயா நெகிழ்ந்தாள். இந்த தேசத்துப் பெண்ணுக்கு ஒரு முழம் பூ எவ்வளவு பெரிய விஷயம். எத்தனை உயர்வான காதல் சின்னம். வளர்மதியின் குழைவு விஜயாவுக்குப் புரிந்தது.

''அப்புறம்....?''



நிஜமாவே அந்தக் கதையில் அவளுக்கு அக்கறை ஏற்பட்டது.

''வளர்மதி பேப்பர்லாம் படிக்குமான்னு கேட்டாரு. தந்தி பேப்பர் படிப்பியான்னு கேட்டாரு. தேவி, ராணி, படிப்பேன்னு சொன்னேன். குமுதம், கல்கியெல்லாம்கூடப் படிக்கணும். அதில் நல்ல விஷயங்கள்ளாம் வருதுன்னு சொன்னாரு. சரின்னேன். ஒரு கவிதைப் பொஸ்தகம் கொடுத்தாரு. அதில பதினாறு பேர் கவிதை எழுதியிருந் தாங்க. அதில் அவர் கவிதையும் ஃபோட்டோவும் போட்டிருந்தது. என் பேர் எழுதி கையெழுத்துப் போட் டுக் கொடுத்தாரு. எனக்கு ஒரே பயம். எங்க வச்சுக்கற துன்னு தெரியல. எங்கம்மா பார்த்தா கொன்னுடும். இடுப்புல சொருகி நம்ம வூட்ல கொண்டாந்து ஒளிச்சு வச்சுட்டேன்.''

''என் வீட்டுலேயா... எங்கடி இருக்கு?''

''இப்ப தரமாட்டேன். அப்பால எடுத்துக் காட்டறேன்.''

''என் வீட்ல எனக்குத் தெரியாத ஒரு பொருளா, உன்னை உதைக்கணும்.''

''உதை வாங்கிக்கறேன். எனக்கு ஒரு வழி சொல் லிட்டு உதை.''

''இப்ப என்ன சிக்கல்?''

''எல்லாம் சிக்கல். சிக்கலான சிக்கல்.''

''அந்த பார்த்தசாரதி உன்னை லவ் பண்றானா? இல்லையா?''

''தெரியலையே.''

''என்னடி பேசற? வாய் வார்த்தையா கேக்க வேண் டியதுதானே.''

''காணும் பொங்கல் அன்னிக்கு சினிமா போனோம். நானு, அக்கா, பார்த்தசாரதி மூணு பேரும் போனோம். இண்டர்வல் வரைக்கும் அக்கா பக்கத்ல ஒக்கார்ந்திருச்சு பார்த்தசாரதி. இண்ட்ரவலுக்கு வெளிய போயிட்டுவந்து என் பக்கத்ல உட்கார்ந்துக்கிச்சு. படம் ஆரம்பிச்சவுடனே கையப் பிடிச்சுக்கிடுச்சு, நான் எடுத்துக்கிட்டேன். மேல சாய்ஞ்சியது, நகர்ந்துக்கிட்டேன். நான் ஒண்ணும் உன்னைக் கற்பழிச்சிறமாட்டேன். கவலைப்படாதேன்னு சொல்லுச்சு. நீங்க கையத் தொட்டாலும் கற்பு போன மாதிரி தானேன்னு சொன்னேன். நான் தானே கட்டிக்கப் போறேன்னுச்சு. கட்டிக்கிட்ட பிறகு தள்ள மாட்டேன்னு சொன்னேன். அதுக்கு முன்னாடி தொடவே கூடாதான்னு கேட்டுச்சு. கூடாதுன்னுட்டேன் தொடலை. வெளியே வந்து திட்டுமோன்னு நினைச்சேன். திட்டலை, வளர்மதிய எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இன்னும் ஒரு மாசத்ல எங்கப்பாம்மாவை கூட்டிக்கிட்டு வந்து பொண்ணு கேக்கறேன். கொஞ்சம் காசு சேர்க்கணும். கம்பெனி ஆளுங்களக் கூப்பிடணும்மனா பத்தாயிரமாவது வேணும். இனிமே நாள் தவறாது ஓவர் டைம் செய்யப் போறேன். ஆறுமாசம் கழிச்சு கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொல்லுச்சு. நான் அழுதுட்டேன்.''

''ஏண்டி?''

''என்னமோ அழுகை வந்தது. அழுதுட்டேன்.''

''என் ராஜாத்தி.'' வளர்மதியின் கன்னம் வழித்து விஜயா நெட்டி முறித்தாள். நல்ல ஆண்மகனின் உயர்வான தன்மை கண்ட எந்தப் பெண்ணுக்கும் அழுகை தான் வரும். இச்செய்கையைச் சொல்லக்கேட்ட விஜயாவுக்கும் கண்கள் கலங்கின. அந்தப் பார்த்தசாரதி எப்படியிருப்பான் என்று கற்பனை ஓடிற்று.

# 4

வெளியே அந்தி வானம் மயங்கியது. இருட்டியது. வீழிநாதனைக் கேட்டு ஃபோன்கள் வந்தன. வழக்கமாய் வரும் பூக்காரி மூன்று முழம் அடர்த்தி மல்லி கொடுத்து விட்டுப் போனாள். வாசல் கதவை அகலத் திறந்து, விஜயா சுவாமி விளக்கேற்றினாள். அந்த அடுக்கு மாடியிலுள்ள எல்லாக் குழந்தைகளும் நடுவேயிருந்த பெரிய முற்றத்தில் கௌதம புத்தர் நாடகம் போட்டார்கள். பத்தாம் கிளாஸ் படிக்கிற சோடாப்பாட்டில் கண்ணாடிப் பெண் டைரக்ட் செய்தாள். விஜயாவின் பிள்ளை கௌத்தம், புத்தருக்கு அண்ணன் வேடம் போட்டான். மூங்கில் வில்லும், துடைப்பக்குச்சி அம்புமாய்தெரிந்தான். எப்போது பார்த்தாலும் அம்பு விட்டுக் கொண்டிருந்தான். சித்தார்த்தன், புத்தராய் மாறிய பிறகும் இடைவிடாது கொலைத் தொழில் செய்தான். புத்தருடைய நெஞ்சில், டைரக்டர் தொண்டையில், பார்வையாளர் கொண்டையில், பக்கத்து வீட்டுப் பூனையில் அம்பால் அடித்தான். 'புத்தருடைய தம்பி இப்படிப் பண்ணலாமா?' என்று கேட்டதற்கு நான்தான் ராவணன் என்றான். விஜயா அவனை வில்லோடு தரதரவென்று இழுத்து வந்து முழு தென்னந்துடப்பத்தை அவன் அருகே போட்டு, 'என்னையும் வளர்மதியையும் தவிர யார வேணாலும் கொல்லு' என்றாள். சோபா, தலையணை, சாமி படம், மகாத்மா காந்தி, க்யாஸ் அடுப்பு, கரப்பான் பூச்சி, சுவர்ப் பல்லி என்று அம்பு பறந்தது. வளர்மதி பெருக்கிக் கொள்வாள் என்ற தைரியத்தில் விஜயா கண்டு கொள்ளவில்லை. மேலும் இந்த ராட்சஸப் பிள்ளையின் போரைத் தடுத்தால் காதல் கதை கெட்டுப் போகும் துடப்பக்குச்சியால் மூஞ்சியில் அடிக்காதவரை உத்தமம்.

''அப்புறம், சொல்லுடீ, நீ பேசினத நினைச்சா வயித்தக் கலக்குது,' சொல்லு.'' விஜயாவுக்கு அவள் நிலையே ரெண்டும் கெட்டவளாய்த் தோன்றியது.

''காணும் பொங்கலன்னைக்கு படம் போனதோட சரி, அப்புறம் பார்க்கலையா?''

''பார்த்தேனே...''

''அக்காவோடயா?''

''இல்லை. தனியாத்தான் பார்த்தேன்.''

''கஷ்டகாலம். ஒரு வார்த்தை எங்கிட்ட கேட்டிருக்கக் கூடாதா? எங்க பார்த்தே சொல்லு.''

''ராஜீவ் காந்தி, பீச்ல பேசின அன்னிக்குப் பார்த் தேன்.''

''உனக்கென்ன அங்க வேலை?''

''சும்மா கூட்டம் பார்க்கலாமேன்னு போனேன். அவரும் வந்திருந்தாரு...''

''முன்னாலேயே ப்ளான் போட்டீங்களா?''

''நான் இங்க வேலைக்கு வரும்போது தெரு முனைல நின்னுக்கிட்டிருந்தார். சாயங்காலம் பீச்சுக்குப் போகலா மான்னாரு. சரின்னேன். அம்மாவுக்கு நைட்டூட்டி. அண்ணன் வீட்ல இல்லை. நான் பூட்டிட்டு கிளம்பிட் டேன். அதே ஹோட்டல் போனோம். ஆனா வேற இடம்.''

''வேற இடம்னா?''

''ஜோடி ஜோடியா சாப்பிடற இடம். சின்ன சின்ன ரூமா இருக்கும்?''

''ரூமா?''

''ஆள் உட்கார்ந்தா தெரியும். ஆனா மறைப்பாவும் இருக்கும்.''

''அங்க போயி என்ன பேசினீங்க...''



''ஜாஸ்தி பேசலை. முட்டை பிரியாணி சாப்பிட் டோம். பித்தளை அம்மன் விளக்கும், சந்தன சோப்பும், மூஞ்சிக்குப் போடற லோஷனும், ஒட்டற பொட்டும் கொடுத்தாரு.''

''இதென்னடி இது?''

''வெறும்ன கொடுக்கல. வெத்தலை, பாக்கு மஞ்ச ளோட கொடுத்தாரு. எனக்கு வாங்கவும் முடியலை. மஞ்சள் கொடுக்கறபோது எப்படி வேண்டாம்னு சொல்றது?''

''சரியான கில்லாடி மனுஷன்னு நினைக்கறேன். அப்புறம்...''

''கல்யாணத்துக்கு முன்னாடியே ஆம்பளையும், பொம் பளையும் புரிஞ்சிக்கறது நல்லதுன்னாரு. சண்டையில் லாத குடித்தனம்தான் நல்ல குடித்தனம்னாரு. தனிக் குடித்தனம் வைப்பீங்களா? உங்க அம்மாவோட இருக் கணுமான்னு கேட்டேன்.''

''அடி சக்கை...''

''உன் இஷ்டம் எதுவோ அதுதான் என் இஷ்டம் னாரு.''

''நீ என்ன சொன்னே...?''

''எனக்கு எது கஷ்டமில்லியோ. அதுபடியே செய் யுங்கன்னேன்.''

''தனிக்குடித்தனம்தான்னு சொல்லிட்டாரு, நீ வேலைக்குப் போக வேணாம். வீட்டோட இரு. வீட்டோட ஒக்காந்து செய்யற வேலையா நான் உனக்குச் சொல்லித் தரேன்னாரு.''

''என்ன வேலை...?''

''மெஷின் எம்பிராய்டரி. வாடகைக்கு மெஷின் வாங்கி ஆர்டர் எடுத்து செய்யறது. எனக்கு ரொம்ப சந் தோஷமாயிடுச்சு. எனக்கு பதினைஞ்சு கர்ச்சீஃப் கொடுத்

தாரு. எல்லாத்திலேயும் எம்ப்ராய்டரி போட்டிருந்துச்சு. அதிலே ஒண்ணு மட்டும் முத்தம் கொடுக்கச் சொல்லி எடுத்துக்கிட்டாரு.''

''முத்தமா?''

''கர்ச்சீஃப்ல முத்தம் கொடுத்தேன். அதை வாங்கி பாக்கெட்ல வச்சுக்கிட்டாரு.''

''ஒரே தமிழ் சினிமா ஸ்டைலா இருக்கேடி.''

''ஸ்டைல்தான். ஆள்கூட நீட்டா நம்ம ஐயா மாதிரி ட்ரெஸ் போட்டிருப்பாரு.''

''அப்புறம்...?''

''அடுத்த வாரம் பார்த்தோம், ஒரே பாட்டு. நிறைய சினிமாப் பாட்டு பாடினாரு. நிறைய முத்தம் கொடுத் தாரு.''

''கர்ச்சீஃப்பிலேயா?''

''இல்லை. உதட்டுல, முகத்துல, நான் கேக்க றேன்னு தப்பா நினைக்காதேம்மா. உனக்கு உங்கய்யா முத்தம் கொடுத்தா, உனக்கு எப்படியிருக்கும்?''

''அள்ளிக்கும்.''

''எனக்கும் அள்ளிக்கிச்சு போயேன். கையத் தொடா தேன்னு முதல்ல சொன்னவ, எங்க தொட்டாலும் சிரிச் சேன். சந்தோஷப்பட்டேன்.''

''எங்கடீ தொட்டான்?''

சட்டென்று வளர்மதி, விஜயாவின் மடியில் படுத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள். விஜயா அதிர்ந்து போய் அவளை இறுக்கிக் கொண்டாள். வளர்மதியின் முதுகு சுட்டது. தணலை ஊதி தழலாக்கியிருக்கிறான். தழல் உடலெல்லாம் பரவி தகிக்கிறது. உச்சி வெயிலில், உயரப் பாறையில், உருட்டி வைத்த வெண்ணெய் போல் என் உயிர்க் காமமானது உருகி வீணே வழிய, அதைப்



பார்த்துக் கொண்டிருக்கும் கையும், காலுமில்லாத முடவன் நானே, என்று கல்லூரியில் படித்த பழந்தமிழ்க் கவிதை மனசுள் ஓடிற்று.

''ச்சீய்... என்ன அழுகை? கண்ணைத் துடை. நான் இருக்கேன். வளர்மதி கவலைப்படாதே.'' வளர்மதி தாழ்ந்த குரலில் மீதியைச் சொன்னாள். காதோரமும், கழுத்து வரையும், தோளின் குழிகளும், மார் காம்பும், முதுகின் எலும்பும், இடையின் வளைவும், ஆடுகால் திரட்சியும், உள்ளங்கால் மென்மையும் தீண்டப்பட்டிருக் கின்றன.

தலைவியோடு காதல் செய்துகொண்டிருந்த தலைவன் தலைவியின் செவிலித்தாய் ஒருத்தியைப் பார்த்து தோப்பை விட்டு ஓடிப்போனான். ஆடை குலைந்து கிடந்த தலைவியைப்பார்த்து செவிலித்தாய் கவலையோடு கேட்டாள். உன் கற்பு உன்னிடம் உண்டா? இல்லையா?

அதற்குத் தலைவி தரை பார்த்து பதில் சொன்னாள். பசித்த யானை, தோப்புப் பசுங்கிளையைத் தும்பிக்கை நீட்டி உண்போம் என உடைத்தது. ஆளரவம் கேட்டு, தோப்பு விட்டு ஓடியது. யானையால் உடைக்கப்பட்ட பசுங்கிளை ஒடிந்து மரப்பட்டையில் தொங்கி தரை தொட்டுக் கொண்டிருக்கிறது. என் நிலையும் அதுவே, என் கற்பு அழியவும் இல்லை. முன்போல் இருக்கவும் இல்லை. இரண்டாயிரம் வயது குறுந்தொகைக் கவிதை, கல்லூரியில் விளக்கும்போது அழுகை வந்தது.

இப்போது கண்ணாரக் காணும்போது துக்கம் வந்தது. இரண்டாயிரம் வருடத்திற்குப் பிறகும் பெண் நிலை இதுதானா? மெல்லிய கோபம் வந்தது. பெண் இன்னமும் பசுங்கிளையா? ஒடிந்துவிட்ட ஜடப்பொருளா? நின்று, நிமிர்ந்து நான்தான் இவளைத் தொட்டேன் என்று சொல்லும் ஆண் இன்னமும் இல்லையா? தீண்டித் தொலைத்தால் திணறிப் போகிற உணர்ச்சிக் குவியல் தான் பெண் மனசா, உரமே வராதா? 'கைய எடுடா கம்மனாட்டி' ஒரு படுபாவியும் சொல்லமாட்டாளா?

அஞ்சு பேர் முன்னாடி தாலி கட்டு, அன்னிக்கு ராத்திரி வந்து வித்தை காட்டு, இரும்பாய் நின்று பெண் சொல்ல முடியாதா? இதென்ன கொடுமை. ஏனிந்த அவலம். மறுக்கப்பட்டதால் மீறப்படுகிறதா? மீறப்பட்டதால் மறுக்கப்படுமா? மறுத்தலும், மீறலும், மீறியதை மறுத்தலும் நடந்து இரண்டாய், நாலாய், ஆயிரமாய் பெண் பிளந்து போக வேண்டுமா? காதலன் ஒருவனைக் கைப்பிடித்து, அவன் காரியம் யாவினும் கைகொடுத்து, என்ன காரியம்? இதுவா?ஹோட்டல் தடுப்பறையில் பட்டையில் தொங்கிய பசுங்கிளையாய் மாறவேண்டுமா? பசலை தொடர்ந்து அழிவது பெருமையா? சிறுமையா!

''எழுந்து கண்ணைத் துடைடீ'' விஜயா சீறினாள். 'நெஞ்சில உப்பைவச்சு சுடணும். எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்ல மாட்டே. இப்ப என்ன ஆச்சு. அதைச் சொல்லு முதல்ல...''

''எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சுப் போச்சுங்க'' வளர்மதி தொடர்ந்து அழுதாள்.

''அதுதான், தெரியறதே ஜாக்கெட் ஹூக் லூஸ் பண்ணிவிட்டிருக்கியே. வாரா வாரம் நடந்துதா அந்தக் கூத்து?'' ஆமென்று வளர்மதி தலையாட்டினாள். தலையாட்டிய வளர்மதி முடியை விஜயா கொத்தாய் பிடித்துக் கொண்டு பல் கடித்தாள்.

''இதுக்கு பேரு லவ்வா, உன் வீட்டுப் பக்கத்ல இருக்கவங்கள்ளாம் வண்டை வண்டையாய் பேசுவாங்களேடீ, அவங்க பேசற வார்த்தை ஒண்ணு சொல்லட்டுமா?''

''வாணாம்.''

''ஏன்?''

''ஏற்கனவே சொல்லிட்டாங்க.''

''யாரு?''



''பார்த்தசாரதி அவங்க அம்மா.''

''நாசமாப் போச்சு. எப்பிடித் தெரிஞ்சிது?''

''பார்த்தசாரதிதான் சொல்லியிருக்கு.''

''என்னன்னு, கிஸ் அடிச்சேன்னா?''

''இல்லை. காதலிக்கறேன்னு.''

''என்ன சொன்னாங்க.''

''அடி செருப்பால நாயேன்னு சொன்னாங்களாம்.''

''வேறென்ன சொல்லுவாங்களாம். யாரைச் சொன்னாங்களாம். உன்னையா? அவனையா?''

''ரெண்டு பேரையும்.''

''அதுக்கு அந்த சோம்பேறி என்ன சொன்னான்.''

''கட்டினா வளர்மதி. இல்லை சாவிலதான் நிம்மதி.''

''மறுபடி சினிமா டயலாக்கா, அதுக்கு என்ன சொன்னாங்க?''

''நீ சாவுடான்னு சொல்லிட்டாங்களாம்.''

''உங்கக்கா என்ன சொல்லுச்சு.''

''திருநீர்மலையோ, திருத்தணியோ கூட்டிட்டுப் போயி கல்யாணம் பண்ணிடலாம்னு திட்டம் போட்டாங்க. அக்கா, அத்தான்கிட்டே பேசிச்சாம். அத்தான் ஒத்துக்கலை. அவருக்கு, அக்கா பையன் ஆட்டோ ஓட்டறான். அவனுக்கு என்னை முடிச்சிடலாம்னு சொன்னாரு. அவன் குடிகாரன். அவனுக்கு என் தங்கையத் தரமாட்டேனுடுச்சு அக்கா. பார்த்தசாரதிய தன் வீட்டுக்கு கூட்டிட்டுப் போயி அத்தானுக்கு காமிச்சது. அத்தான். பேசிப் பார்த்துட்டு சரி யோசனை பண்ணிச் சொல்றேன். அப்படின்னு திருப்பியனுப்பிச்சிட்டாரு. அவரா கம்பெனில வேலை செய்யற நாலுபேர்கிட்ட பார்த்தசாரதிய விசாரிச்சாரு. அது அந்த சாமியாடி பெண் பேய் காதுல விழுந்

தது. தினம்ஒரு லட்டர் எழுத ஆரம்பிச்சிட்டா. பார்த்த சாரதியையும், எங்க அக்காவையும் சேர்த்துவச்சி தப்பா எழுத ஆரம்பிச்சுட்டா. எங்க அத்தான் ஒரு முன்கோபி, முட்டாள். ஓவர் டைம்னு அக்கா சொல்லிட்டுப் போன அன்னிக்கு, கம்பெனிக்குப் போயி பார்த்திருக்காரு. அக்காவும், பார்த்தசாரதியும் ஓவர் டைம் கேன்சல் பண்ணிட்டு ஒரே ஆட்டோல சேட்டு கிட்ட கடன் வாங்கப் போயிருக்காங்க. பார்த்தசாரதி தன் செயின், மோதிரம் மூணு தையல் மெஷின் எல்லாம் அடமானம் வச்சும் துட்டுப் போறலை. அக்கா தன் வளையலைக் கழட்டிக் கொடுத்திருக்கு. பார்த்தசாரதிய நைட் வேலை செய்யறதுக்காக அதே ஆட்டோல இறக்கிவிட வந்தது. அங்கேயே நடுத்தெருவில அடி. நாயடி பேயடி அக்காவுக்கு உதடு கிழிஞ்சு ரத்தமோ ரத்தம். பார்த்தசாரதி தடுக்க வந்துதாம். அக்கா, நீ இதுல தலையிடாதேன்னு சொல்லிடுச்சாம்.'' வளர்மதி தொடர்ந்து விம்மினாள்.

என்றெமதன்னைக் கைவிலங்குகள் போகும்
என்றெமதின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்
விஜயாவின் உள்ளம் குமுறியது.

''அக்கா ஒரு வாரம் படுத்த படுக்கையாயிடுச்சாம். கம்பெனிக்கே போகல.''

''ஒட்டடைக்குச்சி மாதிரி இருக்கே. எத்தனை ஆம்பளடி வேணும்னு மறுபடி அடிச்சாராம். ரெண்டு நாள் முழுக்க அக்கா சாப்பிடவேயில்லையாம்.''

பஞ்சமும், நோயும் உன் மெய்யடியார்க்கோ,
பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ,
தஞ்சமடைந்த பின் கைவிடலாமோ?
தாயும் தன் குழந்தையை தள்ளிடப் போமோ?

முகமறியாத வளர்மதியின் அக்காவைஎடுத்து மடியில் போட்டுக்கொண்டு அலறத் தோன்றியது, விஜயாவுக்கு. திருமணம் என்பது இங்கே ஆணின் சட்டமா? வயதாகித் தளர்ந்தவர் விருப்பந்தானா? போட்டதைத் தின்று,



வாலாட்டும் நாய்தான் பெண்ணா? எதிர்த்துக் குரைத்தால் பிரம்படியா? சங்கிலியில் கட்டிச் சாகடிப்பார்களா?

''இத்தனை துக்கத்த வச்சுக்கிட்டு, எப்படிடீ வேலைக்கு வந்தே?''

''வீட்ல எதாவது ரோதனை. இங்கே வந்தாதான் நிம்மதின்னு வந்திடறேன்.''

''இப்ப உன் கதி என்ன?''

வளர்மதி சுவரில் சாய்ந்துகொண்டு விட்டம் வெறித்தாள். விஜயாவுக்கு தாகம் எடுத்தது. ஆரஞ்சுகள் எடுத்து நறுக்கித் தனக்கும், வளர்மதிக்குமாய் பிழிந்தாள். ஐஸ் கட்டி போட்டுக் கலக்கினாள். யார் எஜமானி யார் வேலைக்காரி? பெண் எல்லா இடத்திலும் வேதனைப்படுகிற ஜென்மம். மரபு பற்றி மாரை நிமிர்த்திப் பேசிய சண்டாளியைக் கூட்டிக் கொண்டு வந்து, இவள் கதையைக் கேள் என்று சொல்ல வேண்டும்.

பெண், மாடு மாதிரி வேலைக்குப் போக வேண்டும். எந்தப் புருஷனின் பார்வை படாமலும் வாழவேண்டும். பார்த்தால் அறை. பேசினால் குத்து. சிரித்தால் கொலை. ஏ.கே. ஃபார்ட்டீ செவன் எந்தக் கடையில் விற்கும்? கும்பல் கும்பலாய் ஆண்களைச் சுட எப்போது முடியும்? இந்த பூமியில் யுத்தம் வராதா? எல்லா ஆண்களையும் எல்லையில் சாக அனுப்பி வைத்துவிட்டு இனியொரு விதி செய்வோம் என்று வாழ முடியாதா. தன் கோபம் அதிகமோ? தவறோ? இங்கே எது சரி? எவர் சரி? மனுவின் நீதியா? ஸ்வீடன் தேசத்து வாழ்க்கையா? ஐந்து நாள் கல்யாணமா? கல்யாணமேயில்லாத குடும்ப வாழ்க்கையா? மேலை நாடா? ஈழை நாகரிகமா?

பாரத தேசம் பழம் பெரும் தேசம். இந்தப் பழம் பெருமை தவறோ. புதிய அமெரிக்கா செய்வது சரியோ.

ஹிரோஷிமா அணுகுண்டு ஜப்பானின் பழமையைப் பொசுக்கிற்றா? பாதத்தை இறுக்கிக் கட்டிக்கொண்டு நடந்த பெண்களை விடுவித்ததா? கும்பல் கும்பலாய் மக்கள் செத்துப் போனதால் வாழ்க்கை மாறியதா? இந்த பூமியில் யுத்தமே இல்லையே. அதனால்தான் வாழ்க்கையே யுத்தமாகப் போய்விட்டதோ? பெண்கள் ஆண்களுக்கு எதிரியானார்களோ?

பிள்ளைவிட்ட மெல்லிய அம்பு விஜயாவின் முகத்தில் தாக்கியது. விஜயா கோபமானாள்.

''ஒரே அறை செத்துருவே'' கத்தினாள். பிள்ளை நடுங்கினான்.

இந்தப் படுபாவி எந்தப்பெண்ணை நாசம் செய்யப் போகிறானோ? வில்லோடு நிற்கிற பிள்ளையைப் பார்த்து விஜயா கவலைப்பட்டாள்.

ஆனால் தூக்கமே வரவில்லை. மனசு முழுக்க வளர்மதியின் கதைதான், திறந்த குழாயின் நீராகப் பரவிக் கொண்டேயிருந்தது. எட்டு மணிக்கு குழந்தை சாப்பிட்டு, எட்டே காலுக்கு வளர்மதியோடு எதிரும் புதிருமாய் டைனிங் டேபிளில் அமர்ந்து உணவு முடித்து, எட்டரைக்கு எல்லாக் கடையும் ஏறக்கட்டியாகிவிட்டது. ஒருத்தியாய் வேலை செய்தால், நேரம் கொஞ்சம்கூட ஆகும். அலுப்பு மிகும். கூட வளர்மதி இருந்து பம்பரமாய்ச் சுழன்றதால் இருக்கிற நாலு பாத்திரத்தையும் தேய்த்துக் கவிழ்த்தாகி விட்டது. சோபாவில் கண்ணயர்ந்த பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வந்து, கட்டிலில் போட்டு ஏஸியை முடுக்கி மின் விசிறியை மெல்ல சுழல விட்டு, முன் பக்கம் பின்பக்கம் எல்லாம் பூட்டிக் கட்டிலில் சரியும்போது ஒன்பது மணி. நியாயமாய் இது டி.வி. பார்க்கிற நேரம் 'என்னத்த டி.வி.' மனசு எதிலும் ஒட்டவில்லை. வளர்மதி ஒரு துண்டை தலையில் இறுக்கிக் கட்டிக்கொண்டு தரையில் பாயும், பெட்ஷீட்டும் விரித்து மேலுக்கு ஒரு படுக்கை ஷீட்டைப் போர்த்திக் கொண்டு



தூங்கிவிட்டாள். பாவம் மனசு அயர்ச்சி. தேவையில்லாத தலைவேதனை.

ஆனால், விஜயாவுக்கு தூக்கமே வரவில்லை. மணி ஒன்பதரை. அந்த மனுஷன் இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பார்? அந்த மனுஷரும் படுத்திருப்பார். விமானத்தில் போனாலும் பயணம்தான். அலுப்புத் தரும் விஷயம்தான். பகவானே இந்த நியூட்ரின் ஆர்டர் கிடைக்க வேண்டும். வாழ்க்கைத் தரம் இன்னும் உயர்ந்து விடும். நாயாய், பேயாய் கஷ்டப்படுகிறார். எப்பவும் கம்பெனி ஞாபகமாகவே இருக்கிறார்.

''கம்பெனி கொஞ்சம் பெரிசாயிடுத்துன்னா விஜயா' நீயெல்லாம் கூட கம்பெனிக்கு சில விஷயங்கள் பண்ணும் படியாயிருக்கும். அடிக்கடி பார்ட்டி வைக்கணும். எல்லா பார்ட்டியும் விடாம கலந்துக்கணும். நாம பண்ற விளம்பரம் பற்றி அபிப்பிராயம் கேக்கணும். எதாவது குறை சொன்னா, முழுசா காதால கேட்டுக்கணும், நீயொரு கண் இருந்து பார்த்துக்கணும். மத்த விளம்பரத்தையும் நம்ம விளம்பரத்திற்கு கம்பேர் பண்ணணும். சாக்லேட் கம்பெனி விளம்பரத்திற்கு குழந்தைகள் முக்கியம். பளிச்சின்னு பத்து வயசுப் பொண்ணோ, பையனோ பார்த்தா சகஜமாய் பேசி அவா அட்ரஸ் வாங்கி வச்சுக்கணும். மாடலிங் பண்ணுவியான்னு கேக்கணும்.'' ஆனால் இந்தப் பேச்செல்லாம் சட்டென்று மறைந்து, வளர்மதி கவலைதான் முன்னால் நிற்கிறது. இது தன்னுடைய பிரச்சனையில்லை. இருந்தாலும் வலிக்கிறது.

தன்னை யாரும் அடிக்கவில்லை. அவமானப்படுத்தவில்லை. பிறந்த வீடோ, புகுந்த வீடோ இழிவுபடுத்தவில்லை. பத்தாவது படிக்கிறபோது உடற்பயிற்சி ஆசிரியை, விஜயாவை 'முண்டை' என்று திட்டினாள். விஜயா அதிர்ந்து போய் வீட்டில் சொல்ல, அப்பா, அம்மா, தாத்தா, மாமா என்று எல்லோரும் பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்டார்கள்.

'பதினைந்து வயசுக் குழந்தைய இப்படிச் சொல்றியே. உன்னைப் பாம்பு கொத்த, நீ படிச்சப் படிப்பு பாழாப்போக' அம்மா டீச்சரை உரக்க சாபமிட்டாள்.

வீழிநாதன் ஒருமுறை கோபத்தில் மோட்டார் சைக்கிளிலிருந்து அம்போவென்று இறக்கிவிட்டுப் போய் விட்டான். ஆனால், தப்பு விஜயாவினுடையது. வண்டி ஓட்டிக்கொண்டிருந்த வீழிநாதனை உலுக்கி, 'இங்கே பாருங்களேன். இங்கே பாருங்களேன்' என்று கூச்சலிட்ட போது சடேரென்று வண்டியை வீழிநாதன் ஓரம் கட்டினான்.

''வண்டி ஓட்டறபோது உலுக்காதேன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன். பஸ்ஸை ஓவர்டேக் பண்ணும் போது கழுத்தை உலுக்கறியே. படிச்ச பொம்பளையா நீ? அடிபட்டு சாகணுமா ரெண்டு பேரும்? செத்தா முடிஞ்சு போச்சுடி. கை, கால் உடைஞ்சு படுத்த, படுக்கையாக் கிடந்தா எவன் சோறு போடுவான்? உங்கப்பனா? நின்னு பலூன் பார்த்துட்டு, பஸ் பிடிச்சு வீட்டுக்கு வா.''

உலுக்கினது முட்டாள்தனம்தான். ஆனால், இத்தனை பெரிய தண்டனையா? ஒரு வாரம் புருஷனும், மனைவியும் பேசிக் கொள்ளவில்லை. இந்தப் புகாரும் அவள் பிறந்த வீட்டுக்குப் போயிற்று.

'நடுரோட்ல பொண்டாட்டிய இறக்கிவிட்டுப் போறது கெட்டிக்காரத்தனமா? இப்படியொரு கோபம் மனுஷாளுக்கு வருமா?' கத்தின அம்மாவை மாமா, அடக்கினார்.

''சிட்டில மோட்டார் சைக்கிள் ஓட்டறது பத்தி உனக்கென்ன தெரியும்? ரெண்டடி தப்பா நகர்ந்தா மண்டை சிதறிப்போகும். நீ தெருவில இறக்கி விட்டிருக்கக் கூடாது வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயி ரெண்டு அறை விட்டிருக்கணும்.'' வீழிநாதனை தீவிரமாய் மாமா ஆதரித்தார், வீடும் ஏற்றுக் கொண்டது.



கார் வாங்கி ஸ்டியரிங் பிடித்தபோது, விஜயாவுக்கு சாலைக் கவனம் பற்றித் தெளிவாய்த் தெரிந்தது.

''ஆணுக்கு சமதையா இருக்கணும்னு ஆசைப்பட றேள் இல்லியா? அப்ப அவன் எக்ஸ்பீரியன்சும் உனக்கு வேணும். நீ வண்டி ஓட்டறபோதுதானே, அந்தப் பயம் உனக்குப் புரியுது. நீ அவன் கம்பெனில உட்கார்ந்தா தான், அந்த வேலை டென்ஷன் உனக்குப் புரியும்'' உட்காராமலேயே புரிந்தது.

ஆர்வோ பிஸ்கட்டுகள் எனக்குப் பிடிக்கும், ஏனெனில் வீழிநாதன் விளம்பரத்தை விஜயாவிடம் கொடுத்து பூர்த்தி செய்யச் சொன்னான்.

ஏனெனில்.... ஆரோக்கியமானவை. அட்டகாச ருசி உடையவை. எழுதிக் கொடுத்தாள்.

''அப்படி போடு,'' வீழிநாதன் பாராட்டி விளம்பர மாக்கினான். நாலு முறை புருஷன் பாராட்டினால் போதும் நாற்பது முறை திட்டுவது மறந்து போகும். வீழிநாதன் எப்போதாவதுதான் திட்டுவான். பிறகு அவனே சமாதானப்படுத்துவான். இது அதிர்ஷடம். நல்ல புருஷன் பூர்வ புண்ணியம். வளர்மதியின் அக்கா பாவம். வளர்மதி பாவம். அந்தப் பார்த்தசாரதி கூடப் பரிதாபம்.

மலர்ச்சியான நல்ல மனது கொண்ட, கவிதை ஞானம் உடைய பையனுக்கு, இந்தச் சம்பவம் பேரிடியாய் இருந் திருக்கக் கூடும். எந்தத் தப்பும் செய்யாமல், தலைபாரத் துடன் இந்தப் பெண் துணியை இறுக்கிக் கொண்டு தூங்குகிறது. கோடாரித் தைலம் தடவி விடலாமா? வளர்மதி புரண்டு படுக்க, தைலம் தேவையா என்று விஜயா கேட்டாள். வளர்மதி எழுந்து உட்கார்ந்து தைலம் தடவிக் கொண்டாள். ஏசி அறையில் தைல வாசனை ஊட்டியின் நினைவை அதிகப்படுத்தியது.

''சரிடீ, இப்ப எங்க நிக்கறது அந்த மேட்டர்?''

''பார்த்தசாரதிக்கு என்னைவிட எங்கக்கா படற வேதனை முக்கியமாப் போச்சு.''

''நியாயம்தானே.''

''நியாயம்தான். அதுக்காக உன் புருஷன் அடிச் சானா, உன் புருஷன் அடிச்சானான்னு வேற ஒருத்தன் பெண்டாட்டிய தாங்க முடியுமா? தாங்கினா நல்லா இருக்குமா? எங்கக்கா ஒரு கூறு கெட்ட சரியன். அந்தாளு மடியில படுத்துக்கிட்டு அழுதிருக்கு.''

''எங்கே?''

''கம்பெனில... கம்பெனி மேல் மாடில''

''அப்புறம்''

''அந்த சாமியாடற பொம்பளை கம்பெனி முதலாளி கிட்ட சொல்லி, முதலாளி மேலே வந்து பார்த்து, இதெல் லாம் அசிங்கம், மறுபடி நீங்க பேசறது தெரிஞ்சா வேலையை விட்டுத் துரத்திடுவேன்னுட்டான்...''

''ஐயோ அப்புறம்...''

''பார்த்தசாரதி உடனே வேலைய ரிஸைன் பண்ணிடுச்சு.''

''அடப்பாவமே, வேலை கிடைக்கறது கஷ்டமாச் சேடி''

''நல்ல டெய்லருக்கு எங்க வேணாலும் வேலை கிடைக்கும். வேற கம்பெனில இப்ப கூடவே சம்பளம் வாங்குது.''

''அக்கா?''

''அதே கம்பெனி. ஆனா பார்த்தசாரதியும் போயிப் போயி பார்த்துட்டு வரும், பீச், ஹோட்டல்ல ஒரு நாள் விட்டு ஒரு நாள் பார்க்கறாங்களாம்.''

''உனக்கு யார் சொன்னது?''



''அந்த சாமியாடி பொம்பளைப் பேயி.''

''என்னடி இது துரத்தித் துரத்தி அடிக்கறா.''

''அக்காவும், பார்த்தசாரதியும் கம்பெனிக்கு லீவு போட்டுட்டு யாருக்கும் தெரியாம மகாபலிபுரம் போயி தங்கிட்டு வந்தாங்களாம். அந்தப் பொம்பளைதான் சொன்னா.''

''அடச்சீ. யாருக்கும் தெரியாதது அந்தப் பொம்ப ளைக்கு எப்படித் தெரியும்?''

''அங்கங்க ஆளு வச்சிருக்காளாம். அவ அவமானப் பட்டது மறந்து போகலையாம்''

''என்ன எழவுடி இது?''

''அவ சொல்றது நிஜமோன்னு தோணுதும்மா.''

''என்ன சொல்ற நீ''

''எங்கக்கா கர்ப்பமா இருக்கு.''

''கல்யாணம் ஆனவ கர்ப்பமாகமாட்டாளா? இதுக்கு கூடப் பேசறவன் பொணையா?''

''கட்டினவனே சந்தேகப்படறானே. நான் இல் லைன்னு சத்தியம் பண்றானே. இது தானே சண்டை யாகி, அடி உதையாகி வீட்ல கொண்டாந்து தள்ளிட் டாங்க.''

''உங்கம்மாவுக்குத் தெரியுமா?''

''தெரிஞ்சிருக்கும். அது யாரோடையும் பேசறதில்ல''

''உன்னை பற்றி உங்கக்கா என்ன சொல்றா?''

''எதுவும் பேசலை. அடமானம் வச்ச வளையலை மீட்டு, போனவாரமே போட்டுக்கிட்டா. என் கல்யாணத் துக்குன்னு அடமானம் வச்சுட்டு காசு வாங்கி, இப்ப அந்தக் காசையே கொடுத்து வளையலை மீட்டா என்ன அர்த்தம்...''

''வாயா, வார்த்தையா கேக்க வேண்டியதுதானே.''

''நான் பார்த்தசாரதியக் கேட்டேன். எல்லாரும் தப்பா சொல்றாங்க. நீ என்ன சொல்றேன்னு கேட்டேன். மான் பிடிச்சுத் தரேன்னு உங்கக்கா சொல்லுச்சு, புடிச்சுத் தரப்ப, போனவளை புலி அடிச்சா, நான் மான் எங்கேன்னு கேட்பனா, புலியோட சண்டை போடு வனா...? சுத்தி வளைச்சே பேசுதும்மா...''

''தொட்டுட்டானேடீ...''

''அதான் சொன்னேன். ஒரு கயிறு போட்டு என்னைக் கட்டிட்டு எதோட வேணா சண்டை போடுன்னேன். பதிலே பேசலை.''

''என்னடி பண்ணப்போற நீ...''

''நாளைலேர்ந்து வேலைக்கு வரமாட்டேன்.''

''வேண்டாம். என்ன செய்யப் போற?''

''உனக்கு நியூஸ் வரும். வளர்மதி எலி பாஷாணம் குடிச்சு செத்துப் போயிட்டான்னு உனக்கு நியூஸ் வரும். வீட்டுக்கு வந்து ஒரு எண்பது ரூபாய் புடவை சாத் திட்டுப்போ.''

''ச்சீ... நாயே!'' பளீரென்று விஜயா வளர்மதியை அடித்தாள்.

''உங்கக்காவ இங்கே கூட்டிட்டு வா. இந்தப் பார்த்தசாரதி எங்கே இருக்கான்னு சொல்லு. உலுக்கி எடுத்தர்றேன். என்னால முடியுமான்னு பார்க்கறியா? எனக்குப் பின்னாடி நூத்துப் பன்னிரெண்டு லேடீஸ் இருக்கா, என் கிளப் மொத்தமும் எனக்கு வாதாடும். எலி பாஷாணம் சாப்பிடவா இத்தனை நாள் வளர்ந்தே. எல்லாத்துக்கும் சாவுதான் முடிவுன்னா, பூமில வாழற துக்கு ஆளே இருக்காது. இந்த எண்ணத்தை அடியோட மற. நான் இருக்கேன்.'' இரண்டு பேரும் எதிரும் புதிரு மாய், நெருக்கமாய் நெடுநேரம் பேசாதிருந்தார்கள்.



நட்பில், மௌனம் நல்ல விஷயம். ஆழ்ந்த அன்பு என்று அதற்கு அர்த்தம். எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு முழுமையான அக்கறையிருக்கும். ஒரு முகப்பட்ட முழுமையான அக்கறை அன்பில்தான் குழையும்.

எப்பொழுது தூங்கினார்கள் என்று இரண்டு பேருக் கும் தெரியவில்லை. விடிந்த பிறகு தலை கனத்தது. மனசு இன்னும் கொதித்துக்கொண்டிருந்தது. வளர்மதி ஷாம்ப்பூ போட்டு விஜயாவின் தலையைச்சுத்தமாக்கினாள். தானும் அங்கே குளித்தாள். சிறிதளவு பெரிதாய் இருந்தாலும் விஜயாவின் ஜாக்கெட்டையே போட்டுக் கொண்டாள். விஜயாவிடமிருந்த நல்ல பருத்தி சுங்கடியை உடுத்திக் கொண்டாள். நல்ல உடையில் எல்லா பெண்ணும் அழகி. வளர்மதி மாதிரி வளமான பெண், இன்னும் அழகி. ஜெய லட்சுமி ஸ்டோருக்கு ஃபோன் பண்ணி வளர்மதி சொன் னது, அவள் வீட்டுக்குத் தெரிவிக்கப்பட்டாலும், விடிந்த பிறகும் வரவில்லையே என்று கவலை வந்துவிட்டது போலும். என்னவோ ஏதோவென்று பயந்துவிட்டார்கள் போலும். வளர்மதி அக்கா அவளைத் தேடி விஜயாவின் வீட்டுக்கு வந்துவிட்டாள்.

''ஏண்டி இங்கேயே தங்கிட்டே...?'' கேள்வி கேட் டாள். வளர்மதி அம்மாவுக்கு மளிகைக் கடை மூலமாய் ஃபோனில் பேசி, வளர்மதி நலமென்று தகவல் சொல்லப் பட்டது.

''உன் பேரு என்னம்மா?'' விஜயா அவளை உட்கார வைத்துக் கேட்க,

''என் பேரு மணிமேகலைங்க. வணக்கம். இருக் கட்டும் என்னவெல்லாமோ கேள்விப்படறேனே என்ன விஷயம்?''

''நிறைய குழப்பமாயிடுச்சுங்க.''

''யாரால்?''

''என் வீட்டுக்காரர்தாங்க காரணம். நான் எது செய்தாலும் தப்பா பார்க்கற என் வீட்டுக்காரர்தான் காரணம்.''

''நீ தப்பு பண்ணலையேம்மா.''

மணிமேகலை பதில் சொல்லவில்லை. தலை குனிந்து கொண்டாள்.

அவள் தனியே பேச விரும்புகிறாள் என்று தெரிந்து போயிற்று. வளர்மதியை எப்படி வெளியே போகச் சொல்வது?

''வளர்மதி இங்கே எதனா வேலையிருந்தா நான் செய்துக்கறேன். நீ வீட்டுக்குப் போயி சாப்பாடு ஆக்கி வையேன். அம்மா ஆஸ்பத்திரி வேலைக்குப் போகணுமில்ல...'' குறிப்பறிந்து மணிமேகலையே பேசினாள். விஜயாவைப் பார்க்க, விஜயா சரியென்றாள். வளர்மதி நகரும் வரை யாரும் பேசவில்லை.

''இப்ப சொல்லுங்க. என்ன நடந்தது?''

''தப்பு நடந்து போச்சும்மா.''

''என்ன தப்பு?''

''பார்த்தசாரதி என்னை இஷ்டப்படறாரு.''

''பார்த்தசாரதி இஷ்டப்படறாரா, இல்லை நீங்க இஷ்டப் படறீங்களா?''

''ரெண்டும்.''

''இது என்ன நியாயம்?''

''தப்புதான்.''

''தெரிஞ்சே நெருப்புல விழப் போறீங்களா?''

''எட்டு வருஷமா நெருப்புக்கு நடுவில தானே குடித்தனம் பண்றேன்''

''அதுக்காக இப்போ சாக்கடையில குதிக்கப் போறீங்களா?''

''சாக்கடையோ, சகதியோ? நெருப்பைவிட உத்தமம் இல்லீங்களா?''

''வளர்மதியோட கதி?''



''கன்னிப்பொண்ணுக்கு பத்து எடம் பார்த்து, ஒண்ணு முடிக்கறோம்.''

''ஹோட்டலுக்கு கூட்டிட்டுப்போயி, உடம்பு முழுக்க கவிதை படிச்சாராமே உங்க பார்த்தசாரதி?''

''அது என் தப்புதான். நான் நல்லது நடக்கணும்னு தான் ஆசைப்பட்டேன். பொங்கப் பானை பொங்கி, படையலா வைக்கணும்னுதான் நினைச்சேன். நீ எண்டீ பொங்கல் பண்றேன்னு அடிக்கறாங்க நீ யாருடீ படையல் வைக்கன்னு ஆத்திரப்படறாங்க.''

''உங்க புருஷன் பண்றது தப்புன்னு சொல்றீங்களா?''

''அவரு புத்தி உங்களுக்குத் தெரியாதும்மா? ரொம்ப மோசமான ஆளு.''

''நீங்க மகாபலிபுரம் எவன்கூடயாவது போயிடுவீங்க. ஏண்டீன்னு கேட்டா மோசமானவனா?''

''ஏன் போனேன்னு தெரிஞ்சா கேட்கமாட்டீங்க.''

''பார்த்தசாரதி மேல காதல்ன்னு சொல்லுவீங்க. அடடேன்னு கேட்டுக்கணுமா?''

''எந்தப் பொம்பளையும் எங்க காதல் விக்கும்னு அலையமாட்டா, கொண்டவன் ரெண்டு பிடி சோறு போட்டால் போதும். இன்னொருத்தன் கிட்டே கையேந்த மாட்டா. புருஷனிடம் கிடைக்காத காதல், பார்த்தசாரதிகிட்ட கிடைச்சுது...''

''பார்த்தசாரதி குறைச்சலா கொடுக்கறாரு. தீர்த்த சாரதி மூட்டை மூட்டையா அனுப்பறாரு. வேற ஒரு ஆள் லாரிலேயே தரேன்னாரு. போயிட்டேயிருக்கலாமே.''

''புரியாத பேசறீங்க.''

''ஆமா... நான் நேத்து பொறந்தவ. எனக்கு ஒண்ணுமே புரியாது. நீங்க பண்ற அசிங்கத்துக்கெல்லாம் காதல்ன்னு பேரா?''

''உங்களுக்கு நல்ல புருஷன் கிடைச்சிருக்காம்மா. கடவுள் கிருபையில் நல்லபடியா இருக்கீங்க. பலகாரம் சாப்பிட்டவங்களுக்கு பசிச்சவங்க சோர்வு சோம்பேறித்தனமாத்தான்படும்.''

''என்ன குறை?''

''என்ன குறையில்ல. என்னைக்குக் கல்யாணம் பண்ணி காலடியெடுத்து வச்சேனோ அன்னையிலேர்ந்து எல்லாமுந்தான் குறை. அவன் ஆம்பளையா? இல்லை, பொட்டச்சிய ஆள முடியல. ஒழிஞ்சு போகட்டும். ராமா, கிருஷ்ணான்னு கோயில் சுத்திக்கிட்டு இருப்போம். அண்ணன் தங்கச்சின்னு நினைச்சுக்குவோம். ஒனக்கு முடியாததுக்கு என்னை பழியா சொன்னா? ஒனக்கு சூட்டு உடம்பு. உன் ஜாதகத்ல கெட்ட கிரகம். நீ தொட்டதெல்லாம் எரிஞ்சு போகும். எரிஞ்சு போகும்னு திட்டினா? சிகரெட்டுல சூடு வச்சா? இங்கே பாருங்க.'' புடைவை விலக்கி, ஜாக்கெட் இழுத்து ஒருபக்க மார்பு காட்டினாள். பார்த்தவரைக்கும் இருபது புள்ளிகள் தெரிந்தன. விஜயாவின் முகம் வேதனைப்பட்டது.

''குடிச்சுட்டு வந்து அடிச்சா? ஏண்டீ பூ வைக்கறேன்னு தலைமுடியை வெட்டினா? புதுப்புடைவைய தரையில போட்டுக் கசக்கி, இதை உடுத்திக்கிட்டு போடீன்னு சொன்னா, உனக்கு உடம்பு கொழுப்பு அதை குறைக்கணும், எங்கக்கா வூட்டுக்கு போயி இட்லிக்கு மாவு அரைச்சுக்குடுன்னா, அக்கா வீட்ல போயி இவ பொம்பளையேயில்லை. ஆம்பளைத்தனம் ஜாஸ்தி. இவளுக்குக் குழந்தை பொறக்காதுன்னா? எனக்கும், அவரு அக்காவுக்கும் சண்டை வர, அவங்க அக்கா எதிர்ல செருப்பால அடிச்சா?''

''நீ இருந்தா தாண்டி கஷ்டம். விஷம் குடி. விஷம் குடின்னு நீட்டினாரு ஒரு நா, குடிச்சிட்டேம்மா. அப்புறம் அந்த ஆளே பயந்து போயி ஆஸ்பத்திரில சேர்த்து, என் கல்லு நெக்ல்ச வித்து காப்பாத்தினாரு.''



''செத்துத் தொலைச்சிருப்பேனே. ஏன் காப்பாத்தினேன்னு கேட்டேன். நான் ஜெயிலுக்குப் போறதுக்கு இஷ்டப்படல. அது தவிர உன்னால எனக்கொரு காரியம் ஆகணும்னாரு.''

''என்ன காரியமாம்?''

''வளர்மதிய அவனுக்கு நான் கட்டி வைக்கணுமாம். நான் ஒட்டடை குச்சியா இருக்கேனாம். வளர்மதி பறிச்ச கிழங்கா இருக்காளாம். அவளைக் கட்டிக்கிட்டு உன்னால என்னடா பண்ண முடியும்னு கேட்டேன். வெச்சு வியாபாரம் பண்ணுவேன். நீ யாருடி கேக்கறதுக்குன்றான். மறுநாளே எங்கம்மாவ பார்த்து, அத்தைக்கு பூந்தி, மிக்ஸர் வாங்கியாந்தேன்னு நீட்டறான். மாசம் நாலாயிரம் சம்பாதிக்கறேன். மனசில நிம்மதியே யில்லைன்னு அழுவுறான்.''

''என்ன வேலை அவனுக்கு?''

''வீட்டு புரோக்கர். உடம்பெல்லாம் பொய். பேச்செல்லாம் விஷம். செய்யறதெல்லாம் பாவம். தனியா இருக்கற ஒரு லேடிக்கு வீடு பார்த்துத் தரேன்னு அஞ்சாயிரம் வாங்கிட்டு, காசே வாங்கலைன்னு சத்தியம் பண்ணிட்டான். அந்தப் பொம்பளை முடி சுத்தின எலும்பை வீட்ல தூக்கிப் போட்டுட்டு போயிடுச்சு. அந்தப் பொம்பளை வீட்டுக்கு ஆளுங்களோட போய் சாமானெல்லாம் உடைச்சிட்டு வந்துட்டான். போலீஸ் கேஸ் நடக்குது. என்ன பொய் சாட்சி சொல்ல கூப்பிடறான், அந்தப் பொம்பளை இவன்கிட்ட தப்பா பழகினான்னு நான் சொல்லணுமாம். அடுக்குமா இது?''

''டைவர்ஸ் பண்ண வேண்டியதுதானே?''

''இங்கிலாண்டிலேயா இருக்கோம், டைவர்ஸ் பண்றதுக்கு. எங்கம்மா ஒத்துக்குமா நான் டைவர்ஸ் பண்றதுக்கு? துணைக்கு வருமா? நான் தாலிய அறுத்துப் போட்டா?''

''அதுக்காக வளர்மதி வாழ்க்கையை பாழாக்கிட்டீங்களே...''

''நான் வளர்மதிய பாதுகாக்கணும்னு நினைச்சேம்மா. இந்தப் படுபாவி எங்கம்மாகிட்ட பேச ஆரம்பிச்சுட்டான். தனக்கு குழந்தையே பொறக்கல. தூக்குப் போட்டு சாகலாமான்னு தோணுதுன்னு அழறான். எங்கம்மா அவன் பேச்சை நம்பறாங்க. இத்தனை விஷயம் நான் சொல்லாத, அவன்கூட நீங்க பேசினீங்கன்னா, ரொம்ப தர்ம நியாயத்துக்குக் கட்டுப்பட்ட மனுஷன்னு நீங்களும் சொல்லுவீங்க. உங்கிட்ட கை கட்டித்தான் பேசுவான். நீங்க உட்காருன்னு சோபவைக் காமிச்சா, தரையில உட்காருவான். பொறவி நடிகன். வேஷதாரி. உடம்பெல்லாம் விஷம். நானும் வளர்மதி மாதிரி குண்டா இருந்தவதான். அடிவாங்கி, மனசு நொந்து இப்படி ஆயிட்டேன்.

''நான் செத்துடலாம்னு நினைச்சதுண்டு. இனிமேல் சாகமாட்டேன். நான் ஏன் சாகணும்? இவனை விட்டு, வெளிய வந்து, கோர்ட்டுக்கு கேசு போட்டு, வாதாடி டைவர்ஸ் வாங்கறதெல்லாம் முடியாது. எனக்கு காசு வசதியும் இல்ல, மனசில தெம்பும் இல்ல, நான் வீட்டை விட்டு ஓடிப்போப் போறேன். என் கையில தொழில் இருக்கு ஆந்திரா பக்கம், பாம்பே பக்கம் போயிடப் போறேன்.''

''தனியாவா!''

''ஏங்க, முடியாதுங்களா? என்ன, நாலுபேர் தேவிடியான்னு சொல்லுவான். சொல்லிட்டுப் போறான். ஆமாண்டா அப்படித்தான்னு சொல்லிட்டுப் போறேன்.''

''பார்த்தசாரதியோட என்ன வித கனெக்ஷன்?''

''லவ்''

''நிக்குமா?''

''சேத்தில காலை வச்சாச்சு. இடுப்பாழம் இறங்கியாச்சு. உள்ளங்கை சுத்தம் பாக்க முடியுமா? கடைசி வரைக்கும் காப்பாத்துவேன்னு பார்த்தசாரதி சொல்லுது. முடிஞ்சா காப்பாத்தட்டும். முடியாட்டா என்னை நான் காப்பாத்திக்குவேன்.''



''சேத்துல இறங்கிட்டியா?''

''இறங்கிட்டேன்.''

''மகாபலிபுரமா?''

''இவங்களுக்கு மகாபலிபுரம்தான் தெரியும். வேலூர், தஞ்சாவூர், திருச்சி தெரியாது.''

''ஆகரெண்டு பேரும் வளர்மதிய நாசம் பண்ணிட்டீங்க.''

''வளர்மதிக்கு கல்யாணமே ஆகாதுன்னு சொல்றீங்களா?''

''ஆவும், அக்காக்காரி புருஷனை விட்டுட்டு அடுத்தவன் கூட ஓடினா, தங்கச்சிய பொண்ணு கேட்டு பத்து பேர் க்யூவில நிப்பாங்க.'' விஜயா கோபத்தை கேலியாய் பேசினாள்.

''பொண்ணு கேட்டு, சீர் வச்சுப் பண்ணின கல்யாணம்தான் என்னுது. என்ன நடந்திடுச்சு?''

''அதுக்காக.''

''வளர்மதி அவ புருஷனை அவளே தேடிக்கட்டும்.''

''அந்த பார்த்தசாரதிக்கு மனசு உறுத்தலையா? வளர்மதிக்கு முத்தம் கொடுத்துட்டு, அதை உசுப்பிவிட்டு, நியாயமா?''

''பேசிப் பழகி புரிஞ்சுக்கட்டும்னு நான்தான் ஏற்பாடு பண்ணினேன். வளர்மதிய பார்த்தசாரதி நேசிச்சது நிஜம். ரொம்ப நல்லபடியா அந்தக் கல்யாணம் நடந்திருக்கும், என் வீட்டுக்காரன் அடிச்சான். கம்பெனி வாசல்ல, நடு ரோட்ல அடிச்சான். பார்த்தசாரதிக்கு

ஆடிப்போச்சு. என்னால தானே என்னாலேதானேன்னு தலைல அடிச்சுக்கிட்டு அழுவுது.''

''அவங்க கல்யாணத்தை முடிச்சிட்டு நீ ஓடிப் போயிருக்கலாமே.''

''அப்படித்தான் திட்டம் போட்டேன். என் புருஷன பத்தி பார்த்தசாரதிகிட்ட எதும் சொல்லாமதான் இருந்தேன். சொல்லும்படியா என் புருஷன் பண்ணிட்டான். ஏன்டி என்கிட்ட அப்பவே சொல்லலேன்னு அம்மா இப்ப கேக்குது. சொல்லி என் குடித்தனம் பிரிஞ்சா, வளர்மதி கல்யாணம் கஷ்டப்படும்னுதான் நான் சொல்லலைன்னு சொன்னேன். இதுக்கு மேல தியாகம் பண்ண என்னால முடியலம்மா.''

''ஏன்?''

''எனக்குப் பார்த்தசாரதி வேணும். பார்த்தசாரதி இல்லேன்னா நான் செத்துடுவேன். நான் இல்லேன்னா அதுவும் செத்துடும்.''

''உறுதியாயிடுச்சா.''

''என் பையில நாற்பது மாத்திரை இருக்கு. தூக்க மாத்திரை ரெண்டு ரெண்டா வாங்கி வச்சிருக்கேன்.'' அவள் பை திறந்து, ஒரு ப்ளாஸ்டிக்பை நிறைய மாத்திரை காட்டினாள். விஜயா முகம் பொத்திக் கொண்டாள்.

''வளர்மதி நேத்து மடில படித்துக்கிட்டு 'ஓ'ன்னு அழறா தெரியுமா உனக்கு?''

''நான் நினைச்சேன். உங்ககிட்ட பேசும்னு நினைச்சேன். அவளுக்கு எடுத்துச் சொல்லுங்கம்மா. பொண்ணு பாத்து கல்யாணம் பண்ண வேணாம்னு சொல்லுங்க. எங்க அம்மாவோட ஆஸ்பத்திரி ஆயா வேலை அவளுக்குக் கிடைக்கும். வேலைக்குப் போகச் சொல்லுங்க. ஐயோ ஒருத்தன் தொட்டுட்டானேன்னு அழ வேணாம். பத்தினியா இருக்கத்தான் எல்லாப் பொண்ணுக்கும் ஆசை. அதுக்கு ஆம்பளை உத்தமனா இருக்கணும்.



கல்லையோ, புல்லையோ, கடப்பாறையையோ கட்டிக்கிட்டு, தினம் தினம் செத்து, எதுக்குப் பத்தினியாயிருக்கணும்? நாய் கடிச்சா காலைக் காட்டிக்கிட்டு நிக்கணுமா? சுழியால முதுகு உடைக்க வேணாம்? என் மேலே என்ன தப்பு? சொல்லு.'' மணிமேகலை பேசப் பேச விஜயா பேசாமலிருந்தாள்.

''ஒரு ஃபோன் பண்ணிக்கட்டுங்களா?''

ஏதோ யோசனையில் சரியென்றாள்.

மணிமேகலை பார்த்தசாரதிக்கு ஃபோன் பண்ணுவது தெரிந்தது. அவனை அங்கே வரச் சொல்வது புரிந்தது. விஜயா, ஐயோ, இவன் எதற்கு என்று பயந்தாள். மணிமேகலை ஃபோன் வைத்த மறுநிமிடம் ஹைதராபாத்திலிருந்து ஃபோன் வந்தது.

''என்ன குட்டி எப்படியிருக்கே'' வீழிநாதன் குரல் கேட்டது.

''போன காரியம் என்னாச்சு?'' விஜயா பரபரத்தாள்.

''ஆறு டிசைனும் ஓ.கே. காப்பி ரைட்டிங் கொஞ்சம் சேஞ்ஜ் பண்ணச் சொல்றாங்க. இன்னும் பவர் ஃபுல் ஸ்லோகன்ஸ் கேக்கறாங்க. ஹோட்டல்ல உட்கார்ந்து எழுதிக்கிட்டிருக்கேன். சில ஸ்லோகன்ஸ் ஓ.கே. தமிழ்நாடு விளம்பரம் முழுக்க நாமதான், படிக்கறேன். கேக்கறியா?''

''படிங்க''

''சுட்டிக் குழந்தைகளுக்கு குட்டி முயலின் பரிசு, நியூட்ரின் சாக்லெட்.''

''தூள்''

''நியூட்ரின் சாக்லெட் அன்பின் சின்னம். ஆரோக்கியத்தின் அடையாளம்.

''சுமார். வேற சொல்லுங்க.''

''நிலவில் வசித்த முயலின் பரிசு, நியூட்ரின் சாக்லெட் சுவைத்துப்பாரு.''

''இது ரொம்ப நல்லாருக்கு''

''மிச்சம் நாளைக்கு சொல்றேன்''

பின்னே மணிமேகலை இருமினாள். ''யாரோ இருமற சத்தம் கேட்குது. எனக்கு பதிலா டெம்ப்ரரியா ஆள் போட்டிருக்கியா?''

''ச்சீய்... சனியனே.''

''நீ ஆமான்னு சொன்னா நானும் இங்கே டெம்ப்ரரியா ஒரு ஆள் போட்டுக்கலாம்னு பாக்கறேன். சல்லிசா கிடைக்குது.''

''கன்னம் பழுத்துடும். ஒழுங்கா மரியாதையா வேலைய கவனிங்க.''

''வேறென்ன?''

''வளர்மதி அக்கா மணிமேகலை வந்திருக்காங்க, பேசிண்டிருக்கோம்.''

''சரி,'' அவன் அக்கறை காட்டவில்லை.

''வேறென்ன?'' மறுபடி கேட்டான்...

''ஒண்ணுமில்லை. ஆர்டர் கிடைச்ச உடனே எனக்கு ஃபோன் பண்ணுங்க.''

''அட்வான்ஸ் அமௌண்ட் வாங்கிட்ட பிறகு ஃபோன் பண்றேன்'' அவன் குரலில் வெற்றி நம்பிக்கை துள்ளிக் குதித்தது. வித்யா ஃபோனை வைத்துவிட்டு மணிமேகலையைத் திரும்பிப் பார்த்தாள். அவள் கண்களில் ஏக்கம் தெரிந்தது.

''ஐயாவாம்மா போன்ல.''

''ஆமாம்.''

''என்னைய கேட்டாரா?''

''நீ இருமினேல்ல. அது காதுல விழுந்திடுச்சு.''



''என் இடத்துக்கு ஆம்பளைய டெம்பரரியா வச்சிருக்கியான்னு கேக்கறாரா.''

''அது சும்மா தமாஷ். இப்படித்தான் கொஞ்சம் வெக்கங் கெட்டத்தனமா பேசுவாரு. நம்மளையும் வெட்கப்பட வைப்பாரு.''

''நல்ல புருஷன் கிடைச்சா, பொம்பளை வெட்கம் விட்டுடலாங்க. பொம்பளையோட வெட்கம் ஆம்பளைக்காகப் போடற வேஷம். பொய். ஸ்நேகிதகாரங்களுக்குள்ள வெட்கம் உண்டா? விரசம் உண்டா? புருஷன் ஸ்நேகிதமா இருக்கக் கூடாதா?''

''நீ நல்ல பேசற மணிமேகலை.''

''கம்பெனில ஷர்ட் தைச்சுக்கிட்டே நான் நிறைய யோசிப்பேம்மா. கடவுளே எனக்கு ஏன் நல்ல புருஷனைக் கொடுக்கலேன்னு அழுவேன். ரொம்ப நல்லவனாகக்கூட இருக்க வேண்டாம். எப்பவாச்சும் ஒரு நேரம், பேச்சுக் கேட்கிற புருஷனாவாவது இருக்கக் கூடாதா. வாழ்க்கைன்னா என்னான்னு என்கூட டிஸ்கஸ் பண்ணக் கூடாதா?''

''அதான் பார்த்தசாரதியோட டிஸ்கஸ் பண்ணிட்ட போலிருக்கு...''

''ஆமாம். அது பேச்சில மயங்கிட்டேன். பேச்சில மட்டுமில்ல. நடத்தையிலும் அது உறுதியாயிருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டேன்.''

''வேலூர், திருச்சி, தஞ்சாவூர் போயிட்டு வந்துட்டீங்களே ரெண்டு பேரும்.''

''என்னை உங்களுக்குப் பிடிக்கலையாம்மா. நான் கேடு கெட்ட நாய்ன்னு தோணுதா உங்களுக்கு? நான் அடி உதைக்குப் பயப்படலேம்மா, அவன் ஆம்பளையா இல்லைன்னுகூட நோகலை. எனக்கு முடியலடீன்னு அவன் தலை குனிஞ்சுக்கிட்டாக் கூட போதும். நான் அவன் தலையைத் தடவி நெஞ்சில வச்சுக்குவேன். நாம் ஸ்நேகமா இருப்போம். அது போறும்னு சொல்வேன்,

நான் உடம்புக்கு ஏங்கலம்மா. அன்புக்குத் தவிக்கிறேன். தப்புங்களா?''

''வளர்மதி, வளர்மதி வளர்மதிய, கொன்னுட்டீங் களே அதுதான் தாங்கலை.''

''என்னை ஒரு பொம்பளையாவே தோணலியா உங்களுக்கு. என் வேதனை உங்க மனசத் தொடவே யில்லையா? நான் செத்துப் போனா எல்லாம் சரியா யிடும்னு நினைக்கிறீங்களா?''

''இல்லை மணிமேகலை. இல்லை. நீ பாவம்தான். ரொம்ப பாவம்'' விஜயா மணிமேகலைக்கு அருகே உட்கார்ந்து, அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள். நல்ல புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, தெளிவாக வாழும் பெண்ணுக்கு, சொல்லவொண்ணா வேதனைகள் படும் பெண்களின் துயரம் புரியாமல் போகாது. ஆனால், புரி யாதது போல் நடித்து, தன் கற்பைக் கொண்டாட, பிறர் கவலையைக் காரித்துப்புகிறார்கள். இன்னொருத்தி வேத னையைப் பார்த்து அப்படித்தான் இருக்கும் என்று அலட் சியப்படுத்துகிறார்கள். அவர்கள் நல்ல வாழ்க்கை வெடித் துச் சிதறும்போது, 'ஐயோ வாழ்க்கை இத்தனை மோசம் என்று தெரியாமல் போய்விட்டதே, என்று அலறுகிறார் கள். தான் வயிறு நிரம்ப உண்டு, பிறர் பசியை அலட்சி யப்படுத்துபவன் நிர்மூடன். நிர்மூடர்களை வாழ்க்கை பிரம்பாலடித்து மாற்றும். வெயிலில் முழங்கால் போட வைக்கும். தயக்கமின்றி தலையில் குட்டும். வாழ்க்கை ஒரு குரூரமான உபாத்தியாயன். வாழ்க்கை குறித்து எந் நேரமும் பயத்துடன் இருப்பது நல்லது. வெற்றியின் போது திமிறலும், தோல்வியின்போது புலம்பலும் ஞானம் உள்ளவன் செய்யமாட்டான். தெளிவு அமைதி யின் வெளிப்பாடு. அமைதி. ஆட்டம் போடாதவர் களுக்கே கிடைக்கும்.

''பார்த்தசாரதிய நம்பி போறியேங்கற கவலைதான் எனக்கு. இன்னிக்கில்ல. என்னிக்காவது அந்த ஆள் உன்னை எச்சில் இலைன்னு சொல்லிட்டா?''



''அவனுக்கும் தலை முழுக வேண்டியதுதான்.''

''இப்படி எத்தனை தடவை தலை முழுகுவ...?''

''தெரியல எனக்கு என் புருஷனோட வாழமுடியல.''

வாசல் அழைப்பு மணி ஒருமுறை ஒலித்தது. மணி மேகலை ஓடிப்போய் கதவைத் திறந்தாள். பார்த்த சாரதி நின்று கொண்டிருந்தான். அவன் காலின்கீழ் ஒரு புதிய தகரப் பெட்டியிருந்தது.

''என்ன?'' மணிமேகலை ஆச்சர்யத்துடன் கேட் டாள்.

''வழில இந்தப் பெட்டி வாங்கினேன். வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போக முடியாது. இங்கே வச்சிடலாமே. சௌகர்யமாச்சேன்னு எடுத்தாந்தேன். தப்பில்லையே...''

''கிளம்பறதுன்னு முடிவே பண்ணிட்டீங்களா?''

''முடிவு எப்பவோ பண்ணியாச்சு. யாரு கண்ணு லேயும் படாத இன்னிக்கித்தான் பெட்டி வாங்க முடிஞ்சிது. பெட்டி இங்கே இருக்கலாமா? தப்பில்லையே. நடுத்தர உயரமாய், அடர்த்தி மீசையாய், குழந்தை முக மாய், பளபளக்கிற கண்ணாய், குரலில் பெண்மை மிகுந்தனவாய் பார்த்தசாரதி பெட்டியுடன் உள்ளே வந்தான்.

''எப்ப கிளம்பறோம்?''

''இன்னிக்கு.''

''எங்கப் போறோம்?''

''டெல்லி. அங்க சரிப்படலேன்னா அகமதாபாத்.''

''டிக்கெட்?''

''ஸ்டேஷன் போயி எடுத்துக்கலாம்.''

''இவங்க வளர்மதியோட முதலாளியம்மா, எல்லாக் கதையையும் சொன்னேன். வளர்மதிய அம்போன்னு விட்டுட்டீங்களடீன்னு கத்தறாங்க.''

''தப்புதாங்க.'' பார்த்தசாரதி விஜயாவை நோக்கிக் கை கூப்பினான்.

''இப்பவே வளர்மதியக் கூடக் கூட்டிட்டுப் போகலாம். அது தப்பா முடியும். வளர்மதியும் வராது. ரெண்டு வருஷம், ரெண்டே வருஷம் நான் நிமிர்ந்துடுவேன். வளர்மதிக்கு அங்கேயே நல்ல பையனாப் பார்ப்பேன். மலையாளத்தானோ, ஆந்திராக்காரனோ, மார்வாடியோ, தர்ம நியாயத்துக்குக் கட்டுப்பட்டவனாப் பார்ப்பேன்.''

''நீங்க பண்றது தர்ம நியாயமா.'' விஜயா கேலியாகச் சிரித்தாள்.

''ஊர் கண்ணுக்கு இது அநியாயம்தான். கள்ளத்தனம்தான். ஆறுமாசத்துக்கு முன்னாடி மணிமேகலையை நான் அப்படி நினைச்சுக்கூடப் பார்க்கல, வளர்மதி வளர்மதின்னு கவிதை எழுதிக்கிட்டிருந்தேன். தங்கைக்காக கஷ்டப்பட்டு, என்மேல் மதிப்பு வச்சு. இவுங்க வாங்கற அடி உதை என்னைக் கலக்கிடுச்சு.''

''இவங்களை விடக் கஷ்டப்படற பொண்ண பார்த்தா இன்னொரு தடவை கலங்குவீங்களோ?''

''இது தப்புன்னு உங்களுக்குப் பட்டிருச்சில்ல, தொடர்ந்து நாங்கதப்புதான் பண்ணுவோம்னு தோணும். மணிமேகலை மாதிரி ஒரு பொம்பளை கிடைக்கறது ரொம்பக் கஷ்டங்க. வளர்மதி கிடைக்கும். சுலபமா கிடைக்கும்.''

''ஊருடன் பகைக்க வேருடன் கெடும்...''

''வேரு பாவ முடியாதுன்னு தானே ஓடறோம், வேர்ல வெந்நீர் ஊத்திட்டாங்கன்னு தானே ஓடறோம். இங்கேயிருந்தா பட்டுப் போயிடுவோம்னு தானே ஓடறோம்.'' மணிமேகலை நிதானமாய் பேசினாள்.

''தொரத்தமாட்டாங்களா? போலீஸ் புகார் வராதா?''



''இந்தியா பெருசுங்க, எப்படித் தப்பிச்சுக்கறதுங்கறது எனக்குத் தெரியும்.'' அவன் பதில் சொன்னான்.

''அதையும் தவிர எங்களைத் தேடமாட்டாரு.''

''வளர்மதிய கட்டிக் கொடுன்னு உங்கம்மாகிட்டே வந்து கேட்டா?''

''எட்டு வருஷத்துக் கதையையும் எங்கம்மாகிட்டே சொல்லிட்டேன். எங்கம்மா கட்டித்தராது. அதையும் தவிர வளர்மதிக்குத் துணையா நீங்க இருக்கணும்.''

''ரெண்டு வருஷங்க ரெண்டே வருஷம். வளர்மதி, வளர்மதி அம்மா எல்லாரும் எங்களோட இருக்கலாம்.'' பார்த்தசாரதி மிகவும் உறுதியாகச் சொன்னான்.

''இந்தப் பொட்டி எதுக்கு?''

''இது காலிப் பெட்டிங்க, என் துணிமணிங்க நாலைஞ்சு இடத்ல வச்சிருக்கேன். அதை எடுத்தாந்து, இதிலே வச்சு இங்கேயிருந்து கிளம்பிடுவோம். எங்க வீட்டுலேர்ந்து எங்க அம்மாவை உதறிக் கிளம்பறது கஷ்டம்.''

''உங்கம்மா கதி?''

''எனக்கு அண்ணன், அண்ணி இருக்காங்க. அண்ணியோட தங்கச்சிய எனக்கு கட்டி வைக்கத்தான் முழு முனைப்போட இருக்காங்க. தயவுசெய்து இங்கேயிருந்து கிளம்பற ஒரு உதவிய மட்டும் பண்ணணும்.''

விஜயா திணறினாள்.

வம்பு வருமா என்று பயந்தாள்.

மரபு மீறலுக்கு மரபோடு உள்ளவள் துணை போகலாமா என்று அஞ்சினாள்.

வளர்மதி...வளர்மதி...வளர்மதி என்ன சொல்லுவாள்? வளர்மதியல்லவா முக்கியம் எனக்கு என்று யோசித்தாள்.

கண்களை மூட, நெஞ்சு முழுக்க சிகரெட் சூடு பட்ட, மணிமேகலையின் மார்பு ஞாபகம் வந்தது.

எது சரி? எது தவறு? மனசு ஊஞ்சலாடியது.

சிறிது நேரம் யோசித்துவிட்டு 'சரி' என்று சொன்னாள்.

ஸ்வீடனில் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை தொண்ணூற்றி ஆறு சதவிகிதப் பெண்கள், புருஷனை மாற்றுகிறார்கள். இது உண்மையா? பொய்யா? சரியா? தவறா?

விஷம்குடி...விஷம்குடி. புருஷன் நீட்டுகிறான். மனைவி வாங்கிக் குடிக்கிறாள்.

அவள் அட்டிகையை விற்று அவளைக் காப்பாற்றுகிறான்.

''உன்னால எனக்கொரு உபயோகம் இருக்கு. உன் தங்கச்சிய கொடு'' வெட்கமின்றி கேட்கிறான்.

''வெச்சு வியாபாரம் பண்ணுவேன்.'' கொக்கரிக்கிறான்.

இப்போது வளர்மதி மார்பு முழுக்கவும் சிகரெட் சுட்ட தழும்பு இருக்கும். வியாபாரத்தில் ஈடுபடுத்த அடி, உதை கிடைக்கும். ச்சே ஏன் இப்படி? எதனால் இப்படி?

ஒரு ஏ. கே. ஃபார்ட்டி செவன் என்ன விலை? எங்கே கிடைக்கும்? எல்லா ஆண்களையும் நிற்க வைத்து எப்போது சுட முடியும்?

எல்லா ஆண்களையுமா? எல்லா ஆண்களையுமா? இந்தப் பார்த்தசாரதியை ஏன் சுட வேண்டும்? என் புருஷன் வீழிநாதன்போல எவரும் உண்டா?

''நிலவில் வசித்த முயலின் பரிசு நியூட்ரின் சாக்லேட் சுவைத்துப் பாரு.''

என்னுடைய இந்த இனிப்பு வாழ்க்கை என் புருஷன் கொடுத்த பரிசல்லவா?



என் புருஷன் நிலவு போன்று இனிமையானவனல்லவா? அவன் பூரண சந்திரன் அல்லவா?

சந்திரனில் களங்கம் உண்டு. என் புருஷனிடமும் சில குறைகள் உண்டு. ஒரு வேளை ஹைதராபாத்தில் டெம்பரரியாய் ஒரு பெண்டாட்டி வைத்துக் கொள்ளுமோ? இருக்காது. அந்த ஆட்டமெல்லாம் ஓய்ந்து போய் விட்டது. அந்த ஆட்டமெல்லாம் பழைய கறைகளாக இருக்கின்றதே தவிர, வாழ்க்கைப் புடவையை கிழித்து விடவில்லை.

இதோ இவள் கிழித்து தொங்குகிறாள். சூடுபட்டுத் தவிக்கிறாள். இவளைத் தோள் கொடுத்து இவன் காப்பாற்றுகிறான்.

வளர்மதிக்கும் முத்தம் கொடுத்து விட்டானே. அது கறையில்லையா?

இல்லை. அது தூசு. உதறினால் பறக்கும் தூசு.

வளர்மதி உதற வேண்டும்.

இவர்கள் வாழ வேண்டும்.

என்ன செய்வது!

பெட்டி இங்கேயே இருக்கட்டும். இங்கிருந்து போகட்டும். என்னை யார் எது செய்துவிட முடியும்?

பெண்ணுக்குப் பெண் உதவாமல் யார் செய்யமுடியும்? நாளைலேர்ந்து வளர்மதிகூட வேலைக்கு வரவேண்டாம். உதறலாமா? உதவி மறுக்கலாமா?

எனக்குத் தெரியாதடியம்மா. உன் பாடு. அவன் பாடு.

''ச்சீ—இது கோழைத்தனம்.''

ஆபத்துக்குதவா பிள்ளை.

அரும்பசிக்கு உதவா அன்னம்.

தாகத்தை தீரா தண்ணீர்.

நான் ஏன் இப்படியிருக்க வேண்டும்? வெறும் லேடீஸ் கிளப் வீரம் மட்டும்தானா எனக்கு?

வீழிநாதன் என்ன சொல்லுவான்?

திட்டுவான்.

உனக்கேன்டி இந்த வேலை? ஒருநாள் நீயும் ஓடிப் போகலாம்னு பார்க்கறியா?

காரமாய்க் கத்தல் வருமோ?

விளையாட்டாய் இப்போது பேசுவது வினையாகுமோ?

ஃபோன் பண்ணி பேசலாமா?

என்ன பேசுவது டெலிஃபோனில் எவ்வளவு சொல்வது?

வீழிநாதன் வீட்டிலிருந்தால், வளர்மதியோடுகூட பேசியிருக்க முடியாது. வளர்மதியும் பேசியிருக்கமாட்டாள்.

இது தேவையில்லாத வேலையா? தேவையில்லாத உபத்திரவமா?

இது போலீஸ் கேஸ் ஆனால், நான் சாட்சி சொல்ல வேண்டி வருமோ?

மணிமேகலை புருஷன் அரிவாளோடு வருவானா?

ஏய் கேடு கெட்ட பாப்பாத்தி, வெளில வாடீ, கத்துவானா? ஜாதியை இழுப்பானா?

நானும் மணிமேகலையும் வெவ்வேறு ஜாதியா?

இரண்டு பேரும் பெண்ணில்லையா? பெண்ணே பெண்ணை அறிந்து கொள்ளாமல் போனால் ஆண் எப்படி அறிந்து கொள்வான்?

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள். இந்த கோஷம் உண்மையெனில், 'உலகப் பெண்களே ஒன்றுபடுங்கள்' சொல்லக்கூடாதா?

லேடீஸ் கிளப்ல பேசி, எல்லாரையும் கன்சல்ட் பண்ணி, கொஞ்சம் காசு கலெக்ட் பண்ணி, நல்ல வக்கீல் வச்சு, சட்டப்பூர்வமா ஒரு டைவர்ஸ் வாங்கலாமா மணிமேகலைக்கு?



அந்தப் போராட்டம் இவர்களால் தாங்க முடியுமா?

பெட்டியோடு வந்திருக்கும் பையனை போ என்பதா? எனக்குத் தெரியாது, காலிபண்ணு என்பதா? மணிமேகலை அழகி, அறிவாளி, நல்லவள், அன்புக்கு ஏங்குகிறவள், அன்பாய் இருக்கிறவள், அவளை மறுத்து அனுப்புவதா?

'நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடீ சிவசக்தி-என்னைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மானுடம் பயனுற வாழுவதற்கே.

எனக்கா சுடர் அறிவு. இத்தனை குழம்புகிறேனே.

விஜயா உனக்கு இது தேவைதானா? யோசிக்க யோசிக்க குழப்பம்தான் வந்தது.

''கஷ்டமாயிருந்தாச் சொல்லுங்க. நான் பொட்டிய எங்கேயாவது வச்சுக்குவேன்.''

''பெட்டிய வைக்கணும். அவ்வளவுதானே?''

''இருக்கட்டும் எப்ப வேணாலும் வந்து எடுத்துக்கிட்டுப் போங்க'' விஜயா தீர்மானம் செய்தாள்.

தயவு செய்து வளர்மதிகிட்ட இதுபத்தி பேசாதீங்கம்மா. அவ சின்ன பொண்ணு. அவளுக்கு இது புரியாது. மணிமேகலை கேட்டுக் கொண்டாள்.

அவர்கள் புதிய தகரப் பெட்டியை சோபாவுக்கு பின்னால் மறைத்த விதமாய் வைத்துவிட்டு போனார்கள். அந்தப் பெட்டியை பார்க்கும்போதெல்லாம் விஜயாவுக்கு கலவரம் வந்தது.

இந்த பெட்டி வாழுமா? சாகுமா? கேள்வி வந்தது.

''எங்கக்கா என்னாம்மா சொல்லுச்சு?''

மறுநாள் வளர்மதி கேள்வி கேட்டாள்.

''ஏன் நேத்து சாயந்திரம் வேலைக்கு வரலே?'' விஜயா வேறு கேள்வி கேட்டாள்.

''மணிமேகலை புருஷன் குடிச்சுட்டு வந்துட்டாரு, வந்து ஒரே அழுகை. என்னை இரண்டாந்தாரமா கேட்கறாரும்மா எங்கம்மா கத்தி, நல்லா திட்டிவுட்டுட்டாங்க கட்டிக் கொடுத்த பொண்ணைக்கூட அனுப்ப முடியாதுடான்னுட்டாங்க''

''அப்புறம்?''

''அந்தாள் அக்காளை அடிக்க வந்தான்.''

''ஐயோ.''

''அக்கா அரிவாளை எடுத்துக்கிட்டு, கிட்ட வந்தே ஒரே வெட்டா வெட்டிருவேன்னுச்சு. பக்கத்துல இருக்கறவங்க அத்தானை கழுத்தப் பிடிச்சுத் தள்ளிட்டாங்க. புடவைல நெருப்பு புடிச்சா மாதிரி வீடு முழுக்க அலறல் அழுகை.''

''என்னதான் முடிவு இதுக்கு?

''எனக்குத் தெரியலையேம்மா. எங்கம்மா வேலையரிசைன் பண்ணப் போவுது.

அந்த வேலைய எனக்கு வாங்கித்தரப் போவுது நான் சரின்னுட்டேன். இப்போதைக்கு எனக்கு கல்யாணம் இல்லை. இத்தினி கலாட்டா இருக்கற குடும்பத்துல யார் பெண் கேட்டு வருவாங்க?''

''பார்த்தசாரதி அங்க வந்தாரா?''

''இல்லையே, ஏம்மா கேட்கறீங்க. இங்க வந்தாரா?''

''இல்லை.'' விஜயா பொய் சொன்னாள்.

''நான் பார்த்தசாரதிய மறந்துட்டேன். எந்த ஆம்பளையும் வாணாம். கல்யாணம் காட்சியே வேணாம்.



பேசாத கிறிஸ்தவ மதம் மாறி கன்னிமாடத்துல சேர்ந்து...''

''வளர்மதி...''

''வெறுத்துப் போச்சும்மா. எந்த ஆம்பளையக் கண்டாலும், பதினைஞ்சு வயசு பையனைப் பார்த்தாலும் பயம்மாதான் இருக்கு.''

''எல்லாரும் அப்படி இல்லே வளர்மதி. உனக்கு நல்லவன் கிடைப்பான்.''

''நான் ஆஸ்பத்திரி வேலைக்குப் போய்ட்டா இங்க வரமுடியாதும்மா.''

''பரவாயில்லை...''

''இன்னிலேர்ந்தே நின்னுக்கட்டுமா?''

''செய்.''

''இதுக்கு கோவமில்லையே?''

''இல்லை வளர்மதி...''

''அப்பப்ப வந்து பார்த்துட்டு போறேன்''

''செய்.''

''எங்கக்கா, நான், எங்கம்மா எங்க வீடே அல்லி ராஜ்யமா மாறும். பொம்பளை வச்சதுதான் சட்டம்.''

''ஆமாம்.''

''ஏம்மா பேசமாட்டேன்றீங்க?''

''தலைநோவு வளர்மதி.''

''நான் வரட்டுமா?''

''இரு.''

உள்ளே ஓடி ஒரு புதுப்புடவை, ரவிக்கைத் துணி, முந்நூறு ரூபாய் வைத்து தட்டு நீட்டினாள்.

''என்னம்மா இது?''

''ஒரு பிரியம் வளர்மதி.''

''ரொம்ப பிரியம். எங்கக்கா கூட உன்னை ஓஹோன்னு பேசுது. என்னம்மா சொல்லிச்சு, எங்கே அக்கா?''

''எப்ப என்ன உதவி வேணும்னாலும் என்னை கேளு வளர்மதி. என்னால முடிஞ்சதை செய்யறேன். ஆஸ்பத்திரி வேலை நல்லா கத்துக்கோ.''

''சரிம்மா. நான் வரேன்.''

''செய்.''

''அம்மா?''

''என்ன?''

''வுழுந்து கும்பிடறேன்.''

கும்பிட்டாள் கண்களை பிடுங்கிக் கொண்டு கண்ணீர் விஜயாவுக்கு முட்டியது.

வளர்மதி கதவு மூடி வெளியே இறங்கினாள். வாய் விட்டு அலற வேண்டும் போல் விஜயாவுக்குத்தோன்றியது.

அந்தப் பெட்டியை எடுத்து நடு ஹாலில் வைத்துப் பார்த்தாள், இது வாழுமா? சாகுமா?

வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

பிள்ளை ஓடிப்போய் திறந்தான்.

வளர்மதி.

''என்ன வளர்மதி?''

''நேத்து ஒரு புடவை கொடுத்திங்கம்மா. அது தோய்க்கப் போட்டிருக்கேன். இப்ப இது இரண்டுமே...''

''இருக்கட்டும் வளர்மதி. உனக்கு தேவைப்படும். வேலைக்கு போறியே.''

''ரொம்ப தேங்ஸ்ம்மா.''

''ஐயா வந்துட்டாரா பொட்டி இருக்கு.''

''இல்லை. இன்னும் வரலை. இது வேற பொட்டி.''

''வரேம்மா.''

வளர்மதி, கதவு சார்த்தி வெளியேறினாள்.



பெட்டியை அவர்கள் எடுத்துப் போக நாலு நாட்கள் ஆயின.

திடீரென்று ஒரு நாள் காலையில் மணிமேகலை கையில் தனி பெட்டியும், தோள் பையும் இருந்தது. கழுத்தில் நகைகள் இருந்தன.

பார்த்தசாரதி அந்த புது தகரப் பெட்டி திறந்து தன் துணிகள் அடுக்கினான் நிமிர்ந்தான்.

''அப்ப நாங்க வரோங்க.''

இருவரும் கை கூப்பினார்கள்.

''நாங்க செய்யறது சரியா, தவறா இதுபத்தி கவலை இல்லைங்க. சாவற முட்டும் நான் மணிமேகலையை கை விடமாட்டேன். இது சத்தியம்.''

''என்னடா தேவையில்லாத நம்மகிட்ட சத்தியம் பண்றானேன்னு தோணுதா? யாராவது ஒரு நல்லவங்ககிட்ட சத்தியம் செய்தா அது நமக்கு நாமே செய்துகிட்ட மாதிரி. வளர்மதி மனசு கஷ்டப்பட்டு இங்கே வந்து அழலாம். அதை மனசு தேத்தி நல்லபடியா மாத்தறது உங்க பொறுப்பு'' பார்த்தசாரதி பேசினான்.

''நீங்க கொடுத்த புடவையை கட்டிக்கிட்டு நிக்குது. என்ன அழகா இருக்குத் தெரியுங்களா? அவகிட்ட சொல்லுங்க.''

''ஆள் தெரியாத கழுத்த நீட்ட வேணாம்னு சொல்லுங்க. உங்ககிட்ட பேச பேசத்தான் எனக்கே உள்ள ஒரு தெளிவு வந்துச்சு. நான் வரட்டுமாம்மா.'' மணிமேகலை கை கூப்பினாள்.

''காசு இருக்கா?''

''இருக்கும்மா, பனிரெண்டாயிரம் இருக்கு.''

''எங்க...?'' மெல்ல இழுத்தாற்போல் விஜயா கேட்டாள்.

''டெல்லி. தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்ல போறோம். டிக்கெட் போய் எடுக்கணும்.''

''கூட்டமா இருக்குமே.''

''எப்படியும் எடுத்து போயிடணும்.''

அவர்கள் விடைபெற்றார்கள்.

மாடியிலிருந்து எட்டி விஜயா பார்த்தாள்.

புது தகரப் பெட்டி பளபளத்தது.

அந்தப் பெட்டி வாழுமா, சாகுமா?

'ச்சேய் என்ன கேள்வி. வாழட்டும்; நல்லபடி வாழட்டும்'

பெரிய பெட்டி ஆட்டோவுக்குள் போகவில்லை. அவன் முழங்காலில் இடித்தது. அவன் வலியில் குனிவது தெரிந்தது.

வீட்டுக்குள் போன் ஒலித்தது.

''குட்டி கிளம்பி வரேன்.''

''எப்போ?''

''ஏர்போர்ட்லேர்ந்து பேசறேன். இன்னும் இரண்டரை மணி நேரத்துல வீட்ல இருப்பேன். அட்வான்ஸ் வாங்கிட்டேன். எத்தினி சொல்லு?''

''டோக்கன் அட்வான்ஸா?''

''சொல்லு பார்க்கலாம்.''

''அம்பதாயிரமா?''

''நோ''

''லட்சமா''

''நோ''

''எவ்வளவு?''

''மூணரை லட்சம், சிங்கிள் செக்.''

''மை காட். கங்கிராஜுலேஷன். எது அப்ரூவ் ஆச்சு? எந்த ஸ்லோகன்?''

''நிலவில் வசித்த முயலின் பரிசு

நியூட்ரின் சாக்லேட் சுவைத்துப் பாரு.''

''க்ரேட். அகெய்ன் கங்கிராஜுலேஷன்.''

''தேங்க்யூ''



''ராத்திரி புது பெட்ஷிட் போட்டு பாலு காச்சி வை. மல்லிப்பூ, லிப்ஸ்டிக் எல்லாம் போட்டு ரெடியா இரு.

''கடவுளே! ஏர்போர்ட்லேர்ந்து கத்தறீங்களே இப்படி.''

''யாருக்கும் தமிழ் தெரியாது. இது ஹைதராபாத். மனவாடு வேறு லேது, வெச்சிட்டா? பைபை.''

படுக்கைக்குப் புது பெட்ஷிட் மாத்தினாள். கூட இரண்டு முழம் மல்லி வாங்கினாள். சுவாமி படத்துக்கு போட்டு தலைக்கு வைத்துக் கொண்டாள். அவன் வரும் நேரம் கணக்கிட்டு, வரும் முன்பு மெல்ல லேசாய் உதடு எழுதினாள்.

'கயல் எழுதி, வில் எழுதி

கார் எழுதி,

காமன் பெயர் எழுதி

பூத்த முகம் திங்களோ காணீர்.

சிலம்பு நெஞ்சில் நாட்டியமாய் துள்ளியது.

மூணரை லட்சம். அட்வான்ஸே மூணரை லட்சம். பெரிய ஆர்டர், பெரிய வேலை. பெரிய கம்பெனி.

நிலவில் வசித்த முயலின் பரிசு

மூணரை லட்சம் சுவைத்துப் பாரு.

என்னென்ன செலவு. எது எது புதுசு வாங்கலாம். வேற கட்டில், பாத் டப், ஹாலில் ஒரு ஏஸி. கீழே கம்பளம்? காஷ்மீர் கம்பளம். டிஸ்கோ தங்கச் செய்ன். சிகப்புக்கல் இரட்டை வளையல். இம்போர்டட் ஷாம்பூ காஸ்மெடிக் செட்.

வளர்மதி வருவதாய் இருந்தால் ஆயிரம் சம்பளம் கொடுத்து வீட்டோடு வைத்துக் கொள்ளலாம். சமையல் செய்து வை என்று கற்றுக் கொடுக்கலாம்.

''டெல்லி வண்டி ஏறிவிட்டிருப்பார்களா?''

''வளர்மதிக்கு தெரிய வருமா?''

''தெரிந்தால் என்ன நடக்கும்?''

''வந்து அழுவாளா?''

''சொல்லாத ஓடிப்போய்ட்டாங்கம்மா. கூதறு வாளா?''

''விடுடி, போட்டம்.''

''உன்கிட்ட சொன்னாளா?''

''சொன்னா? சொல்லலை உனக்கென்ன அதுபத்தி?''

கார் சப்தம் கேட்டது, டாக்ஸியில் புருஷன் வந்து இறங்குவது தெரிந்தது.

சட்டென்று கண்ணாடி முன்பு நின்று மறுபடி உதடு எழுதினாள்.

கயல் எழுதி, வில் எழுதி,

கார் எழுதி,

காமன் பெயர் எழுதி,

பூத்த முகம் திங்களோ காணீர்.

காசோலையை வந்தவுடன் நீட்டினான்.

வாங்கி கண்ணில் ஒற்றி சுவாமி படத்தில் வைத்து விழுந்து வணங்கினாள்.

'கடவுளே என்னைப்போல் எல்லோரும் சந்தோஷமாய் இருக்கட்டும்.'

புருஷன், பேண்ட் சட்டை போட்டபடி ஹைதரா பாத் கதை சொல்ல வாய் பிளந்து கேட்டாள்.

பிள்ளைக்கு விதவிதமாய் சாக்லேட் வாரிக் கொடுத்தான். ஒன்று பிரித்து அவள் வாயில் போட்டான்.

''போய் உன் சிநேகிதிங்களுக்கு கொடுடா'' அப்பா சொல்ல பிள்ளை கொத்தாய் வாரிக்கொண்டு ஓடிற்று.

பெண்டாட்டி வாயில் போட்ட சாக்லேட்டை உதடு கவ்விதான் வாங்கினான்.



'டெல்லி வண்டில ஏறிட்டிருப்பாங்களா?' சம்பந்தமில்லாது விஜயாவுக்கு கேள்வி வந்தது.

பேசியபடியே உணவு தயாரித்தாள். அவனுக்கு முதுகு தேய்த்துக் குளிப்பாட்டினாள். உணவு பரிமாறினாள். ஹால் ஏ. ஸி. புதிய கட்டில், டிஸ்கோ செயின் பட்டியல் அடுக்கினாள்.

பிள்ளையும் விளையாட்டுச் சாமான்கள் கேட்டது.

அவன் சகலத்துக்கும் வாக்குறுதி அளித்தான். மேஜை விளக்கடியில் மடமடவென்று நிறைய கணக்குப் போட்டான்.

பிள்ளை கால் பரப்பித் தூங்கியது.

இறக்குமதி செய்யப்பட்ட விளம்பரம் பற்றி புத்தகங்களிலிருந்து மாடல்கள் குறித்தான். வாசகங்கள் காப்பி எடுத்தான்.

''நாளைக்குப் பாாத்துக்கலாமே.'' அவள் தோளில் கை வைத்தாள்.

''இப்ப படுத்துக்க வாங்கறியா?''

''ச்சைய்.''

''வேண்டாஙகறியா?''

''அய்யாவ்''

''நான் ரெடி. ஆமா அது யார் மணிமேகலை?''

''எவளோ ஒருத்தி. இப்ப எதுக்கு அந்தப் பேச்சு?''

''வேற என்ன பேசறது?

''வேற எதாவது.''

''காதல் மடப்பிடியோடும்

களிறு வருவனக் கண்டேன்.'' பாடினான்.

''என்ன இது?''

''பாட்டு. யானைக்கனவு. நேத்து இரண்டு யானை, ஆணும் பெண்ணுமாய் பிளிறி நிற்கிறது''

''யானைக்கனவு நல்லதும்பாளே''

"ரொம்ப நல்லது. இனி ஓஹோன்னு தூக்கிடும். பிஸினஸ்."

"எத்தனை உழைப்பு?"

"இனிமேதான் உழைக்கணும்."

"ஏய்?"

"நான் அதச் சொல்லலை விஜயா."

"ஏய்."

"சரி, அதுதான் சொன்னேன்."

விட்டத்தில் ஒரு சிலந்தி, இழுத்து இழுத்து வலை பின்னியது. புருஷன் உதடு கௌவினான்.

'டெல்லி வண்டி போயிருக்குமா? எத்தனை மணிக்கு தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்? புருஷனை கிழே நகர்த்தி கேட்க லமோ? வேண்டாம். எத்தனை மணிக்கு எது கிளம்பினால் எனக்கு என்ன?'

விடிந்தது. அசைந்து புரள, இடுப்பு வலித்தது. எழுந்து நிற்க நடை தள்ளாடியது. வீழிநாதன் ஒற்றைக் காலில் நிற்பது போல் குப்புறப்படுத்துக் கிடந்தான். அவனுக்கு போர்த்திவிட்டாள்.

தலையை முடிந்து கதவு திறந்தாள்.

ஹாலுக்கு வாசலின் நடுவே நாலு பேப்பர்கள் இருந்தன. ஹிண்டு, எக்ஸ்பிரஸ், தினமலர், தினத்தந்தி, அவன் தொழிலுக்கு எல்லா பேப்பரும் தேவை.

'கார்பசேவ் விலகினார்.'—ஹிந்து.

'மத்திய அமைச்சரவையில் மாற்றம் வரும்'' எக்ஸ்பிரஸ்.

'எம். ஜி. ஆர். சமாதி புதுபிக்கப்படும். தமிழக முதல்வர் அறிவிப்பு.'—தினமலர்.

'காதலனை வெட்டிக் கொன்ற கணவனை மனைவி குத்திக் கொலை.'—தினத்தந்தி.

விஜயா தினத்தந்தி பேப்பர் படித்தாள்.



'சென்னை சென்ட்ரலில் தன் காதலனை மடக்கி வெட்டிய கணவனைக் கடப்பாரையால் அவன் மனைவியே குத்திக் கொலை செய்தாள்.'

'கள்ளக் காதலனுடன் ஊரைவிட்டு ஓடும் முயற்சியைத் தடுத்ததால் கோபமடைந்த மனைவி நடு சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கிழே கிடந்த கடப்பாரை எடுத்து கணவன் நெஞ்சில் குத்தி கொல்ல...'

விஜயாவின் கண்கள் இருண்டன.

"யார்? யார்?"

சென்னை எருக்கஞ்சேரியைச் சேர்ந்த சண்முகம் (40) அவருடைய மனைவி மணிமேகலை (30) தன் கள்ளக் காதலன் பார்த்தசாரதி (27) யுடன் ஊரைவிட்டு தமிழ் நாடு எக்ஸ்பிரஸில் ஓட முயற்சிக்கையில்...'

கடவுளே.

"போலீஸ் வருமா?"

"கேட்குமா?"

புருஷனை எழுப்பினாள்.

விவரம் சொன்னாள்.

அவன் மொத்தமும் படித்தான். முற்றிலும் கேட்டான்.

"என்ன விஜயா, இன் வாட் வே யூ ஆர் கனெக்டட்?"

"இங்கே இருந்துதான் பொட்டி எடுத்துண்டு போய்ட்டு வரேன்னு சொல்லிட்டு போனா,"

"இது யாருக்குத் தெரியும்?"

"யாருக்கும் தெரியாது. மணிமேகலை பார்த்தசாரதி தவிர..."

"மணிமேகலை உன் பேரைச் சொன்னா கஷ்டமாச்சே. நீ வாழ்த்தி அனுப்பினேன்னு போலீஸ்க்கு தெரிஞ்சா? இங்கியும் வருமே, இங்க குடியிருக்கறவா தினத்தந்தி பார்த்துட்டு இந்தப் பொண்ணு இப்படி போச்சுன்னாலும் தகராறாகுமே."

''கேஸ் போடுவாளா?''

''சாட்சிக்குக் கூப்புடுவா.''

''எதுக்கு சாட்சி?''

''ஊர் விட்டு ஓடினதுக்கு.''

''கேஸ். ஓடினதுக்கா? கொலைக்கா?''

வீழிநாதன் யோசித்தான்.

''ஆயிரம் பேர் கண்ணெதிரே நடந்த கொலை. நீ என்ன சாட்சி? தேவையில்லை. வராது. மணிமேகலையா உன் பேர் சொன்னாலொழிய....''

''மணிமேகலை சொல்லமாட்டா.''

''சொல்லிட்டா. உனக்கேன் இது? நாலு நாள் ஊர்ல இல்லைன்னா தேவையில்லாத வம்பை விலைக்கு வாங்கணுமா?''

''அவளா வந்து—''

''வெளிய போன்னு சொல்ல வேண்டியதுதானே.''

''எப்படி சொல்றது?''

''அட்சதை போட்டு அனுப்பினியாக்கும். இங்க வந்து அவ புருஷன் வெட்டினான். உன் கதி என்ன? என் நிலை என்ன?''

''அவளுடைய புருஷன் ரொம்ப கொடுமைபடுத்தி... மார்ல சிகரெட்டால சுட்டு.''

''நாம என்ன பண்ணமுடியும் விஜயா?''

''நான் எதுவும் பண்ணலை. பொட்டி நாலு நாள் இருந்தது இங்கே.''

''வளர்மதி என்ன ஆனா?''

''தெரியலையே.''

''நீ வீட்ல இரு. நான் போய் பார்த்துட்டு வரேன். அனாவஸ்யமா கதவு திறக்காதே.''

''போலீஸ் வருமா?''



''வராது.''

''நானும் வரட்டுமா?''

''வாணாம்.'' யோசித்தான். ''சரி வா. புள்ளைய பள்ளிக்கூடத்துக்கு அனுப்பு. அவர் கிட்ட பேசாதே இதை.''

வளர்மதி, வீட்டு வாசலில் கார் நிறுத்தினான். அவன் மட்டும் கீழிறங்கி விசாரித்தான். அவள் காருக்குள்ளே நகம் கடித்துக் கொண்டிருந்தாள்.

வளர்மதி கலைந்த தலையும், கசங்கிய புடவையுமாய் வெளியே வந்தாள். அது விஜயா கொடுத்த புது புடைவை.

''வளர்மதி...'' விஜயா தாங்காமல் இறங்கி ஓடினாள்.

''அக்கா குத்திடுச்சும்மா, ஒரே குத்து. நெஞ்சுல குத்தி முதுகுல வந்துருச்சா, பார்த்தசாரதி கழுத்துல வெட்டி அது பார்த்ததும் ஐயோன்னு கத்துச்சாம். சட்டென்று இருவதடி ஓடி கடப்பாரை எடுத்து வந்து ஒரே குத்து. நெஞ்சுல குத்தி முதுகுல வந்துருச்சு. அக்கா அழவேயில்லை. பேசாத உட்கார்ந்துருச்சு.''

''அக்காவ ஸ்டேஷன்லதான் வெச்சுருக்காங்க. காலை நான் காப்பி, இட்லி கொடுத்துட்டு வந்தேன். விவரமா எழுதி கையெழுத்து வாங்கிட்டாங்க.''

''பத்து வருஷம் போடுவாங்க. ஏழு, எட்டு வருஷத்துல வந்துருவேன். நான் வந்துட்டா நீ, நானு, அம்மா, அல்லி ராஜ்யம்தான். பொம்பளை சட்டம்தான். பயப்படாதேன்னுச்சு...''

''ஏம்மா அக்காக்கு வக்கீல் வைக்கலாமா? உங்க லேடீஸ் கிளப்புல வெவரமா எல்லா கொடுமையையும் சொல்லி... தண்டனை குறைக்கலாமா?''

''அந்தப் பொட்டி...'' வீழிநாதன் குறுக்குப் பேசினான்.

''அது சொல்லலை.ஸ்டேஷன்ல பொட்டி பார்த்ததும் தெரிஞ்சு போன எனக்கு அது நம்ம வீட்ல பார்த்த பொட்

டின்னு. அக்காகிட்ட கேட்டேன். அவங்களை பத்தி சொல்லக்கூடாதுடி. நான் நம்ம வீட்லேர்ந்து கிளம்பி னேன்னு சொல்லிட்டேன்னுச்சு.''

''ஏம்மா அக்காவ பார்க்கலாம், வரீங்களா? நீங்ககூட இருக்கீங்கன்னு தெரிஞ்சா நல்லதில்லையா? ஒரு வக்கீல் வைக்க மனு எழுதி கேஸ் வாதாட ஐயா யோசனை சொல்லமாட்டாரா?''

''பார்த்தசாரதி சொல்லுச்சாம், சாவற முட்டம் உன்னைக் கைவிடமாட்டேன்னு. வெட்டு வாங்கறப்பவும் கையை விடலையாம். பார்த்தசாரதி நல்ல ஆம்பளை. எங்கக்காவும் நல்ல பொம்பளை.''

''வளர்மதி...'' விஜயா அலறி அவளைத் தழுவிக் கொண்டாள். வளர்மதி அழுதது.

வீழிநாதன் அருகில் உள்ளவர்களிடம் பேசி வளர்மதி யின் அப்பா பெயர், அம்மா பெயர், வீட்டு விலாசம் எல்லாம் குறித்துக் கொண்டான்.

வழக்கு நடத்த வேண்டுமே. வாதாட வேண்டுமே.

''யுவர் ஆனர். சட்டப்படி மணிமேகலை என்பவர் இரண்டு குற்றங்கள் செய்திருப்பினும் இந்தக் குற்றங் களுக்கு காரணமாய் உள்ள நிலைமையை கருணையோடு பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.''

வழக்காட வேண்டுமே.

கோர்ட் கருணையோடு பார்க்கிறதோ, பார்க்கவில் லையோ. நம்மால் கருணையோடு பார்க்க முடியுமா? யோசிக்க முடியுமா? மணிமேகலை, வளர்மதி, விஜயா எல்லாரையும் எல்லா பெண்களையும் கருணையோடு பார்க்க முடியுமா?

□ □ □

# என்னருகில் நீ இருந்தால்...

இப்படி ஒரு கோயில் நீங்கள் கட்டிய பிறகு வேறு எவரும் இதுவரை எங்கேயும் கட்டவில்லை. ஆயிரம் ஆண்டுகள் ஆயிற்று. இன்னும் கம்பீரம் குலையாமல் இருக்கிறது பாருங்கள்.''

''முன்பக்க மண்டபம் இடிந்து விட்டது''

''ஆம். கோயில் விமானம் ஒட்டி யாகசாலை கட்டப் பட்டிருந்தது. அதன் மேல் மாடம் மட்டும் விழுந்து விட்டது.''

''நிருத்த மண்டபத்தின் தூண்கள் மட்டும் நிற் கின்றன.''

''உண்மை. பல அற்புத நாட்டியங்கள் நடந்த மண்டபம்.''

''ஓவியத்தில் உங்கள் உருவம் பார்த்தபோது அழுது விட்டேன் மன்னரே—

''அட்டங்கால் போட்டு தாடியும், மீசையும் அள்ளிச் சொருகிய கொண்டையுமாய் எங்கள் இராசராசர்... எங்கள் இராசராசர் என்று கூவத் தோன்றியது.''

''இனி கூச்சல் எதற்கு? எல்லாம்தான் அடங்கி விட்டதே.''

''அடங்கி ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று இராசராசரே.''

''நாம் மட்டும் இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறோம். பிரகதீஸ்வரரையே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.''

''எல்லோருமில்லை—நாமும் இன்னும் சிலரும்.''

''யார் இல்லை?'' மாமன்னர் கேட்டார்.

''காரி குளிப்பாகை. இடங்கை படையினர் தலைவன்''

''என்ன ஆயிற்று?''

''பிறந்திருக்கிறான்.''

''அப்படியா? ஏன்... எங்கே?''

''யாரது... மாமன்னர் இராசராசன் காரிக்குளிப்பாகை எங்கே பிறந்திருக்கிறான் என்று கேட்கிறார். எவருக்கேனும் தெரியுமா? காரிக்குளிப்பாகை—இடங்கைப் படையினரின் தலைவர் காரிக்குளிப்பாகை.''

அந்த இருளில் அவர்கள் நிசப்தமாய் இருந்தனர்.

ஒரு சதங்கை சிணுங்கியது.

''யார் அது?''

''பரமி''

''ஆ...பரமி வா.''

அவள் வந்து வணங்கினாள்.

''நீயும் பிறப்பெடுக்கவில்லையா...''

''இல்லை. மாமன்னர் சமூகம் விட்டு போக மனமில்லை.''

''அவளுக்கு பிறப்பறுந்து விட்டது, பெருமானே. நமச்சிவாய வாழ்க என்று சொல்லி உடல் துறந்தவள்



அல்லவா பரமி. ஆயிரம் முறை தேவாரம் பாடி அபினயித்தவள் அல்லவா? ஈசன் நிழல் விட்டு பிறப்பு வருமா?''

''காரிக்குளிப்பாகைக்கு வந்துவிட்டதே.''

''அவன் பூமியை மறக்கவில்லை. போரை மறக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேல் காதலையும் மறக்கவில்லை.''

''காதல் செய்யவா பிறந்திருக்கிறான்?''

''உண்மை''

''காரிக்குளிப்பாகை காதலிக்கிறான் என்றால் வியப்பாக இல்லை?''

''அதுதான் பிரச்னை.''

''எவ்விதம்?''

''உங்கள் ஆட்சியில், இந்தச் சோழ மண்ணில் மரணமடைந்த போது பரமி அவனைப் பார்த்துக் கத்தினாள்.''

''உண்மையைச் சொல்லுங்கள். என்னைக் காதலிக்கவேயில்லையா?'' என்று. இல்லை என்றான். ஆனால் பரமியைக் காதலிக்காதது குறையாக இருந்திருக்கிறது அவனுக்கு.

''பரமி இறந்து நாற்பது வருடங்கள் கழித்து காரிக்குளிப்பாகை இறந்த போதும் காதல் ஞாபகமாகவே, தன்னால் ஏன் காதலிக்க முடியவில்லை என்கிற வேதனையோடே....''

''அதாவது பரமி ஞாபகமாகவே...''

''இல்லை. பரமியை அவன் காதலிக்கவில்லை என்பது உண்மை. ஆனால் யாரையுமே காதலிக்கவேயில்லை. ஏன் காதலிக்கவே முடியவில்லை என்று யோசித்தபடியே இறந்து போனான்.''

''அதனால்?''

''மறுபடி அது தெரிய பிறக்க வேண்டியதாயிற்று. பூமி இழுத்து விட்டது.''

''மரணமடைகிற போது வாழ்வு பற்றி நினைக்கிறவன் மறுபடி வாழ வேண்டியிருக்கிறது.''

''ஆம் மன்னா.''

''பரமி, உனக்கு காரிக்குளிப்பாகையைப் பார்க்க எண்ணமுண்டா?''

''உண்டு. மன்னா. நேற்று கூட பார்த்தேன்.''

''எங்கே...?''

''தொண்டை மண்டலம். திருமயிலை கிராமம் போவதற்கு முன்பே ஒரு மலையோரம்.''

''அட...ஏன் தொண்டை மண்டலம்?சோழ தேசத்தில் பிறந்திருக்கக் கூடாதா?''

''தொண்டை மண்டலத்தில் கடைசி காலம் அதிகாரியாய் இருந்தான். அவனை திருமயிலை வாணியச் செட்டிகளின் வழக்கு விசாரிக்க அனுப்பினீர்கள். திருமயிலை போகும் முன் மரணமடைந்துவிட்டான்.''

''என்னவித மரணம்?''

''மதுராந்தகம் கடக்கிறபோது அச்சு இருபாக்கத்தில் கொள்ளைக் கூட்டத்துடன் மோத வேண்டியிருந்தது. கொள்ளைக் கூட்டத்தினருக்கு சவுக்கடிகள் கொடுத்துக் கொண்டிருந்தபோது வீரனால் தாக்கப்பட்டான். வேல் குறி தவறி விட்டது.''

''தாக்கியவன் என்ன ஆனான்?''

''உடனே சிரச்சேதம்.''

''காரிக்குளிப்பாகை பின்மண்டையில் வேல் கட்டை பட்டுவிட்டது. சிறிது வீங்கியிருந்தது. மறுநாள் பிரயாணம் முடியும்போது ஒரு தாமிர மலைக்கு அருகே ஏரிக்கரையில் முகம் கழுவி உணவு உண்டு தூங்கினான். தூங்கியவனை எழுப்பும்போது உயிர் பிரிந்து விட்டிருந்தது. அங்கேயே எரியூட்டினார்கள். நடுகல் நட்டார்கள்.''



''காரிக் குளிப்பாகை நல்லவன் இல்லையா, சேனாதிபதி?''

''ஆம் மன்னா பெரும் வீரன்.''

''கவிஞர்கள் என்றால் அவனுக்குப் பிரியம்.''

''நடனப் பெண்கள் மீதும் பிரியம்தான்.''

''இல்லை நடனத்தின் மீதுதான் பிரியம். பெண்களை அவன் ஹிம்ஸித்தது இல்லை.''

''பெண்களின் மீது ஒருவகை நாணம் அவனுக்கு.''

''கடைசிவரை திருமணம் செய்து கொள்ளவில்லை, மன்னா.''

''இப்போது?''

''தெரியவில்லை.''

''பரமி உனக்குத் தெரியுமா?''

''இருபத்தியோரு வயதுதான் ஆகிறது. இப்போது அது திருமண வயதில்லை.''

''ஏன்?''

''பூமியில் பல வாழ்வு மாற்றங்கள்.''

''நம்மைச் சேர்ந்தவர்கள் வேறு யார் அவனோடு இருக்கிறார்கள்?''

''அவனது சகோதரன்.''

''பெயர்?''

''கந்தன் மாறவேள்.''

''அட...தன் சிரமறுத்தவன்.''

''ஆமாம்...நீங்கள் கங்கபாடியை வெற்றிவாகை சூடி வந்தபோது துர்க்கையிடம் வேண்டியபடி மூங்கிலில் தன் குடும் பிணைந்து வளைத்து மண்டியிட்டு அமர்ந்து, தன் கைவாளால் தன் சிரமறுத்து, மூங்கிலில் அவன் சிரம்

அசைந்து...எப்படி தெறித்தது ரத்தம்... துர்க்கை முகம் முழுவதும், சுற்றியுள்ளோர் உடல் முழுவதும்...ஆறு வேலி விளை நிலம் தானமாய் அளித்தீர்கள் அவன் குடும்பத்திற்கு.''

''இப்போதும் கந்தன் மாறவேள் காரிக்குளிப் பாகைக்கு சகோதரனா?

''தகப்பன்.''

''உமக்கு எப்படித் தெரியும் அமைச்சரே?''

''கந்தன் மாறவேளுக்கு சோழர் பிறவி நினைவு தூண்டப்படும்போது நான் அவைகளை அவனுக்கு வரிசைப்படுத்தி நினைவூட்டினேன்.''

''கந்தன் மாறவேளும் சோழ மக்களிடத்தில் பிரியம் உள்ளவன். குறிப்பாய் வைத்தியர்களைப் பிடிக்கும் அவனுக்கு. இல்லையா?'' மாமன்னர், அமைச்சர் பிரம்மராயரை வினவினார். எல்லோரும் அமைதியாய்ப் பழம் நினைவுகளோடு ஒன்றினார்கள்.

''இப்போது எங்கே, என்னவாய்?'' மன்னர் மறுபடி கேட்டார்.

''கந்தன் மாறவேள் தொண்டை மண்டலத்தில் வைத்தியனாய் இருக்கிறான். துர்க்கை அருள் பரிபூர்ணமாய் இருக்கிறது அவனுக்கு.''

''பூமியில் குறையேதும் இல்லாமலிருக்கிறானா?''

''பிறந்தவர்க்கு குறையில்லாது இருக்க முடியுமா? உண்டு. இப்போது அவன் குறை அவன் மகன் காரிக்குளிப்பாகை.''

''என்ன குறை''

''அடங்காது திரிகிறான் என்கிற குறை.''

''மற்றபடி சுகம்தானே?''

''நல்ல சுகம். செல்வாக்கு எல்லாம் உண்டு.''



''எனக்கு அவர்களைப் பார்க்கும் ஆவல் பேசப் பேச அதிகரிக்கிறது.''

''எங்களுக்கும் அதிகரிக்கிறது மாமன்னா.''

''நாம் தொண்டை மண்டலம் போவோமா?''

''இப்போதே.''

அவர்கள் சித்தமானார்கள். நகர்ந்தார்கள். தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலிலிருந்து வினாடி நேரத்தில் தொண்டை மண்டலம் வந்தார்கள்.

அப்படி அவர்கள் வரமுடியும். அவர்கள் எவரும் உடல் ரூபம் அல்ல. உயிர் ரூபம். ஆவியுடம்புக்காரர்கள். இந்த பூமியில் உடம்பால் ஆன ஜீவராசிகள் மட்டுமே உண்டு என்று நினைப்பது தவறு. உண்ணாமல், உறங்காமல், வளராமல், தேயாமல் சிலர் உண்டு. அவைகள் ஆவிகள் என்றும், பைசாசங்கள் என்றும் அதர்வணம் குறிக்கிறது. அவர்கள் தொண்டை மண்டலத்துக்கு நடுவில் உள்ள மலையோரம் அமைந்த ஏரிக்கு மறுபக்கம் ஒரு வீட்டு வாசலில் இறங்கினார்கள். காற்று சுழன்று அவர்களை விட்டு விலகிப் போயிற்று.

## 2

ஓட்டுக் கூரையின் சரிவுக்குக் கீழே பெரிய சிமிண்ட் திண்ணையிருந்தது. முருக வைத்தியர் அதில் அமர்ந்து சட்டை போடாத உடம்போடு மேல் வயிறு தடவிப் பாடிக் கொண்டிருந்தார். குளிர்காற்று சில்லென்று வீசியது. பேரிரைச்சலோடு ஒரு விமானம் தலைக்கு மேல் போயிற்று.

தாம்பரத்துல இருக்கிற போதே இந்த சத்தம் தாங்க முடியலை. எப்படித்தான் அவனவன் பரங்கிமலையும்,

மீனம்பாக்கத்துலயும் குடியிருக்கானுகளோ... என்கிற எண்ணம் மனசுள் ஓடியது. ஆனால் வாய் பாடிக்கொண்டிருந்தது. கை உடம்பைத் தடவிக் கொண்டிருந்தது.

''உதிர நீர் இறைச்சியெடுத்து
மலைக்குகை மேல் வருவதோர் மாயக் கூரை
வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்.
கரிய மால் அயனும் தேடி
சுழலிணைக் காணமாட்டா அரியானாய்
நின்ற திருவாரூர் அப்பனே அஞ்சினேனே.''

வளமான குரல் முருக வைத்தியருக்கு.

''என்ன மூன்றரை மணிக்கே பாட்டு ஆரம்பிச்சிடுச்சு இன்னிக்கு?'' எதிர்ப்பக்கம் குரல் கேட்டது. இருட்டில் ஆள் தெரியவில்லை.

''யாரு எல். ஐ. சி. ஐயாவோ?''

குரல் வைத்து முருக வைத்தியர் கண்டு கொண்டார்.

''தனியாதான் இருக்கீங்களா?'' எல். ஐ. சி. கேட்டார்.

''ஆமாம் வாங்க.''

''தனியா இருக்கீங்களான்னு கேட்கறேன்.''

''தனியாத்தான், வாங்க.''

ஆள் மண் தெரு கடந்து வீட்டுப் படியேறி தயங்கி நின்றது, இருட்டில் திண்ணை பரப்பு முழுவதும் உற்றுப் பார்த்தது.

''என்ன பார்க்கறீங்க?''

''சரவணம் படுத்துருக்கான், அந்தக்கோடில. ஏன்?''

''அது, போனதடவை சப்பக்குன்னு திண்ணைலஉம்ம கூட பேச உட்கார்ந்துட்டேன். டபடபன்னு நாலைஞ்சு பேர் எழுந்து உட்கார்ந்தாங்க. பார்த்தாக்கா உம்ம வீடு



பொண்டுக முழுக்க இங்கனதான் படுத்துருக்கு. ரொம்ப சங்கடமா பேச்சு.''

''அதனால என்ன? பரவாயில்லை. காத்துக்கு இங்கன வந்து படுப்பாங்க. இப்ப எல்லாம் கொல்லைப் பக்கம் போயிடுதுங்க. கயித்துக் கட்டிலோட.''

''இந்த வாட்டி வெக்கை அதிகம்தான்.''

''நாளையோட அக்னி நட்சத்திரம் முடியுது. குறைஞ்சுரும். என்ன சீக்கிரம் எழுந்துட்டீங்க. படிச்சுக்கிட்டிருந்தாப்பலயா... லைட்டு எரிஞ்சுது பன்னெண்டு வரைக்கும்?''

''ஆமா...அப்புறம் தூக்கமே வரலை. ஒரே கை வலி.''

''வலது கையா...?''

''ஆமாம், ஏதோ இழுத்துக் கட்டின மாதிரி எப்பவும் வலி.''

''வாயு. நெஞ்சு அடைக்குதா?''

''அப்பப்ப...''

''எப்பம் வலி வருது?''

''சாப்பிட்டு சாப்பிட்ட மயக்கத்துல தூங்கிடறேன்... புரண்டு படுக்கறப்போ கையே இல்லாத மாதிரி...''

''குப்புறப்படுத்து தூங்கறது வழக்கமா?''

''அட சின்ன புள்ளையா குப்புறத் தூங்க...''

''தலைமாட்டுக்கு கை வச்சுக்குவீங்களா?''

''எப்பனா... இன்னிக்கு மல்லாக்காத்தான் படுத்தேன்.''

''இது வாயு. நான் போனவாட்டி சொன்னது போல புறா அடிச்சி பச்ச ரத்தம் சூடா தடவுனா உடனே கேட்கும்.''

''அட போங்க... எப்ப பார்த்தாலும் புறா ரத்தம், பூனை ரத்தம்னு பேசிக்கிட்டு... எதுனா சூரணம் தரப்படாதா...''

''தரலாம். பத்தியம் போடணும். மொத நாள் லங்கணம் போடணும். அருகம்புல்லு ரசம் அப்பப்ப குடிக்கலாம். மத்தபடி எதும் உள்ளே போகக் கூடாது.''

''புறா ரத்தம் ஊத்தறதாருந்தா பட்டினி போட தேவையில்லையா?''

''ஊத்திப்பார்ப்பம். அதுக்கு படியலைன்னா சுத்தமா லங்கணம் போட்டு சூரணம் தரேன்.''

''புறாக்கு எங்க போவறது?''

''என் புள்ளை வளர்க்கறான். ஒண்ணு அடிக்கச் சொல்லவா?''

மெல்ல கீழ்வானம் வெளுப்பாயிற்று.

''டேய், சரவணா'' முருக வைத்தியர் அவனை உலுக்கி எழுப்பினார். அப்பாவுக்கும், பிள்ளைக்கும் இருவது வயசுதான் வித்தியாசம்.

''டேய் சரவணா. எந்திரி.''

''என்னா?''

''எதிர்வீட்டு எல். ஐ. சி. ஆபீஸருக்கு புறா அடிச்சுத் தரணும்.''

''எடுத்துக்கப்பா'' தூக்கம் புரள அரைக் கண்ணோடு பேசினான்.

''அடிச்சு தரணும்டா.''

''என்ன?'' சட்டென்று எழுந்தான்.

''வாய்வு குடையுது. புறா அடிச்சு ரத்தம் ஊத்தணும்.''

''முடியாது. என்னாண்ட இல்லே...''

''நாப்பது அம்பது வளர்க்கறியே. துட்டு எதுனா தருவாரு. வாங்கிக்க...''



''எல்லாம் ஜோடியா இருக்குது. தரத்துக்கு இல்லை.''

''தனியா எதுனா கத்தும். அது அடி...''

''என்கிட்ட தனியானது இல்லை.''

''பார்டா, அவரு கை நோவுதுன்றாரே...''

''மணி என்னா?''

''நாலேகால் இருக்கும்.''

அவன் எழுந்து ஓட்டு வீட்டுக்கு வலதுபக்கம் இருந்த சந்தில் விளக்கு போட்டான். மார் உயரத்துக்கு இருந்த மரக் கூண்டுகளை ஒவ்வொன்றாய் திறந்து பார்த்தான். ஒரு கூண்டில் ஒற்றைப் புறா தனியே இருந்தது. அந்த ஜோடி நேற்று வரவில்லை. சில சமயம் ஜோடியாய் சுற்றியது, வேறெங்காவது பராக்கு பார்த்து போய் உட்கார்ந்துவிட்டு மறுநாள் வரும்.

''என்னடா.., ஒத்தை இல்லை?''

''இருக்கு. நேத்து இது ஜோடி வரலை. இன்னிக்கு வரும்.''

''வராதுடா. அது அடிச்சுரு.''

''அவர மார்கெட்லேர்ந்து புடிச்சுக்கினு வரச் சொல்லேன்.''

''வலி அதிகமாய்ட்டபிறகு ரத்தம் ஊத்தி புண்ணியம் என்னா...? இப்ப ஊத்தினா வாயு சட்டுன்னு கரைஞ்சுடும்.''

''இது ஜோடி. இன்னிக்கு வந்தா அது கஷ்டமாயிடுமே.''

''ஆவாதுடா...வேற புடிச்சுக்கும். இதைப் போடு.''

''அஞ்சு பத்து கொடுத்துடறேன் சரவணா'' எல்.ஐ.சி. ஆள் துரிதப்படுத்தினார்.

''துட்டுக்கு இல்லீங்க. புறா தனிச்சுப் போயிடும்.''

''புறாதானே...''

''உங்களுக்குத் தெரியாதுங்க. ஜோடி காணம்னா ஒரு மாதிரி உட்கார்ந்துடும். சாப்பிடாது. தண்ணி எடுக்காது.''

''டேய் ஒரு புறாவுக்காக ரொம்ப உருகாதடா. என் கிட்ட நாலு மாசமா கைநோவுன்னு சொல்லிக்கிட்டு இருக்காரு.''

சரவணன் கூண்டில் கைவிட்டு எடுத்து புறாவைப் பார்த்தான். விழிகளை உருட்டியபடி பறவை நாலு திக்கிலும் பார்த்தது. விரலிடுக்கில் அதன் நெஞ்சு தடக் தடக் என்று துடிப்பது வெப்பத்துடன் உணர முடிந்தது. இடக்கைக்கு புறாவை மாற்றி இறுக்கினான். புறா வேதனையில் நெளிந்தது. மேல் துண்டு எடுத்துருங்கய்யா. எல்.ஐ.சி. காரரிடம் பேசினான். அவர் துண்டும் வேட்டியும் உருவி கூண்டில் போட்டுவிட்டு துணி ஜட்டியுடன் தரையில் உட்கார்ந்தார். அறுபது வாட்ஸ் விளக்கொளியில் கையை நீட்டி உடம்பு சாய்த்துக் கொண்டார்.

சரவணன் புறா கழுத்தை பட்டென்று திருகி இழுத்தான். விரலிடுக்கில் பறவையின் கால்கள் உதறி உதறி ஓய்ந்தன. குபீரென்று ரத்தம் பரவியது. உடம்பையும், தலையையும் அப்படியே அவன் தோளில் சாய்த்து ரத்தம் ஊற்றினான். அவர் இடக்கையால் முகம் பொத்திக் கொண்டார். கையில் சூடு பரவுவது உணர்ந்தார். முருகு வைத்தியர் சட்டென்று துணிவழித்து உட்கார்ந்து வழிந்த ரத்தத்தை கை முழுவதும் தடவி உருவினார். சந்தின் கடைசி வரை நடந்து புறாவின் உடம்பைத் தூக்கி சாக்கடை போல தேங்கியிருந்த தண்ணீரில் சரவணன் வீசினான். தூங்கிக் கொண்டிருந்த நாய் ரத்தவாடை பட்டதும் சட்டென்று எழுந்து நீரில் மிதந்த புறாவை கௌவிக் கொண்டு ஓடியது.

சரவணன் வீடு சுற்றிக் கொல்லைப்புறம் போனான் குழாய் திறந்து கை கழுவினான்.



''யாரது?'' அம்மாவின் குரல் கேட்டது.

''நான்தான் அம்மா.''

''சரவணா குளிக்கிறியா?''

''ஆமாம்,''

''மோட்டார் போட்டுறு. தண்ணி ஏறட்டும்.''

''ஆவட்டும்!'' குளித்தால் என்ன என்று சரவணனுக்குத் தோன்றியது. மோட்டார் போட்டுவிட்டு குழாய் திறந்து அப்படியே உட்கார்ந்து குளித்தான்.

புறாவைக் கொன்ற சிறிய வேதனை கொஞ்சம் குறைந்தது. மெல்ல வானம் வெளுக்கத் துவங்கியது. உடம்பு சுத்தமானதும் மனசு லேசாயிற்று. துவட்டிக் கொண்டே உள்ளே போனான். சுவாமி படத்தின் முன் கை கூப்பினான். திருநீறு இட்டான். அப்பா பாட்டிலில் அரைத்து வைத்திருந்த சூரணம் ஒரு பாக்கு உருண்டை வழித்து உண்டான். தொண்டையில் காரமாய் சூரணம் இறங்கியது. பீரோ திறந்து லுங்கி உடுத்தி சலவைச் சட்டை போட்டு புறாவுக்கு கடலைப் பொட்டு அரைப்படி எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான்.

சந்து திரும்பினான். கூரையிலிருந்து ஒரு புறா இறங்கி வந்தது. அது நேற்று காணாமல் போன புறா. காலையில் கொன்ற புறாவின் பெண் ஜோடி அது.

'தடேக்' என்று உள்ளே ஒரு பய ஓட்டை சரவணனுக்கு வந்தது. ''இந்தா'' கொத்து கடலையை புறாவிடம் வீசினான்.

புறா அவனை நிமிர்ந்து பார்த்தது. சடசடவென்று மரக்கூண்டின் மீது போய் அமர்ந்தது. தலைகுனிந்து அது தன் ஜோடி இருக்கும் அறையை அலகால் கொத்தியது.

என்ன செய்வது என்று தெரியாமல் சரவணன் திகைத்தான்.

# 3

வெங்கடலட்சுமிக்கு தடித்தனம் அதிகமாகி விட்டதென்று அவன் தகப்பன் உள்ளூரக் கோபப்பட்டான். வெளியே காட்ட முடியவில்லை.

அவள் தகப்பன் கோவிந்தனுக்கு மூன்று பெண்கள், முதல் இரண்டு பெண்களுக்குத் திருமணமாகிவிட்டது. மூத்த பெண்ணை பழ வியாபாரி திருமணம் செய்து கொண்டான். இரண்டாவது பெண்ணை பெட்டிக் கடைக்காரனுக்கு கல்யாணம் பண்ணித் தரப்பட்டது. இரண்டாவது நடந்து பத்து வருடங்களாகிவிட்டன. இப்போது வெங்கடலட்சுமிக்கு இருபத்தி மூன்று வயது.

பழ வியாபாரி வீடு சௌகார்பேட்டை பகுதியில் இருந்தது. வெங்கடலட்சுமி அடிக்கடி தாம்பரத்திலிருந்து மின் வண்டியில் அங்கே போவாள். காலையிலிருந்து மாலை வரை தங்கி ஊர் கதை பேசிவிட்டு வருவாள். பெட்டிக்கடை அக்காவீடு திருவல்லிக்கேணி சந்தில் இருந்தது. பெட்டிக்கடை வாலாஜா ரோடில் இருந்தது. அங்கும் மாதத்திற்கு இரண்டு முறை போய் வருவாள்.

இரண்டு அக்காக்களுக்குப் பிறகு பிறந்த தங்கைக்கு சில கஷ்டங்கள் உண்டு. அது திருமண கஷ்டம் மட்டுமில்லை. இரண்டு கல்யாண செலவுக்குப் பிறகு மூன்றாவது கல்யாணச் செலவு மட்டும் வேதனையாகவில்லை. அக்காக்களின் வாழ்வு முழுவதும் வயது வந்தப் பெண்ணுக்குத் தெரியவரும். ஜாடைமாடையாகவும் சில சமயம் பச்சையாகவும் பேசப்படுவதைக் கேட்கவேண்டியிருக்கும்.

மூத்த பிள்ளை பாடம் படிக்க, இளையது அருகே இருந்து கவனித்து அந்தப் பாடம் தானும் சொல்லும். அப்பனும் ஆத்தாளும் மகிழ்வார்கள். இங்கும் அதே கதை



தான். இரண்டு அக்காக்களின் வாழ்வும் அவளுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெரிந்தது. வெளியே அம்மாவுடன் பேச—

''உனக்கேண்டி ஆம்படையான் பொண்டாட்டிக் கதை? போதும் நிறுத்து'' என்று சொல்லிவிட்டாள்.

''இங்கே கற்றதை வெளியே சொல்லக் கூடாது'' என்று வெங்கடலட்சுமிக்குத் தெரிந்துவிட்டது. ஆனால், அந்தக் கல்வி மூளையில் புகுந்து ஆட்டம் போட்டது. அவளை அதிகம் யோசிக்க வைத்தது. கற்பனை வளர விட்டது.

பெரிய அக்காள் தன் புருஷனை நாய் மாதிரி நடத்தினாள். ''காசு கொண்டா; காசு கொண்டா'' என்று கத்தினாள்.

''வண்ணம்மா சோறு முட்டும் துண்ணு. சம்பாதிக்காதே'' என இலை முன்பு திட்டினாள்.

''அடி என்னாடி கோச்சுக்கற. உனக்கு என்னா வேணும் சொல்லு. கொண்டாந்து கொட்டறேன்.'' அவன் தாடைப் பிடித்துக் கெஞ்சினான்.

ஆனால், அக்காவின் சண்டையெல்லாம் காலையில் தான் இரவு ஒன்பது மணிக்கு கடை அடைத்து விட்டு வரும்போது வந்தவுடன் சட்டை பை உதறி இன்னிக்கு சம்பாதிச்சது என்று கூடத்தில் கொண்டுவந்து கொட்டும் போது அவள் முகத்தில் ஆர்வம் பொங்கும். நாலடிக்கு ஆறடி பாத்ரூமில் அவனுக்கு வெந்நீர் ஊற்றி முதுகு தேய்த்திறது கிளு கிளுப்பான சமாச்சாரம்.

அப்போது அந்தப் பக்கம் வந்தால், திட்டுவாள். ''அப்பா குளிக்கறாங்க இல்ல. போ அப்பால'' என்பாள். அதேபோல சோறு போடும் போதும் வேறு யாரையும் அண்ட விடுவதில்லை.

'தயிர் வாங்கிட்டு வாடி. பால் கெட்டுப் போச்சு' என்று ஒருமுறை துரத்த, தயிரோடு வெங்கடலட்சுமி

வரும்போது அத்தனை நெருக்கமாய் புருஷனுக்கு உணவு போடும் காட்சி காணக் கிடைத்தது. தோசையை விண்டு குழம்பில் குதப்பி புருஷனுக்கு ஊட்டுகிற அக்காவின் உடைகள் சரியே இல்லை.

சிஷ்ருஷை என்பது புருஷர்களைக் கவரச் செய்யும் வழி என்பது புரிந்து போயிற்று. பாத்திரத்தில் வாய் கொப்பளித்து மனைவி முந்தானையில் உதடு துடைத்து–

''பதினாறு தோசை துண்ணுட்டேன். எழுந்திருக்க முடியலை. தூக்கி விடுறி.''

என்றவனை அணைத்துத் தூக்கினது வெங்கட லட்சுமியை வெட்கப்பட வைத்தது.

சிஷ்ருஷை இரவும் தொடர்ந்தது.

உட்கார்ந்து உட்கார்ந்து முதுகு மொத்தமும் நோவுது என்று புருஷன் சொல்ல, அவனைக் குப்புறப் போட்டு முழங்காலிட்டு அமர்ந்து அங்குலம் அங்குல மாகப் பிடித்து விட்டாள்.

''உனக்கென்னடி வேலை இங்கே? போ போய் தூங்கு'' வெங்கடலட்சுமியை துரத்திவிடுவாள்.

இரவு வெகுநேரம் வரை அக்கா தூங்கவேயில்லை என்பது அறையிலிருந்து வரும் பேச்சுக் குரலில் தெரியும்.

தன்னைப்பற்றி ஏதோ பேச்சாய் கேட்கவே கதவருகே காது வைத்துக் கேட்டாள்.

''வெங்கடலட்சுமி இரண்டு நா நம்ம வீட்டோட இருக்கறேன்னு சொல்லிச்சு. இருக்கட்டுமா?''

''தாராளமா இருக்கட்டும், எனக்கு இடைஞ்சல் பண்ணாத இருந்தா சரி.''

''உனக்கென்ன இடைஞ்சல் அதான் பசங்களோட அதை ஹால்ல படுக்க வச்சுட்டேனே.''



''வயசு பொண்ணு, நீ குளிப்பாட்டறதையும், சோறு போடறதையும் பார்க்குது.''

''பாத்துட்டு போட்டும்''

''போய் உங்க வீட்ல சொல்லி சிரிக்கலாம்.''

''சிரிக்கறதுக்கு என்ன இருக்கு இதுல? என் ஆம்படை யான் நான் கொண்டாடறேன். அப்படி எவனா சிரிச்சா வாய்லயே போடமாட்டேன்.''

அவள் கதவிலிருந்து காது எடுத்து படுக்கைக்கு வந் தாள். அங்கிருந்தபடியே சப்தங்கள் கேட்டு உள்ளே நடப் பதை உருவகப்படுத்திக் கொண்டாள்.

''என்னாடி சொல்ற உங்கக்கா'' அம்மா திடீரென்று கேட்டாள்.

''ஒன்னும் சொல்லலையே.''

''உன்னைய சரியா கவனிச்சாளா?''

''ம்...''

''இழுத்தாப்பல சொல்றே?''

''நல்லாதான் கவனிச்சுது. ஆனா ராத்திரி சோறு தான் லேட்டாயிருது.''

''ஏன்?''

''அத்தான் கடைலேர்ந்து வந்து குளிச்சு சாப்புட்டு அப்பறதான் எல்லாருக்கும்.''

''காலைல எப்ப எழுந்துக்கற?''

''ஏழு மணி ஆவும்.''

''அடி கருமாந்தரமே.''

''தூங்க பன்னென்டு, ஒண்ணு ஆயிருதே.''

''அதுமட்டும் என்னா பண்ணற?''

அம்மாவிடம் மேலோட்டமாய் விவரிக்க வாய்விட்டு சிரித்தாள்.

மழையில் நனைந்து இருமல், சளி, ஜுரம், என்று அத்தான் ஆஸ்பத்திரியில் சேர, அம்மா போய் ''ஆட்டத்தை குறைச்சுக்கணும். வயசாகலையா'' என்று சொல்ல, பெரிய சண்டையே வந்துவிட்டது.

இரண்டாவது அக்காள் வீட்டிற்குப் போகும்போது வேறு அனுபவம். காலை ஐந்து மணிக்கு கடை திறந்து விடுவார்கள். காப்பி வீட்டிலிருந்து போகும். பகல் ஒரு மணிக்கு கடை மூடப்படும், குளித்து சோறு சாப்பிட்டு சிறு தூக்கம். இரவு பனிரெண்டு வரை கடை இருக்கும். சில சமயம் ஒரு மணி கூட ஆகும். இரண்டாவது அக்காளும் அத்தானும் பேசிக் கொள்வதே குறைவு. ஒவ்வொரு வார்த்தைதான் பேசப்படும். அது என்னவென்று தெரிய வெகு நாளாயிற்று.

''என்ன?''

''ம்ம்...''

''ம்ம்னா.''

''சரி.''

''வெங்கடலட்சுமி''

''மாவு அரைக்க போவுது.''

''பின் தெருலதானே.''

''கூட்டம் இருக்கும்.''

''பேசமா கடைய சீக்கிரம் அடைச்சுட்டா.''

''வேணாம்.''

''ஏன்?''

''ராத்திரி எங்க அனுப்பறது?''

''சமையலறைல.''



''கரப்பு நடமாடுது.''

''இருக்கட்டுமே.''

''நான் உன்னைப் பார்ப்பேனா, கரப்பு பார்ப்பேனா?''

''சரி அரைக்க அனுப்.''

மாவு அரைத்து வரும் முன் உள்ள அக்காவும், மாவு அரைத்த பிறகு உள்ள அக்காவும் வேறு வேறு என்று அவள் கண்களுக்குத் தெரிந்தன. அத்தான் சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தார்.

''கடைக்கு போகலையா அத்தான்.''

''தலை நோவுன்னாரு. தூங்கட்டும்.''

மாவு அரைக்கப் போகும்போது வீட்டில் என்ன நடந்திருக்கும் என்று அவளுக்குப் புரியாமல் இல்லை.

இவைகள் மனசில் படியப் படிய இதுவே வாழ்க்கை, இதுவே சிந்தனை என்பதாயிற்று. எந்தப் புருஷன் மனைவியைப் பார்த்தாலும் அவர்கள் கூடலில் எவ்விதம் இருந்திருப்பார்கள் என்று தோன்றியது. சோம்பலுள்ள மனசும், உடம்பும் சாத்தானின் இடம்.

அவளுக்கும் காலத்தில் திருமணம் செய்திருக்க வேண்டும். மூல நட்சத்திரம் என்று பல வரன்கள் தள்ளிப் போயிற்று. அப்பாவுக்கும் ஓடி ஓடி இதோ இந்த தேதிக்குள்ள முடிச்சுடறேன்னு சபதம் செய்யும் வலுவும் குறைந்து விட்டது.

ஆனால், வெங்கடலட்சுமி கனவுகளில் ஆனந்தமாய் மூழ்கி இருந்தாள். அவளுக்கு அடுத்த வீட்டு சரவணனைப் பிடித்திருந்தது. புறா வேடிக்கைப் பார்க்கப் போவான். அவனை வேடிக்கை பார்த்தாள். கொஞ்சம் பேசிப் பார்த்தாள்.

சரவணன் அதிகம் பேசாது போகவே, அவளும் அதிகம் பேசாது கவனித்தாள்.

புருஷன் மனைவி பற்றி அவளுக்கு நிறைய தெரிந் திருந்ததினால் வெட்கம் போயிருந்தது.

"மணி என்னான்னு கேட்டா மாரையே பார்க்கரான் பாரேன்" அம்மாவிடம் அலுத்துக் கொள்ள முடிந்தது.

"ஏம்மா எல்லா ஆம்பளையும் பொம்பளைக்கு பறக்க றாங்க."

"பொங்கல் இருக்கற வரைக்கும்தாண்டி இலைக்கு மதிப்பு. துன்னுட்ட பிறகு பையிலியா வச்சுக்க முடியும்? துடைச்சு தூக்கிப் போட்டுருவான்!"

"எது பொங்கல்?"

"இளமை."

"எது இலை?"

"உடல்."

"இளமைக்கு இளமை சேர்ப்பது எது? ஆடை அணி கலன். மீன் பிடிக்கப் போகிறவனுக்கு பூமி தோண்டி புழு எடுப்பதா கஷ்டம்?" உடுப்பதில் வெங்கடலட்சுமி அதிகக் கவனம் செலுத்தினாள். எப்போதும் பளிச்சென்று இருந் தாள். "எதற்கும் கவலைப்படாமல் இருங்கள். முகத்தில் சுருக்கம் விழாது. இளமையோடு வெகுகாலம் இருக்க லாம்" என்று பெண்கள் பத்திரிகையில் போட்டிருந்தது. அவள் எதற்கும் கவலையே படவில்லை.

அவள் அப்பாவுக்கு லாரிபுரோக்கர் வேலை. சென்னை யிலிருந்து தென்திசை போகும் லாரிகள் தாம்பரத்தில் நிற்கும். ஏற்றிய சரக்குக்கு இடையே ஏதும் இடமிருக்கும் அந்த இடத்தில் சாமான் ஏற்றி, ஏற்றியதற்கு லாரிகார ரிடமும், பார்ட்டியிடம் பணம் வாங்குகிற வேலை.

லாரி நடமாட்டம், தாம்பரத்தில் இரவு எட்டுமணிக்கு ஆரம்பிக்கும். இரண்டு மணி ஓயும். கோவிந்தன் வீட்டுக்கு



வர விடியற்காலை மணி மூன்றாகும். எழுந்திருக்க ஒன்பதாகும்.

காலை ஆறு மணிக்கு முகம் கழுவிப் பொட்டு இட்டு, புடைவையை சீராக்கிக் கொண்டு வெங்கடலட்சுமி புறா பார்க்க வருவாள். ஆணும் பெண்ணுமாய் புறா ஜோடி ஜோடியாக அலைவது பார்க்க அவளுக்கு 'தான் புறாவாக இருந்திருக்கக் கூடாதா?' என்று தோன்றும். சட்டென்று பேடையின் தலையை அலகால் கொத்திக் கௌவி அசை யாது நிறுத்தி ஆண்புறா உடம்பு பாரம் முழுவதும் பெண் மீது போட்டு திணற அடிக்கும். இருபது விநாடிகளில் சாதாரணமாய் நடந்து போகும்.

"இரண்டு புறாவையும் கூண்டுல ஒண்ணாதானே வைக்கறீங்க? அங்க எதுவும் செய்யாத, திறந்து வுட்ட வுடனே இப்படி துரத்தி துரத்தி பப்ளிக்கா. ஏங்க அது?" என்று சரவணனை கேட்க ஆசை அவளுக்கு.

"த்த ச்சி போ" என்று சரவணன் சொல்லிவிடு வானோ என்கிற பயம். சரவணன் மாதிரி ஆண்பிள்ளை வேறு யாரும் அருகில் இல்லையே என்கிற கவலை.

கூண்டு திறக்காது எதிரே உள்ள ஒற்றைப் புறாவை வெறித்துப் பார்த்தபடி அதற்கு கொத்துக்கடலை வீசிய படி இருக்கும் சரவணனைப் பார்த்து புன்னகை செய் தாள். கூண்டு அருகே உள்ள உடைந்துபோன ஆட்டுக் கல்லில் உட்கார்ந்தாள்.

"ஏங்க மத்த புறாவெல்லாம் திறந்து வுடலையா இதுக்கு மட்டும் பொட்டு போடறீங்க?"

"துறக்கணும்." சரவணன் கவலையோடு சொன் னான்.

"திறந்து விடுங்களேன். பார்க்கலாம்."

"செத்துப்போன புறாவின் கூண்டு தவிர மற்றதெல் லாம் ஒவ்வொன்றாய் திறக்க, பறவைகள் சடசடத்து தரை இறங்கின. தானியம், கொத்தின. வெளியே இருந்து

வந்த புறா காத்திருந்தது. தரைக்குப் போயிற்று. தரையில் சிறிது அலைந்து கூண்டுக்குப் போய் கொத்தியது.

''அது பொட்டை புறா, இல்லை?''

''ஆமாம்.''

''ஜோடி தேடுதா? சடசடன்னு எகிறுதே?''

''ம்...ம்....''

''பூட்டினதுல, ஜோடி இருக்கா?''

அவன் பேசாது இருந்தான்.

''திறந்துவுடுங்களேன்'' புறா தவித்துக் கொண்டிருந்தது.

''காலைலதான் கொன்னுட்டேன்.''

''என்னது?'' அவள் நிஜமாகவே அதிர்ந்து போனாள் ''கொன்னுட்டீங்களா?''

''ஆமாம். எதிர் வீட்டுக்காரு ரொம்ப நாளா புறா கேட்டிருந்தாரு. இன்னிக்கு காலைலதான் அடிச்சேன். இது ஜோடி நேத்து வரலை. சரி, தனியா இருக்கேன்னு நினைச்சு... அப்பவே சொன்னேன். எங்கன்னா தங்கிட்டு இருக்கும். காலை வரும்னு. எங்கப்பா கேட்கலை. கேட்கறாரு. கொடு, கொடுன்னாரு. காலைலதான் அடிச்சேன்.''

''எதுக்கு அடிக்கணும்?'' முழுவதும் புரியாத கேட்டாள்.

''எதிர் வீட்டுக்காருக்கு வாயு. புறா ரத்தம் ஊத்தி உருவனா சரியாயிரும்ன்னாரு அப்பா?''

''அறுத்து ஊத்தினாங்களா?''

''அறுக்கலை. சும்மா அப்படியே கழுத்துத் திருகி தலைய பிச்சு...''

''ஐயோ!'' அவள் மனசுள் தெரிந்த காட்சிக்கு பதறினாள். அதே சமயம் 'அட இந்தப் பையன் இதுக்கு



வருத்தப்படறானே' என்று வியந்தாள். அவளுக்கு வருத்தமில்லை வியப்புதான். வேதனையில்லை. அருவருப்புதான். மனசு உடனே இந்த புறாவுக்கு அது தெரிஞ்சா என்ன ஆவும் என்று வேடிக்கை பார்க்கத் தவித்தது.

''அந்தக் கூண்டு திறந்து வுடுங்களேன்.''

''அதுல புறா இல்லை.''

''தெரியும். இது என்னா செய்யுதுன்னு பார்க்கலாம்.''

''தேடும். சும்மா அலையும். சில சமயம் சட்டுன்னு எதுலனா முட்டி செத்துப் போவலாம்.''

''தற்கொலையா?''

''அதை மாதிரி.''

''திறந்து வுடுங்களேன்.''

அவன் தான் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பியபோது அவள் அனிச்சையாய் கூண்டுக் கதவு திறந்தாள். புறா சடசடத்து உள்ளே போயிற்று. வெளியே வந்தது. உள்ளே போயிற்று, வெளியே வந்து மற்ற புறாக்களைப் பார்த்தது. சடசடவென்று இறங்கி கொத்துக் கடலைகளை உண்ணத் துவங்கியது. வெங்கட லட்சுமி ஏமாற்றமானாள். அவன் கொஞ்சம் நிம்மதியடைந்தான்.

''தற்கொலை பண்ணிக்குன்னீங்க?''

''செய்துக்கலை''

''அதெல்லாம் செய்யாது. வேற ஆம்பளை தேடிக்கும்.''

''புறா அப்படியில்லீங்க.''

''எல்லாம் அப்படித்தான்.''

''இப்பக் கூட ஒண்ணும் சொல்ல முடியாது பசி... அதுனால சாப்பிடுது. சாப்பிட்டு மறுபடி தேடும். காணம்னு தெரிஞ்சவுடனே செத்தாலும் செத்தரலாம்.

சவுக்குக் கம்பில் தட்டி கட்டியிருந்தது. புறாக்களை தட்டியில் வைத்து அப்படியே சவுக்குக் கம்பு உச்சியில் கயிறு தூக்கி ஏற்றினான். உண்டு, நீர் குடித்தன புறாக் கள். தட்டி உச்சிக்குப் போனதும் வானத்தைப் பார்த்து சரெட்டென்று பறந்தன. அந்தப் புறா மட்டும் தட்டியி லேயே இருந்தது.

''சரவணா...'' அப்பாவின் குரல் கேட்டது.

''இந்தா வந்துட்டேம்பா.''

''இது கொஞ்சம் அரைச்சிக் குடுறா.'' சிறிய கலுவத் தில் நீரில் ஊறிய பட்டைகளைப் போட்டு குழவியால் அப்பா குத்திக் கொண்டிருந்தார்.

''ஏங்க கொஞ்சம் புறா பார்த்துக்கறீங்களா?'' வெங்கடலட்சுமியிடம் சொல்லிவிட்டுச் சரவணன் வீட்டுக் குள் ஓடினான்.

''புறா துறந்து விட்டேம்பா.''

''அது பாட்டுக்கு இருக்கும். வாடா.''

''காலைல அடிச்சமே அதும் ஜோடி வந்துருச்சு.''

''வரட்டும், காலைல மருந்து சாப்பிட்டியா?''

''சாப்பிட்டேன்.''

''பரபரன்னு அரை. நல்லா பசிக்கும். நல்லா சாப்பிட லாம். பத்து பாட்டிலு நெல்லிக்கா லேகியம் தரணும். ஊறின நெல்லிக்கா மசிச்சுடலாம். இந்த லவங்கம் பட்டை எனக்கு மசியாது.''

''கலுவத்துல ஆட்டறதவிட அம்மிகல்ல ஆட்டிற லாமே.''

''செய்.''

பட்டைகளை வழித்துப் பாத்திரத்தில் போட்டுக் கொண்டு சரவணன் சமையலறைக்குப் போனான்.



வெளியே பறக்காமலும், தரைக்கு இறங்காமலும் புறா வானம் பார்த்தபடி மௌனமாய் இருந்தது.

வெங்கடலட்சுமி கையால் அதை விரட்டினாள். கல் எடுத்து எறிந்தாள். அவள் கல்லுக்கு மற்றபுறாக்கள் பறந் தன. கலவரமாயின. சந்திலிருந்து வெளிப்பட்டு நாலா திசைகளிலும் பறந்து எதிர் வீடு, பின் வீடு அவள் வீடு என்று நோக்கிப் பாய்ந்து அமர்ந்து கொண்டன.

ஊறின நெல்லிக்காயை அழுத்திப் அழுத்திப் பிசைந் தது முருகு வைத்தியருக்கு கையெல்லாம் எரிந்தது. சோற்றுக் குழைவாய் பிசைந்ததைச் சட்டியில் போட்டு விட்டு ரசத்தை வடித்து பாட்டிலில் போட்டுக் கொண் டார். வண்டல் துணியில் படிந்தது. அதைப் பிழிந்து வாயில் விட்டுக் கொண்டார்.

உண்மையில் இதுதான் அருமருந்து. நாலு நாள் ஊறி நெல்லிரசம் மொத்தமும் ஜலத்தில் இருக்க அந்த வண்டல் முழுவதும் ஜீவசத்தாய் மாறியிருந்தது.

வாய் முழுவதும் புளித்து அந்தப் பளிப்பு தொண்டை யில் இறங்கியது. அமிர்தம் அமிர்தம் என்று சொல்கிறார் களே. பாற் கடல் கடைந்து எடுத்ததாய் புராணம் சொல் கிறதே. அதுகூட புளிப்பாய்தான் இருக்கவேண்டும். புளித்த காடியில்தான் உயிர்ச்சத்து வாழமுடியும்.

இரைப்பைத் தொட்ட புளிப்பு நெல்லி ரசம் வயிற்று அமிலத்தோடு கலக்கும். கொஞ்சம் வாயு பிரியும், ஏப்பம் வரும். பிறகு குடல் வழியே இறங்கி ரத்த அணுக்களோடு சேரும். மெல்லிய நரம்பு வழியே தோலுக்குப் போகும். ரோமக்காலில் அமரும். குடலில்உள்ள பூச்சிகளைக் கொல் லும். ரத்த விருத்தியில் கண் பார்வை ஜொலிக்கும். தோல் பளபளப்பாகும். தலை மயிர் கருக்கும். எல்லாம் முடித்து இரண்டரை நாளில் மிச்ச தாதுக்கள் பிறப்பு அணுக்கள் ஸ்தானத்திற்குப் போகும். பூச்சிகள் செத்த குடலில் எந்த உணவு இறங்கினாலும் மொத்தமாய் ஜீரணமாகும்.

அழியா இளமை, உடல்வலு, தேகசாந்தி. நல்முத்து குழைத்துப்போட்ட சூரணம் வேறு இருக்கிறது. சுத்த மான சுண்ணாம்புச் சத்து, அரை கொட்டைப் பாக்கு பிற்பகலில் சாப்பிட எலும்பு உறுதிப்படும். பல் விழாது. நகம் பளபளக்கும். முதுகு உறுதிப்படும்.

நாற்பத்தியிரண்டு வயசுக்குப் பீமசேனன் மாதிரி இருக்கலாம். பெண்களை சந்தோஷப்படுத்தலாம். பெண் களில் பல வகை உண்டு. பத்தினி, சித்தினி என்று தனித் தனி பிரிவு உண்டு. பத்தினிக்கு நாணம் அதிகம்; காமம் குறைவு. சித்தினிக்கு காமம் உண்டு. நாணமும் உண்டு. பத்தினிக்கு பார்வை பரவசப்படுத்தும். சித்தினிக்கு உரசல் தேவைப்படும்.

ராட்சஸப் பெண்ணாய் இல்லாமலும், பத்தினி பெண் ணைத் தொந்தரவு செய்யாமலும், சித்தினியாய் பெண் கிடைக்க சந்தோஷம் கரைபுரளும். சித்தினியிடம் அரளி வாசனை அடிக்கும். அவள் எச்சிலில் புளிப்பு இருக்கும். புளிப்பு ஜீவரசம், உயர்ந்த விஷயம்.

ஜீவரசம் ஜீவசரத்தோடு சேருதலே பேரின்பம்.

வாசலுக்கு வந்து நெஞ்சு தடவி யோசிக்கிறபோது புறா சந்தில் குரல் கேட்டது.

''ஏங்க யாருன்னா வாங்களேன்''

இறங்கி வேகமாய்ப் போனார்.

வெங்கடலட்சுமி பீரோ மாதிரி இருந்த புறாக் கூண்டில் கால் வைத்து ஏறி தட்டிக் கம்பை பிடித்துக் கொண்டிருந்தாள்.

''அட நீ என்ன பண்ற இங்கே?''

''சரவணன் இல்லிங்களா?''

''உள்ள வேலையா இருக்கான். என்னாச்சு உனக்கு?''



''புறா பார்த்துக்கச் சொன்னாரு. நாய் குறுக்க பாஞ்சுதா, சடபுடன்னு எல்லா பறந்துருச்சு''

''பறந்தது தானா தரைக்கு வரும். நீயும் பறக் கணும்னு பார்த்தா?''

''ஐய்ய நான் அதுக்கு ஏறலை.''

''எதுக்கு ஏறினே?''

''தட்டி சிக்கிக்கிச்சு; இறக்க முடியலை.''

''முதல்ல நீ இறங்கு''

''பயமா இருக்குது''

''தைரியமா ஏறின''

''ஒரு வேகத்துல ஏறிட்டேன்.''

''இரு. ஸ்டூல் போடறேன்.'' அவர் திரும்ப, அவள் கத்தினாள்.

''போவாதீங்க... போவாதீங்க...''

''ஏன்?''

''இறக்கி வுட்டுப் போங்க''

உள்ளே வயசுப் பெண்ணாயிற்றே என்ற தயக்கம் வந்தது. தெருவில் மாடுகள் மட்டும் அலைந்து கொண் டிருந்தன. அருகே போய் இடுப்புப் பிடித்து—

''கைவுடு புள்ளே'' என்று தம்பிடித்து கத்தினார்.

அரளி வாசனை அடித்தது.

அவர் மார்பில் மெத்தென்று பிருஷ்டம் பட தரைக்கு இறங்கினாள்.

வலது கழுத்தில் பெரிய மச்சம் வெங்கடலட்சுமிக்கு. விரல்கள் நீளம். உதடு வளைந்து கனிந்து தொங்குகிறது. கண் இரப்பை சிவப்பேறி இருக்கிறது. திமிறி கம்பிக் கம்பி யாய் இருக்கும் கட்டைத் தலைமுடி. புறங்கை வரைக்கும்

லேசாய் தங்க இழைகளாய் பூனை மயிர். அகல இடுப்பு அகல பாதம். சின்ன நெற்றி. நடுவில் மேடு கட்டின மூக்கு. இறங்கின மூக்கு நுனி. தோள் அகலம். மார்பு அகலம். அரளி வாசனை. இது சித்தினி.

''புறான்னா இஷ்டமா?''

''பொழுது போவலை. சும்மா வேடிக்கை பார்ப்பேன்.''

''புறா காத்து உடம்புக்கு நல்லது. அப்பா எங்க?''

''தூங்கறாரு''

''ராத்திரி லேசாய் குரல் கேட்டது?''

''எனக்குத் தெரியாது. நான் முழிச்சபோது உள்ள தூங்கிட்டிருந்தாரு''

''தூங்கட்டும். தண்ணி வைக்காத போய்டான் புறாவுக்கு.''

''நீ கூப்புட்டதும் போய்ட்டாரு. ஒரு புறாவ காலைல கொன்னுட்டாராமே உங்க புள்ளை?''

''வைத்தியத்துக்குத்தான் வளர்க்கறோம்.''

''சாப்பிடறதா புறாக்கறி?''

''சாப்பிடலாம். ஆனா அது அவ்வளவு நல்லதில்லை. வயிறு நோவும். சூடு.''

''எனக்கும் சூட்டுல வயிறு நோவு''

''இப்பமா?''

''இப்ப இல்லை. நேத்து இருந்தது. சோடா எலுமிச்சம் பழம் சாப்பிட்டேன்.''

''அது எதுக்கு? என்கிட்ட சொன்னா நான் குளிகை தர மாட்டேன். கைகொண்டா.''

நாடி பார்த்தார். நெஞ்சு படபடப்பு இன்னமும் கைகளில் தெரிந்தது.



''கணச்சூடுதான். வயிறு சுத்தம் பண்ணா சரியாய்டும். சரவணன் வேலையா இருக்கான். ஒரு பக்கெட்டு தண்ணி கொண்டாயேன். சட்டில ஊத்தி தரையும் தெளிச்சுடலாம்.''

''நான் தெளிக்கிறேன்'' உள்ளே ஓடினாள். பின் பக்கம் குடமென அசைந்தது.

சித்தினிப் பெண்ணைக் கவர முதல் வழி புகழ்ந்து பேசுதல். பிறகு அவளிடம் அக்கறை காட்டி பரிசுப் பொருள்கள் தருதல். சித்தினிக்கு கழுத்தும், காது புற மடலும் உணர்ச்சி மயமானவை. இடுப்புத் தடவுதல் அவளை ஆவேசப்படுத்தும். அவளைப் படுக்கையில் சந்தோஷப்படுத்த பல வழிகள் உள்ளன. முதலில் பாராட்டலாம்.

முருக வைத்தியர் பூந்துடப்பம் எடுத்து சிதறிய தானியங்களை மெல்ல சேர்த்தார். கூண்டுக்குள் துடப்பம் விட்டு எச்சங்களை அப்புறப்படுத்தினார்.

''அட என்னா நீங்க போய் துடைப்பம் எடுத்துக்கிட்டு. அதான் நான் வரனேன்னு சொன்னேனில்லே.'' வெங்கடலட்சுமி பக்கெட்டுடன் வந்தாள்.

''நல்லாருக்கே. அடுத்த வீட்டுப் பொண்ணை நம்ம இடம் பெருக்கறதுக்கு கூப்புடறது?''

''ஆம்பளை பெருக்கக் கூடாதுன்னுவாங்க.''

''அது சோம்பேறி ஆம்பளைங்க சொன்னது. செய்யற வேலைல ஆம்பளை என்னா? பொம்பளை என்னா? உள்ள என் புள்ளை சரவணன் அம்மில மருந்து அரைச்சுக்கிட்டு இருக்கான். அரைக்காத மருந்து செய்ய முடியுமா?''

''அவங்க ரொம்ப நல்ல மாதிரி''

''யாரு?''

''உங்க புள்ளை''

''ஆமா. சொல் பேச்சு பட்டுன்னி கேட்பான். வேற புள்ளைன்னா இப்படி உட்கார்ந்து அரைக்குமா? ஆமா, உனக்கு ஏன் இன்னும் கல்யாணம் ஆவலை?''

''ஏதோ மேலோட்டமா பார்க்கறாங்க. ஒண்ணும் தகையலை.'' வெங்கடலட்சுமி பேசிக்கொண்டே நீர் தெளிக்க ஆரம்பித்தாள்.

''ஏன் மேலோட்டமா?''

''துட்டு இல்லை. அதும் தவிர எனக்கு மூலநட்சத்திரம், அது குறையா சொல்றாங்க.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லையம்மா. எங்கக்கா ஒருத்தி கூட மூலம். இன்னமும் தொங்க தொங்க தாலி கட்டிகிட்டு நல்லாதான் இருக்கா.''

வெங்கடலட்சுமி பாவாடையைத் தூக்கிச் சொருகி தண்ணீர் தெளித்தது முருக வைத்தியரை கிறுகிறுக்க வைத்தது.

''உன் அழகுக்கு உங்கப்பா கொஞ்சம் முயற்சி பண்ணா நல்ல இடமாவே கிடைச்சுரும். நான் பண்ணட்டா?'' அவர் குரலில் ஆசை இருந்தது.

''செய்யுங்க'' அவள் குரலில் தாபம் இருந்தது. சரவணனைக் கட்டிக் கொடுக்கலாம் என்று நினைக்கிறாரோ என்று தோன்றியது.

''கல்யாணத்துக்குன்னு நிக்கிற பொண்ணு கொஞ்சம் அலங்காரமா இருக்கணும். கால்ல கொலுசு, கைல நாலு வளை போட்டுருக்கணும்.''

''கொலுசு போட்டுருந்தேன். அறுந்து போச்சு.''

''வேற வாங்கறதுக்கு துட்டு இல்லைன்னு சொல்லாதே''

''துட்டு இல்லைதான்.''



''அப்ப நான் வாங்கித் தரட்டா? நல்ல பட்டை கொலுசு.''

''ஐயோ அப்பா கொன்னுருவாரு''

''அக்கா வாங்கி கொடுத்துச்சுன்னு சொல்லிரு''

''அக்கா வீடு சௌகார்பேட்டை. நான் போவாத எப்படி இங்க கொலுசு வரும்?''

''ஒரு நா போறது, போறப்ப என்கிட்ட சொல்றது''

''சொன்னா''

''நானும் அப்படியே கூட வந்து சௌகார்பேட்டை
ல்யே உனக்கு புடிச்ச கொலுசா வாங்கி...''

நீர் தெளித்து முடித்து அவரை நேருக்கு நேர் பார்த்தாள். முருக வைத்தியரை என்ன விதத்தில் சேர்ப்பது என்று தெரியவில்லை. ஏன் இந்த திடீர் அன்பு புரியவில்லை.

''சரவணனுக்கு கல்யாணம் செய்யலையா?''

''அவன் சின்னப் பையன். எந்தத் தொழிலும் தெரி
யாது. கல்யாணம் மட்டும் பண்ணிக்கிட்டா என்ன
புண்யம். ஆம்பளை சம்பாதிக்கணும். நாலு பேரை காப்
பாத்தற அளவுக்கு நிக்கணும்.''

''மருந்து விக்கறதுல நிறைய துட்டா?''

''துட்டா? பூந்து புறப்பட்டா அள்ளிரலாம். நாலு ரூவா நெல்லிக்கா இரண்டு படி, இதர சாமான் ஒரு பதினைஞ்சு. மொத்தம் அப்படியும் இப்படியுமா இருவது இருவத்தஞ்சு செலவு பண்ணா, பத்து பாட்டில் மருந்து எடுத்துடலாம். பாட்டில் இருவது ரூவாய்க்கு விக்கலாம். கடைக்காரன் லேபிள் போட்டு கூடவே விலைக்கு விப்பான்.''

''என்ன அது?''

''நெல்லிக்காய் லேகியம்''

''எதுக்கு?''

''ஜீரண சக்தி, ரத்த விருத்தி, உடம்பு பலம். அப்பறம் ஆம்பளைத் தன்மை.''

அவளுக்கு வெட்கம் வந்தது. ''இதுக்கெல்லாம் மருந்து இருக்கா?''

''தினம் நான் சாப்பிடறேனே. முண்டா தொட்டுப் பார் கல்லாட்டம்''

தொட்டாள். வியந்தாள்.

''உன்னை ஒரு கைல தூக்கி நிறுத்திடுவேன் ''

''ஐயோ வேணாம்.''

''சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். எப்ப போலாம் சௌகார்பேட்டை?''

''சேர்ந்தா போறது? அப்பா கொன்னுரும்.''

''நீ ஒரு நடை அக்கா வீட்டுக்கு போய்டு. நான் சாயந் திரமே வாங்கி வச்சுடறேன். வரப்போ என்கிட்ட வாங்கிக்க.''

''என்னத்துக்கு உங்களுக்குச் சிரமம்?''

''நீ தண்ணி தெளிக்கும்போது வெறும் கால பார்த் தேன். அடடா கொலுசு போட்டா கண்டங்காலு பளிச் சுன்னு இருக்குமேன்னு தோணுச்சு.''

''கால்ல முடி இருக்கு. போவுமா. மருந்து போட லாமா?''

''ஏன் போவணும்''

''அசிங்கம்ன் றாங்களே சில பேரு?''

''விவரம் தெரியாதவன் சொல்வான். கால்ல முடி இருந்தா...''

''இருந்தா...''

''ஆசை அதிகம்.''



''ஐயே...''

''இருந்துட்டுப் போவுது. ஆசை இல்லாதவங்க யாரு?''

''தப்பில்லையா?''

''யப்போவ் அரைச்சுட்டேன்.'' உள்ளே இருந்து குரல் கேட்டது.

''நான் போட்ட?''

''இரு சரவணன் வரட்டும். அப்பால போ. மறுபடி நாய் பாஞ்சுற போவுது. கொலுசு பத்தி சரவணன்கிட்ட சொல்லாதே.''

குறை சொல்ல முடியாதபடி விழுது மாதிரி பிள்ளை லவங்கப்பட்டை அரைத்து வைத்திருந்தது. காய விடக் கூடாது. அடுப்பில் வைத்து விழுதை ஒரு கிண்டு கிண்டி இறக்கி ஆறுகிறபோது நெல்லி விழுதோடு சேர்த்துவிட வேண்டும். அரைமணி வேலை. சரவணன் புறாவிடம் போய்விடக்கூடும். அந்த வெங்கடலட்சுமியோடு பேசக் கூடும். உங்க புள்ளைக்கு கல்யாணம் பண்ணலையா? வெங்கடலட்சுமி கேட்கிறது.

சித்தினிப் பெண்கள் ஆண்கள் மீது நாட்டம் வந்தால் எளிதில் குறையாது.

''சரவணா''

''என்னப்பா?''

''அந்த பக்கத்து வீட்டுப் பொண்ணைப் புறா தொட வுடாதே''

''அது சும்மா வந்து உட்காருதுப்பா''

''புறாவுக்கு பொம்பளை தீட்டு ஆவாதுடா''

''அப்படியா?''

''புறாவுக்கு சூடு தாங்காது. பொம்பளை உடம்பு எந்நேரம் சூடா இருக்கும்.''

''சரி''

அவன் வாசலுக்கு இறங்கினான். அவள் ஆவலோடு காத்திருந்தாள்.

''ம்...ம்''

''இடம் பெருக்கி தண்ணி தெளிச்சு சுத்தமா வெச்சுட்டேன். பாத்தியா?''

''உனக்கேன் இதல்லாம்''

''சும்மா வேடிக்கை பாக்கறோமே, செய்யலாமேன்னுதான்''

''வேடிக்கை பார்க்கறதோட நிறுத்திக்க''

அவள் மனசு சட்டென்று காயப்பட்டது.

''ஏன் செய்தா என்ன?''

''பொம்பளைங்க அனாவஸ்யமா புறா தொடக்கூடாது.''

''ஏன் தொட்டா செத்துருமா?''

மேலே ஜோடி இழந்த பேடைப்புறா வட்டமிட்டு சகல இடமும் தன் இணையைத் தேடியது. அது இல்லை என்று உணர்ந்திருக்க வேண்டும். உச்சியில் பறக்கும் போது திடீரென்று சோகப்பட்டது. சிறகுகள் மூடிக் கொண்டது. தலை கீழே இருக்க, வேகமாய் பூமி நோக்கி வந்தது. மொட்டென்று கூரை நுனியில் தலைமோத, அடிபட்டு சிறகுகள் தெறிக்க கூண்டில் விழுந்து தரையில் புரண்டது.

சரவணனும் வெங்கடலட்சுமியும் பயந்து விலகினார்கள். புறா மல்லாக்காக, கிடந்தது. விழிகள் உருட்டிப் பார்த்தது. மெல்ல வாய் பிளந்தது. உயிர் விட்டது.

சரவணன் புறாவை வாரி எடுத்தான். பிளந்த வாய் வழியே நீர் ஊற்றினான். புறா அசையவில்லை.

''இது காலையில கொன்னியே அதும் ஜோடி''



''ச்சீ போடி அன்னாண்ட.'' புறாவின் மரணம், அவனை நிலைகுலைய வைத்தது.

''டேய் யாரைப் போடின்றே?''

''உன்னை யார் தண்ணி தெளிக்கச் சொன்னது?''

''நான் தண்ணி தெளிச்சதாலதான் போச்சா? காலைல இதும் ஜோடிய கொன்னுட்டே. அதுனால செத்துப் போச்சு. கொலைகாரப்பாவி. ஒன்னுக்கு இரண்டா கொன்னிட்டியே.''

''நீ உங்க வூட்டுக்குப் போ முதல்ல''

''போ முடியாது. நான் இங்கத்தான் உட்காருவேன்.'' அவள், வீட்டு நடையில் உட்கார்ந்து கொண்டாள். மற்ற புறாக்கள் இடம் மாறிக் கொண்டே இருந்தன.

அவன் இறந்த புறாவை கூடை போட்டு மூடினான். மேலே பறப்பவைகளுக்கு விசில் கொடுத்தான். கீழே மேய்ந்தவைகளை எடுத்துக் கூண்டில் போட்டான்.

சிக்கிக் கொண்ட தட்டியை இறக்க, லுங்கியை மடித்து கட்டி கூண்டில் கால் வைத்து ஏறி, எக்கி கொம்பு தொட்டு தட்டி கயிறு விடுவித்தான்.

அவன் உடம்பு வில் மாதிரி வளைந்தது. ஆடுகால் தசைகள் சவுக்கட்டை மாதிரி உருளையாய்த் தெரிந்தன. தொடைவரை ரோமம் பரவியிருந்தது. தட்டி இறங்கியது. மேலே பறந்த புறாக்கள், தரைக்கு இறங்கின.

அவனை மீண்டும் சீண்ட, அவள் தரையில் உள்ள புறாவைக் கை வீசித் துரத்தினாள். புறா சிறகடித்து ஓட்டுக் கூரைக்குப் போயிற்று.

''யேய், சும்மா இரு''

அவன் ஆள் உயர கூண்டில் குத்திட்டு அமர்ந்திருந்தான்.

''ஏன் சும்மா இருக்கணும்? எங்க வூட்டு கூரையெல்லாம் எச்சம் பண்ணுது.''

''பளிங்குலியா கட்டியிருக்கிங்க உங்க வீட்டை? நாட்டோடு தானே?''

''எங்க வீட்ல எது உட்கார்ந்தாலும் துரத்துவேன்.''

''அட போம்மா.'' சரவணன் இந்த விளையாட்டு தொடர முடியாது. அலுத்துக் கொண்டான்.

வெங்கடலட்சுமிக்கு அவன் பின் வாங்கல் சந்தோஷமாய் இருந்தது. அதே சமயம் அவன் கோபித்துக் கொண்டு உள்ளே போய்விட்டால் போர் அடிக்கும். வேறு என்ன செய்வது என்று தெரியாது போகும்.

''சரி நான் செஞ்சுது தப்புதான். இனிமே புறா துரத்தலை.''

''சரி உன் வேலைய பார்த்துட்டு போ.''

''உங்கப்பா எவ்வளவோ பிரியமா பேசறாரு''

''யார் மேல பிரியம்?''

''உன் மேலதான். நீ எதுனா தொழில் கத்துக்கிட்டு நிமிரமாட்டேன்றியாம். அவருகிட்ட ஏன் லேகியம் பண்றது கத்துக்கக் கூடாது?''

''எனக்குத் தெரியும் என்னா செய்யணும்னு''

''உனக்கு கல்யாணத்துக்கு பார்க்கறாங்களாமே''

''யார் சொன்னது?''

''உங்கப்பா. என் புள்ளைய கட்டிக்கிறியான்னு கேட்டாரு. எங்க வீட்ல கேளுங்கன்னுட்டேன்.''

''கல்யாணமா? தனக்கா? இவளோடா? மாடு மாதிரி இருக்கிற இந்தப் பெண்ணை எவன் கட்டிக் குடித்தனம் செய்வான்? அப்பாவுக்கு ஏன் இப்படி ஒரு எண்ணம்? இது உண்மையா பொய்யா?

அவன் பதில் பேசாது புறாக்களை கூண்டில் அடைக்கத் துவங்கினான். அவள் பிடித்துக் கொடுக்க, இரண்டு புறாக்களை உள்ளே போட்டான்.

''உள்ள என்ன பண்ணும் இரண்டும்?''



''தெரியாது.''

''ஓட்டை வழியா பார்த்தா தெரியாது.''

''நீ பாரு, எனக்கு வேலை இருக்கு.''

''அம்மில மருந்து அரைக்கணுமா?''

''என்கிட்ட அதிகம் பேசின, உதைபடுவ.''

''சும்மா தமாஷ்தானே.'' அவன் தோள் தொட்டாள். அவன் சட்டென்று விலகினான்.

''இதெல்லாம் வேற யார் கிட்டயாவது வெச்சுக்க. பீடை. மூஞ்சியப் பாரு.'' கடைசி கூண்டை படேரென்று அடித்து மூடி, குச்சி சொருகிவிட்டு வீட்டுக்குள் போனான்.

அவள் நகம் கடித்தாள். நாதாங்கியில் சொருகியிருந்த இரண்டு, மூன்று குச்சிகளை உருவி போட்டுவிட்டு வீட்டுக்குள் போனாள்.

''எங்கடி போயிருந்தே?'' அம்மா துணிகளை அலசியவாறு கத்தினாள்.

வாசல்ல உட்காரலாம்னு போனேன். இந்த பக்கத்து வீட்டு ஆளு, முறைச்சு முறைச்சு பார்க்கறான்.

''முருக வைத்தியரா?''

''ச்சேச்சே! அவரு புள்ளை''

''வாசப்பக்கம் ஏன் போறே?''

ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருந்த கோவிந்தன் புரண்டு படுத்தார். இந்த காலத்து பையன்களே மிகவும் மோசம் என்று நினைத்துக் கொண்டார். முன்பெல்லாம் லாரி ஓட்டிகள், கிளீனர்கள் நடுத்தர வயசாய் இருப்பார்கள். இப்போது எல்லாம் சின்னப் பையன்கள் வேலைக்கு வந்து விடுகிறார்கள்.

''யோவ்'' என்று கூப்பிடுகிறார்கள். கிழவன் எழுந்து வரத்துக்குள்ள விடிஞ்சுரும் என்கிறார்கள். தகரம் நாலு

உருளை போவணும் என்றால் வேணாம் சத்தம் வரும் என்கிறார்கள். மூட்டைகளை ஏற்ற மறுக்கிறார்கள். கேஸ் பொட்டியா கொடு என்கிறார்கள். சில சமயம் சரக்கே பார்க்காமல் எதுவச்சாலும் எண்பது ரூபா. நேரா மதுரை என்கிறார்கள். இரண்டு பேரல் மண்ணெண்ணெய் அனுப்ப வழியில் பத்து லிட்டர் கறந்து விட்டார்கள்.

கொஞ்சம் கூட கூச்சமேயில்லாம ''உங்க ஊர்ல பொண்ணு கிடைக்குமா, உடம்பெல்லாம் மதமதன்னு இருக்குது'' என்கிறார்கள்.

உடம்பெல்லாம் சிறு சிறு கட்டி வந்து உபத்திரவப் பட்ட டிரைவரை, முருக வைத்தியரிடம் கூட்டிவர, தன் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த வெங்கடலட்சுமியைப் பார்த்துவிட்டு தாம்பரம் மெயின்ரோட் முழுதும் அந்த டிரைவர் சொல்லிவிட்டான், புரோக்கர் கிழவன்கிட்ட டக்கரா ஒரு பொண்ணு இருக்குது என்று பரப்பி விட்டான்.

பல டிரைவர்கள், திருமணமானவர்கள்கூட 'மாமா' என்று கூப்பிட ஆரம்பித்து விட்டார்கள். யார், யாருக்கு மாமா? ஒரு தராதரம் இல்லையா?! இந்தச் சனியன் யாரும் வரும்போதுதான் திண்ணையில் அமர்ந்து காலாட்டிக் கொண்டிருக்கிறது.

இதைக் கரையேத்தணும். கரையேத்த சகலமும் பொறுத்துக் கொண்டு சம்பாதிக்க வேண்டும். என்ன சம்பாதித்தாலும் எவனையும் வீட்டிற்கு வரவழைக்காமல் தள்ளியே நிறுத்த வேண்டும்.

லாரி டிரைவர்களை தள்ளி நிறுத்தலாம். பக்கத்து வீட்டுப் பையனை என்ன செய்வது? முருக வைத்தியரிடம் லேசாய் சொல்லி வைக்க வேண்டும். உங்களைப் போல் ஒத்தைப் பிள்ளை பெறாது, மூன்று பெத்தது பிசகு. மூன்றும் பெண்ணாய் பெத்தது தலையெழுத்து. அப்படி ஒரே பிள்ளையாய், ஏன் பெண்ணாய் இருந்தால்கூட வருமானத்திற்கு தாம்பரத்தில் நிறைய மனைகள் வளைத்துப் போட்டிருக்கலாம்.



அந்தப் பையனை மெல்ல அதட்டி வைக்கவேண்டும். எகிறினால், நாலு லாரி டிரைவர்களிடம் பேசி தட்டச் சொல்ல வேண்டும். தாம்பரம் ஜங்ஷனுக்கு வராதயா போய்டுவான். கூலி ஆட்களிடம் சொன்னால் கூடப் போதும் சட்டையைப் பிடித்து, சட்டென்று போட்டு விடுவார்கள்.

இப்போ வெளியே போய் தாம்பரம் ஜங்ஷனில் நின்றால் உள்ளே போகும் லோடில் எதாவது பிரித்துப் போடுவார்கள். நேற்று அறுவது மாம்பழம் போட்டான். விலை அதிகமாய் இருந்தது. வாங்கவில்லை. கிழிந்த மூட்டையிலிருந்து அரிசி அளந்து போடலாம். எங்கேயாவது டீசல் எண்ணெய் இறக்கும் வண்டியில் அடி வண்டல் சாய்க்கலாம்.

'ஏய்' அதட்டிய வண்ணம் எழுந்தார். ''வெந்நீர் போட்டு வை. பின்பக்கம் போய்ட்டு வரேன்.!' அரை மணியில் சட்டை பித்தான் மாட்டிக் கொண்டே சம்பாதிக்க தாம்பரம் நோக்கிப் போனார்.

## 4

நெல்லிக்காய் லேகியம் பாட்டில்களுடன் சரவணன் தாம்பரம் மெடிக்கல் ஸ்டோர் போனான்.

''வாடா கண்ணு எத்தினி பாட்டிலு?'' வரவேற்றார்கள்.

''பத்து பாட்டிலு சார்.''

''மவுண்ட்ரோட் ப்ராஞ்சுல ஒரு பத்து கேட்கறான்.''

''தரேங்க.''

''வல்லாரை லேகியம் செய்யப்படுமா?''

''செய்வாருங்க?''

''உன் பாட்டிலு வேணாம். அப்படியே ஒரு பிளாஸ்டிக் பக்கெட்ல போட்டுட்டு வந்து எடைபோட்டு வாங்கி, நாங்க பாக் பண்ணிக்கறோம்.''

''அது சரி.''

''அடுத்த நெல்லி எப்ப வரும்?''

''இனிமேதான் சாமான் வாங்கணும். கூட போட்டுறலாமா? கெட்டு போற பொருள் இல்லை.''

''பதினைஞ்சு போட்டுரு. இதுக்கு அஞ்சு பாட்டிலுக்கு வாங்கிக்க, அஞ்சு வித்துப் போனதும் தரேன்.''

''கொஞ்சம் அட்வான்ஸ் சேர்த்துக் கொடுங்க. நெல்லிக்காய் வாங்கணும்.''

இருநூறு வாங்கி தாம்பரம் ஜங்ஷனில் நடக்கும்போது லாரியிலிருந்து காய்கறி இறங்கிக்கொண்டிருந்தது.

'தடேர்' 'தடேர்' என்று ஆறு, ஏழு மூட்டை விழ, கடைசி மூட்டை கிழிந்து நெல்லிக்காய் பத்தடி வரை சிதறியது.

''ஏங்க நெல்லிக்காய் இருக்கா.'' லாரி மீது நின்றவனை சரவணன் கேட்டான்.

''அவரைக் கேளு'' கீழே மூட்டை வாங்கினவனை லாரி ஆள் கைகாட்டினான்.

''என்னாங்க நெல்லி விக்கறதுக்கா?''

''வித்துட்டம்.''

''யாரு வாங்கனுது.''

''எனக்குத் தெரியாது. புரோக்கரை கேளு.''



''நெறைய வேணுங்க''

''நாங்க விக்கறதில்லை. புரோக்கரைப் புடி.

பிரிந்த நெல்லிக்காயை சின்ன பையன்கள் பொறுக்கிக் கொண்டிருக்க, இவன் இரண்டு எடுத்து நசுக்கிப் பார்த்தான். ரசம் கொட்டியது. பெருங்காய். திரள் திரளாய் லேகியம் வரும். அப்பாவுக்கு சந்தோஷம் இருக்கும்.

''யாருதுங்க நெல்லி மூட்டை.''

பதில் எவருமே சொல்லவில்லை.

''யாருதுங்க நெல்லிக்கா?''

திரும்பிப் பார்த்து விட்டு, 'என்னுதில்லை' என்பது போல் பலர் தங்கள் வேலையைக் கவனித்தார்கள்.

மற்ற மூட்டையும் யாரும் தொடவில்லை. சரவணன் நெல்லி மூட்டையைத் தனியே எடுத்து வைத்துக் கொண்டான்.

கூலி ஆள் மாதிரி ஒருவன் ஓடி வந்தான். புரோக்கர் மூட்டைதானே, தெரியலை?'

''வேற காய்கறி இருக்கா?''

''இல்லை. இதான்.''

''அது யாருது உன்னுதா?'' நெல்லி மூட்டையைப் பார்த்துக் கேட்டான்.

''ஆமா, நான் புடிச்சுருக்கேன்.''

அந்த காய்கறி மூட்டையை தலைக்கு வைத்துக் கொண்டான். ஓடினான். நாலைந்து லாரி தாண்டி மறைந்து போனான்.

இரண்டுநடை மூட்டை போயிற்று. ஒவ்வொரு முறையும் நெல்லீ உன்னுதா என்று கேட்கப்பட்டது. 'நான் புடிச்சுட்டேன்' என்று சொன்னதும் மற்றவை நகர்த்தப்பட்டன.

கடைசி மூட்டை போயிற்று.

காத்திருந்தான்.

யாரும் வரவில்லை. அருகே கிடந்த வாழை நாரை கோணிகளில் கொடுத்து கிழிசலை இறுக்கினான். கிழிசல் பக்கத்தை மேலே வைத்து தலைக்கு மேல் மூட்டை தூக்கி, கூலி ஆள் ஓடின திக்கு நோக்கி நடந்தான்.

நாலு லாரிகளுக்குப் பிறகு வளைவாய் இன்னும் நாலு லாரிகள் நின்றிருந்தன.

அது கோவிந்த புரோக்கரின் லோடு. அவருக்கு விலை படிந்து விட்டது. ஆனால், காசு இல்லை. வட்டிக்கு காசு வாங்க அலைந்தார். டக்கென்று புரளவில்லை. ''இப்பத் தானே எல்லாம் வழிச்சுக் கொடுத்தேன்.''

''சாயந்திரம் கொடுத்துடறம்பா.''

''உன்னைய தெரியாதா? இல்லையே''

''மூட்டை மடக்கிட்டேன். லாரி நிக்குது எதுனா கொடு.''

''கோவிந்தரு. நெல்லி மூட்டை உன்னுதா?''

''ஆமாண்டா. இரு வரேன்.''

''யாரோ எடுத்துக்கிட்டு போறான்.''

''யாரு அது?''

''சின்ன பையனா இருக்கான். மூட்டைக்கு காவல் போடாத அலைறியே.''

''புடி...புடி... மூட்டைய புடி.''

சரவணன் மூட்டையோடு நடக்க, பின்னால் திபுதிபு வென்று அவர்கள் ஓடிவந்தார்கள். கோவிந்தர் அவன் தலையில் இருந்த மூட்டையில் கை வைத்து தள்ளினார். கிழிசல் பெரிசாகி நெல்லி நாலா திசையிலும் எகிறியது.



''ஏண்டா மூட்டையத் தொட்டே?'' அவனைத் திருப்பினார்.

''அட இந்த பையனா'' சினம் சற்று தணிந்தது. மறுபடி எகிறியது.

''அறிவு இருக்கா உனக்கு. கீழ போட்ட மூட்டைய வூட்டுக்கு தள்ளிக்கிட்டு போறியே, முருக வைத்தியர் புள்ளையா நீ?''

''தள்ளிகிட்டு போலீங்க. விலைக்கு.''

''பிடிச்சுட்டியா?''

''இல்லை.''

''அப்ப ஏன் தொட்ட?''

''யாருதுன்னு தெரியலை.''

''உங்காத்தா பஸ் ஸ்டாண்ட்ல தனியா உட்கார்ந் திருந்து யாருதுன்னு தெரியலைன்னு நான் போய் கை வைக்கலாமா?''

''அசிங்கமா பேசாதீங்க. நான் யாருதுன்னு தெரி யாத தேடிக்கிட்டு இருக்கேன்.''

''தெரியலைன்னா அப்படியே வூட்டுக்குப் போயிடு விய்யா?''

''ஏம்பா மூட்டை காணம்னு பதறிட்டோம். இப்படி தலைல வச்சுக்கிட்டு போனா எப்படி?''

''மொட்டை பையன். புத்திய காமிச்சுட்டான்.''

''தாம்பரம் பையன் தானப்பா.''

''ஆமா. வெறும் தண்டச்சோறு, புறா வளர்க்க றேன்னு வீட்டுக் கூரைல ஏறி பொம்பளை குளிக்கறத பார்க்கற முண்டம்.''

''ஏங்க சும்மா இருங்க. தேவையில்லாத பேசிட்டு. நெல்லி எவ்வளவு விலை?''

''கொடுக்கறதா இல்லை.''

''ஏன்?''

''பொட்டை பசங்களோட வியாபாரம் பேசமாட்டோம். டேய், வாரி உள்ளே போடறா. வுட்டா ஊரையே திருடிக்கிட்டு போய்டுவானுங்க மொள்ளமாறி பசங்க.''

''யோவ் யாரைச் சொல்ற?''

''உன்னதாண்டா சொல்றேன். குணங்கெட்ட சோம்பேறி.''

''பெரிசு, உதை படுவே.''

''நானா, என்னையா உதைப்ப? உங்கப்பன் மூஞ்சிக்குப் பார்க்கறேன். செருப்பு பிஞ்சுரும். தேவிடியா மவன''

''யேய், எச்சக் கிழவா'' சட்டென்று ஆத்திரமாய் சரவணன் சட்டை பிடிக்க, பொத்து பொத்தென்று அடிகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

வயசாளி கோவிந்தனுக்கு வேகம் இருந்ததே தவிர வலுவில்லை. ஆள்கூட இருக்கற தெம்பில் வேட்டி அவிழ்வதுகூடத் தெரியாது எகிறிப் பாய்ந்து சரவணன் முகத்தில் குத்தினார்.

''வீட்ல சும்மா இருக்கற பொட்டை புள்ளைய நோட்டம் போடற ஜாதி கெட்ட நாயே.''

புரேர்க்கரை விலக்கினார்கள்.

''இவன் பேமானிப்பா, பொட்ட புள்ளை படியேறி வந்து சத்தாய்க்கறான். மூட்டை திருடறான்.''

ஜங்ஷன் புரோக்கர்கள் லாரி ஆட்கள் சூழ்ந்து கொண்டார்கள். கூலிகள் கோவப்பட்டார்கள்.

''சதா எதுனா எடுத்துக்கிட்டு போயிடறானுங்க. போனதாட்டி புடலங்கா அப்படியே பாயாட போய்ட்டுச்சு.''



''போடு வாய் மேலியே.''

''முருக வைத்தியர் புள்ளைப்பா.''

''முருக வைத்தியரா? போடு, மாட்டடி போடு, ஏண்டா. ஏன் மூட்டைய எடுத்த?''

''அங்க இருந்த மூட்டை எவ்வளவு தூரம் தூக்கியாந்துட்டாம் பார்.''

''கேட்டதுக்கு நான் புடிச்சுட்டேன்னான். சரின்னு வந்துட்டேன்.''

சரவணன் சட்டையைக் கிழித்து முதுகில் பளார் என்று அறைந்தார்கள். சரவணன் திமிறினான். பயந்தான். ஓடினான். ஓட கூட்டம் துரத்தியது. மறுபடியும் மிக மோசமாய் அடி விழும் என்று தோன்றியது.

ஒரு கடையின் கூரையிலிருந்து மூங்கிலை உருவினான். ஐந்தடி நீள மூங்கில் அது. அடி பருத்து நுனி சிறுத்து நீண்ட உடைவாள் போல இருந்தது.

எகிறி அருகே வந்த கூலியின் இடுப்பில் படீரென்று அடித்தான். அடுத்த ஆளை இடது கையால் தடுத்து திருப்பி பிருஷ்டத்தில் தாக்கினான். முகத்துக்கருகே இன்னொருவர் கையை மூங்கிலால் பளிச்சென்று தடுத்துத் தள்ளினான்.

சரசரவென்று சுழற்றினான். அவன், அவன் வசமில்லாது ரெளத்திரமானான்.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

''தூண்டலாமா'' மாமன்னர் ராசராசர் கேட்டார்.

''தூண்டலாம்.''

அவர்கள் சரவணனை நெருங்கினார்கள். சரவணன் நெஞ்சு அடைத்தது. கண் லேசாய் இருண்டது.

'காரிக்குளிப்பாகை.'

'காரிக்குளிப்பாகை.'

யாரோ சிலர் அவன் காதருகே கூவினார்கள். நெல்
வயல் வாசனை மூக்கருகே அடித்தது.

''காரிக்குளிப்பாகை. நீ இடங்கை வீரன், வாள்
மாற்று' இடங்கைக்கு மாற்று.'' மூங்கில் கழியை இட
துக்கு மாற்றினான்.

அவனிடம் பிரம்பால் அடிபட்டவர்கள் சவுக்குக்கட்
டையும் இரும்புக் கழியும் பேட்டரி ஒயருமாய் நெருங்கி
னார்கள்.

'காரிக்குளிப்பாகை' பின்னால் ஒருவன் கல் எடுத்து
வீசப் போகிறான் கவனி.''

கட்டளை எங்கிருந்தோ வந்தது.

சட்டென்று திரும்ப, கல் உயரே கிளம்பி அவனை
நோக்கி வந்தது. வலது கையால் அதை வாங்கினதுபோல்
பிடித்தான். வீசப்பட்ட கட்டையும், பேட்டரி ஒயரும்
மூங்கில் கழியால் தடுக்கப்பட்டன. தடுக்கப்பட்டபோதே
அந்த ஆயுதங்களைத் தாங்கிய கைகள் தாக்கப்பட்டன.

''காரி குளிப்பாகை. முன்னேறு. சகலரும் பயந்திருக்
கிறார்கள். உன்னை முதுகில் அறைந்தவன் பத்து ஆட்
களுக்குப் பின்னால் பதறி ஒளிகிறான். முன்னேறு.''
மண்டியிட்டு இடது கை கம்பு வீசியபடி நாலு தவ்வலில்
முன்னேறி முதுகில் அறைந்தவன் கையைப் பிடித்தான்.
முறுக்கினான். அவன் அலற ஒரு லாரியோடு நிறுத்தி
னான். கூட்டம் பயந்து விலகி நின்றது.

''இங்க வாய்யா'' கூலி ஆளை அருகே அழைத்தான்.
''வா இங்கே'' அதட்டினான்.

''உன்கிட்ட என்னா சொன்னேன்'' சரவணன் குரல்
சீறலாய் வெளியாயிற்று.

''என்னா கேட்டே என்கிட்டே. நெல்லிக்கா யாருது.
நான் வாங்கணும்னு கேட்டே.''

''நீ என்னா சொன்ன?''



''ஆள் வரும் வாங்கிக்கன்னு சொன்னேன்.''

''யாரும் வரலை. நீயும் வரலை. ஏன்?''

''நான் வந்துருக்கணும். பேச்சுல மறந்து போச்சு.''

''நான் அங்கியே வுட்டுறுந்தா?''

''பசங்க கை போட்டு காய் எடுத்துருப்பாங்க,''

''நீ வரப்ப எத்தினி காய் போயிருக்கும். அது
சொல்லு.''

''நாற்பது அம்பது காய் கிழிசல்ல சிதறிடுச்சு.''

''அப்புறம்.'

''மூட்டை எடுத்துகினு எங்க இடம் தாண்டி போயிட்
டியேடா.''

''உன் எடம். மயிர் இடம். போர்டா போட்டுருக்கு
யாருதுன்னு. தேடிகிட்டு தானே வாரேன். திருடறவன்
நிதாதனமா நடந்து போவானா? நான் ஏன் திருடணும்?
இதோ காசு. சரக்கு போட்டு வரேன். மெடிக்கல்
ஸ்டோர்ல. பயித்தியமா எனக்கு? முருக வைத்தியர் புள்ளி
நான்னு தெரியாதா?''

''அவர் பொண்ணுகிட்ட ஏதோ வம்பு பண்ணி
னியாம்''

''நீ துண்ட கீழ போடு, நான் தாண்டறேன்.
எங்கம்மா சத்தியமா அந்த பொண்ணுகிட்ட நான் தப்பா
எதுவும் பேசலை. வெளியூர் ஆளா நானு? எங்க ஊர்
பொண்ணை நானே கேலி செய்வேனா? அவன்தான்
சொல்றான்னா உங்களுக்கு அறிவு வேணாம். சட்டையக்
கிழிச்சு முதுகுல அடிக்கிறியே. நான் இப்ப அடிக்கறேன்
தாங்குவியா?''

''தப்பா அடிச்சுட்டேன்.''

''என்னாது?''

''தப்பு நடந்து போச்சு.''

''நான் யார் வம்புக்கும் போகாதவன். ஆனா எம்
மேல கைவச்சா பாஞ்சோத்... கை வைக்க முடியுமா?

இங்கே உள்ள எவனா வரட்டும், ஒண்டிக்கு ஒண்டி வாங்க. இப்ப இங்க நின்னு சண்டை போடலாம் வாங்க. பொட்டை கூட்டம் மாதிரி கும்பலா அடிக்க வறீங்களடா?''

''வுடுங்க தம்பி எதோ தப்பு நடந்து போச்சு.''

''அடிக்கடி இங்கன இறங்குன பொருள் காணாம போவுதா. அதுல ஜனம் ஆத்திரமாயிடுச்சு. ஏங்க புரோக்கரு. இறக்கிறதை ஓரம் வச்சுட்டு அப்புறம் துட்டுக்கு மல்லாட வேண்டியதானே. தெரிஞ்சா புள்ளை மேல சட்டுன்னு கைவச்ச...நீ போப்பா...''

''எனக்கு நெல்லிக்கா வேணும்.''

''தரதுக்கில்லை.''

''இருங்க தம்பி. யோவ் கேட்டா விலை சொல்லு. மாலை கோத்துக்கிட்டா போப் போற.''

''எண்பது.'' கோவிந்த புரோக்கர் சொல்ல, சட்டென்று காசு எடுத்து நீட்டினான். கிழிசலை கூலிகளிடம் ஊசி நூல் வாங்கி தைக்க உட்கார்ந்தான்.

''ஆட்டம் கத்துக்கினியா.'' யாரோ கூலி கேட்டான்.

''என்னா ஆட்டம்.''

''கோல் ஆடறது.''

''இல்லை.''

''ஆ...டபாய்க்கிறியே, சர்சர்ன்னு சுத்தின.''

''எவனோ பொட்டை மாதிரி பின்னாலேர்ந்து கல்லுவுட்டாம்பா, சட்டுன்னு திரும்பி கை வாங்கி பிடிச்சுது இந்த பையன்.''

''லொட்டற கை, தைக்கறபோது வலது கை தைக்கிற. கோல் ஆடறபோது இடதுல ஆடின.''

சரக்கென்று ஊசி விரல் நுனியில் தைத்தது. ரத்தம் முத்தாய் மேலெழுந்தது.



''காரிக் குளிப்பாகை. நீ இடங்கை வீரன். யார். சொன்னது? பின்னால் கல் வருகிறது யார் பேசியது? மனசா? என் உள் மனசா? வேறு யாராவதா? இடங்கை வீரன் என்றால் என்ன?''

''அவனுக்குத் தெரியவில்லை மன்னா. எதுவும் நினைவில்லை. அவனுக்கு.''

''மெல்ல நினைவுபடுத்துவோம். அவன் வேகம் பார்த்தீர்களல்லவா பிரம்மராயரே?''

''குதிரையில் அமர்ந்து இடது வீச்சாய் இடைவிடாது சிரமறுத்துப் போவது பலமுறை பார்த்திருக்கிறேன். காரி போன இடமெல்லாம் குருதி ஏரி.''

''அதே முகம். குடுமிதான் காணோம்.''

''இவர் பிறந்தது இதற்கா?'' பரமி குரல் கேட்டது.

''இல்லை, காதல் என்பது என்ன என்று தெரிந்து கொள்ள பரமி'' பிரம்மராயர் பதில் சொன்னார்.

''அருகே வசிக்கும் பெண்மீது நாட்டமேயில்லையே?''

''தெரியவில்லை. நாட்டம் இனி வரலாம். இறைவன் விருப்பம் எதுவோ.''

''காதல் என்பது என்ன என்று அறிய காதலித்தல் அவஸ்யமோ பிரம்மராயரே?''

''வேறு எப்படி?''

''கந்தன் மாறவேள் காதல் வசப்பட்டிருக்கிறானே.''

''காதலா அது?'' பரமி கேட்டாள்.

பலர் சிரிக்கும் குரல் கேட்டது.

''தந்தை காதலித்து மகன் அதைப் புரிந்துகொள்வான் என்கிறீர்களா.''

''என் யூகம் அவ்விதம்.''

''மன்னா அதோ கந்தன் மாறவேள். அவன் வீட்டு வாசலில் போவோம்.''

## 5

‘‘கோவிந்தரு’’ முருக வைத்தியர் மெல்ல கதவு திறந்தார்.

‘‘கோவிந்தரு’’ மறுபடி கூப்பிட்டு ரேழிக்குள் நடந்தார். ரேழி தாண்டி முற்றம். முற்றம் எதிர்புறம் கூடம். சமையலறை வாசலில் தலை வைத்து வெங்கடலட்சுமி அம்மா படுத்துக்கொண்டிருந்தாள். வெங்கடலட்சுமி நேர் எதிரே கொல்லைப்புறத்தில் ஏழாங்காய் தூக்கிப் போட்டு ஆடுவது தெரிந்தது.

முருக வைத்தியர் உள்ளே நடந்தார்.

‘‘லட்சுமி.’’

‘‘ஐயோ.’’

‘‘ஒண்ணுமில்ல. நான்தான்.’’

‘‘அப்பா இல்லையா?’’

‘‘இல்லை. ஜங்ஷனுக்குப் போயிருக்காரு.’’

‘‘வயறு நோவுதின்னியேன்னு எண்ணை சுட வச்சு கொண்டாந்தேன்.’’

‘‘இப்ப இல்லை. நேத்து நோவுச்சு.’’

‘‘இந்த எண்ணையை வெத்தலையோட அடி வைத்துல வச்சுக்கிட்டா சட்டுன்னு காலவர்லவலி வாங்கிடும்.’’

‘‘அப்பா இல்லையே.’’

‘‘அதும் தவிர அளவு எடுக்கணும் கொலுசுக்கு.’’

‘‘எதுல.’’

‘‘நான் கொலுசே கொண்டாந்துட்டேன். போட்டுப் பார்க்கணும்.’’



‘‘கடைக்கு போனிங்களா?’’

‘‘இல்லை. என் பொண்டாட்டி இப்ப போடறதில்லை.’’

‘‘பார்த்தா திட்டமாட்டாங்க.’’

‘‘நீ ஏன் காட்டற? அது தவிர எல்லா கொலுசும் ஒரு மாதிரிதான்.’’

‘‘அம்மா கேட்குமே.’’

‘‘அக்கா எப்பமோ கொடுத்தது, பழசு. உள்ள வச்சுருக்குன்னு சொல்லிரு.’’

‘‘தடால்ன்னு கொலுசெல்லாம் கொடுத்தா எனக்கு பயமாயிருக்குது.’’

‘‘சரி வேணாம். எண்ணை மட்டும் வாங்கிக்க.’’

‘‘என்ன செய்யணும்?’’

‘‘அப்படியே இலையோட தொப்புள் மேல வச்சுரு.’’

‘‘இப்படியா.’’

‘‘இல்லை இன்னும் கொஞ்சம் கீழ இறக்கினாப்பல.’’

‘‘இப்ப.’’

‘‘இது சரி.’’

‘‘என்ன வயசு உனக்கு?’’

‘‘இருவத்தி மூணு.’’

‘‘அதான். சூடு தூக்குது.’’

‘‘என்ன சூடு.’’

‘‘ஆசைல உடம்புக்கு ஒரு சூடு வரும்.’’

‘‘ஐய அதெல்லாம் வரலை.’’

‘‘எனக்குத் தெரிஞ்சுதே.’’

‘‘சும்மா சொல்றீங்க.’’

‘‘ஆசையே இல்லேன்றியா?’’

''இருக்கு. அதுக்கு நேரம் வர வேணாமா? அம்மா கூடத்துல படுத்துருக்கு. முழிச்சுக்கும்.''

''நான் இப்படியே கொலைப்புறமா போயிடறேன். கொலுசு வாணாவா?''

''கொடுங்க, போட்டு பார்த்துக் கொடுத்துடறேன். உங்க பொண்டாட்டி வீட்ல இல்லையா?''

''எதிர் வீட்ல ஏதோ பலகாரம் பண்றாப்பல, துணைக்குப்போயிருக்குது. கொலுசு போட்டாந்து காட்டறியா?''

''சரவணன்?''

''அவன் ஜங்ஷன் போயிருக்கான். நான் வரட்டா.''

சட்டென்று கொல்லை வழியே தன் வீட்டு பின்புறம் நகர்ந்து பின்பக்ககதவு வழியே உள்ளே வந்தார். ஜன்னல் வழியே அவள் வீட்டைப் பார்த்தார்.

இப்போது வந்தால் வழிக்கு வரும் பெண் என்று அர்த்தம். சட்டென்று தொடலாம். வரவில்லை. தாமதமாயிற்று எனில் விட்டுப் பிடிக்கவேண்டும். இன்னும் செலவழிக்க வேண்டும். உள்ளே போனார்.

சித்தினிப் பெண்களுக்கு வாசனையில் விருப்பம் உண்டு. ஊதுவத்தி ஏற்றினார். இனிப்பில் விருப்பமுண்டு. பனங்கற்கண்டு திறந்து பார்த்தார்.

வரணும், வெங்கடலட்சுமி வரணும்.

இருவது வயசு சரவணனின் அம்மாவை மணந்து கொள்ளும்போது, எதுவுமே தெரியவில்லை. ''மாப்பிள்ளை விரைப்பா இருக்கணும்டா. அடிக்கடி பொண்டாட்டிய ஓரக்கண்ணால பார்க்காதே.'' அறிவுரை சொன்னார்கள். விரைப்பால் நேர்குத்தாய் பார்த்துக் கொண்டிருந்தார். சொல்லிக் கொடுத்தவர்களே அதை அந்த நேர்குத்துப் பார்வையைக் கேலி செய்தார்கள்.

''ஒன்னு சொல்லிட்டா போதும் முருகுகிட்ட. உடனே புடிச்சுக்குவான். பார் எப்படி விரைப்பா நிக்கறதை.



பாம்பு கொத்தினாலும் இப்ப அதே விரைப்பா பார்த்துக்கிட்டு சுத்துவானே கண்டி மேல பார்க்கமாட்டான்.''

சிரித்தார்கள்.

''என்ன சாந்தி முகூர்த்தமா? பெண்டு நிமித்திரு. வுடாதே. ஐயோ பாவம்ன்னு வுட்டா பொம்பளைங்க அதே சாக்கா வச்சுக்கிட்டு உன்னால முடியலைன்னு சொல்லிடுவாளுங்க. புரியுதா? வுடாதே.''

அங்கேயும் தவறு. பாளையை உடைத்து சோறு தின்கிற மாதிரி ஆயிற்று. இந்த நாற்பத்திரண்டு வயசில் தான் 'மாசறு பொன்னே வலம்புரி முத்தே, காசறு விரையே, கனியே, தேனே...' புரிகிறது.

''அட வெங்கடலட்சுமி வந்து நிக்கிறது. இருவத்தி ஏழு வயசு. நாண் கட்டி இழுத்த வில் மாதிரி இருக்கிறது. கடவுளே! இது கிடைத்தால் எத்தனை சுகம். மயங்கி மயங்கி கரைகிற சுகம். பொம்பளையின் அழகு, திமிர், அசட்டுத்தனம் எல்லாம் சுகமில்லையா. ஆளத் தெரிந்த வயசில் கிடைக்க வேண்டாமா? உழுவதற்கு வலிவு இருக்கும்போது நிலம் வேண்டாமா?''

சரவணனின் அம்மாவைத் தொட்டால், கருமம் என்னது எப்பப் பார்த்தாலும் மிருகம் மாதிரி என்கிறாள். மனசு கண்டிப் போகிறது. மிருகம்தாண்டி என்று வலிவு காட்டும்போது வெறும் இறைச்சி தின்பதுபோல் இருக்கிறது.

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே, எத்தனை கிறக்கம். வெறுமே கைகோர்த்து கொஞ்சி கொஞ்சி...''

வா வெங்கடலட்சுமி. வா என்னிடம் வா. எனக்கும் பெரிய தோள்கள். அகல உள்ளங்கை. உன்னைத் தாங்குவேன். வா.

ஜன்னல் வழியே மொத்தமாய் உடலைக் கூர்ந்து கவனித்து மனசு முழுவதும் அவளிடம் செலுத்தி....

''எதிலும் இரட்டையாய் இருக்கிற அசுவினி தேவதைகளுக்கு நமஸ்காரம். என்னை உயிர்ப்பிக்கும் வாயு தேவனுக்கு நமஸ்காரம் இந்திரனே! தேவர்களின் தலைவனே 'இவளை எனக்குக் கொடு என் உடலை வளமாக்கு. இவளைத் தா. இவளைத் தா. இவளைத்தா!''

வெங்கட லட்சுமி கொல்லைக் கதவுக்கு அருகே வந்தாள்.

''சரவணன் அப்பா, எங்கே இருக்கிங்க?'' கதவு தட்டினாள்.

முருக வைத்தியர் மெல்ல கூடம் தாண்டி வாசற்கதவு தாழிட்டார். யாரும் வருகிறார்களா என்று பார்த்தார்.

''சரவணன் அப்பா'' மறுபடி குரல் கொடுத்தாள்.

சட்டென்று கொலைக் கதவு திறந்தார்.

''இங்கே தான் நின்னுட்டிருந்தீர்களா?''

''கொலுசு புடிச்சுதா?''

''ரொம்ப நல்லாருக்கு. அப்படியே அளவெடுத்த மாதிரி பதியுது. இதோ பாருங்களேன்.''

''தங்கத்துல போடணும்.''

''ஐய...''

''இத்தினி அழகுக்கு சொல்லி சொல்லி தங்கத்துல இழைக்கணும்''

''ஐய—''

''உன்னைய இன்னும் கட்டிக் கொடுக்காத இருக்காரே உங்கப்பா''

''எவன் கிடைப்பான்?''

''எவன் கிடைச்சு என்ன பிரயோஜனம். உள்ளங்கைல தாங்கறவன் வரவேணாமா. வெங்கடலட்சுமி வெங்கட லட்சுமின்னு கொஞ்ச வேணாமா''



''நீதான் கொஞ்சுறியே.''

''எனக்கு பிரியம். கொஞ்சறேன்.''

''எனக்கும் பிரியம்.''

''நெசம் தானா?''

''சட்டென்று கொலுசு கொடுத்திட்டியே.''

''எனக்குப் போறலை.''

''என்ன?''

''கொலுசு மட்டும் தந்தா போதலை. நிறைய தாணும். அள்ளி அள்ளி தாணும்.''

''நெசம்மாவா?''

''பைத்தியமாயிருச்சு புத்தி.''

''ஊர்ல திட்டுவாங்க.''

''நீ உம்னு சொல்லு. எல்லார் வாயையும் அடைச்சுடறேன்.''

''அடையாது.''

''வுட்டுட்டு எங்கேனா போயிருவோம்.''

''இங்க வீடு இருக்கே.''

''கைல தொழில் இருக்கு. வீடு வாங்கறதா கஷ்டம்.'',

''எங்க போறது?''

''எங்கேனா நெல்லூருக்கு. ராஜமுந்திரிக்கு போயிரலாம்.''

''வுட்டுட்டுப் போயிட்டியினாக்கா செத்துருவேன்.''

''உன்னையா? நானா? வுடறதா? இதோ இப்ப புடிச்சது இனி வுடவேமாட்டேன்.''

இரண்டடி நெருங்கி அவள் இடுப்பை இறுக்கிக் கொண்டார்.

அவள் நிமிரவில்லை.

''எனக்கு என்னவோ போலிருக்கு''

''பயமாயிருந்தா வுட்டடறேன்.

''வேணாம்.''

''என்னா?''

''வுடவேணாம். நாப்பது வயசா.''

''நாப்பத்திரண்டு.''

''இரும்பு மாதிரி இருக்கே உன் கை.''

இன்னும் இறுக்கினார்.

''எங்க இரண்டு அக்காளையும் அவங்க புருஷன் ஓகோன்னு வெச்சுருக்காங்க''

''அதை விட ஓகோன்னு இருப்ப.''

''நெசம்மாவே தங்கத்துல இழைச்சுப் போடுவியா?''

''என்னா வேணும் உனக்கு?''

''வளையல், தோடு, சங்கிலி, தாலிக்கொடி''

''செய்துரலாம்.''

''இப்ப இருக்கற பிரியம் எப்பவும் இருக்கணும்.''

''போறும் போறும்ற வரைக்கும் தரேன்.''

''எனக்கு போறாது. எப்பவும் வேணும்.''

''இதுவா காதல்'', பரமி அலுப்பாய் மறுபடி கேட்டாள்.

''ஒரு வகையில் இதுவும்'' பிரம்மராயர் பதில் சொன்னார்.

''உடம்பு அழியுமே.''

''அழியும் வரை காதல் இருக்குமே.''

''உடல் தளருமே.''



''தளர்ந்தால் காதல் போகும் என்று யார் சொன்னார்கள். பருவம் வந்ததிலிருந்து ஐம்பது வயது வரை மன்னர் ராசராசரை நேசிக்கவில்லையா நீ? அவருக்கு அணுக்கியாய் இருக்கவில்லையா நீ? உடல் தளர உன்னை ராசராசர் விட்டாரா? இல்லை. நீ மறந்தனையா? பட்ட மகிஷியோ மனைவியோ அல்லவே நீ. தேவரடியார் தானே.''

''அந்த வாழ்வு முறை வேறு. இங்கே இவர்கள் திருமணம் பற்றி பேசுகிறார்கள் பிரம்மராயரே.''

''அவர்கள் பேசுவதைக் கவனிப்போம். இருவரும் அமைதியாய் இருங்கள்.'' மன்னர் நிறுத்தினார்.

''நாம வெளியூர் போய்ட்டா உன் பொண்டாட்டி கதி...?''

''தேஞ்சு அறுந்த செருப்ப கையிலயா எடுத்துக்கிட்டு போ முடியும். அங்கேயே விட்டுற வேண்டியதுதான்.''

''நான் தேஞ்சு அறுந்த செருப்பாய்ட்டா.''

''நான்தான் தலைல வச்சுகுவேன்னு சொல்றனே எப்படி தேயும், எப்படி அறும்?''

''பைத்தியமாதான் ஆயிட்டே?''

''ஆமாம்.''

''அதெப்படி சட்டுன்னு.''

''எனக்கு நல்ல பசி.''

''எனக்கும், என்னைப் புரிஞ்சுக்காதவன் கட்டிக்கிட்டு கொன்னுடப் போறானேன்னு பயம் வேற இருந்தது.''

''இப்ப.''

''யாரும் வருவாங்களா.''

''வரத்துக்கு இல்லை. வந்தா கொல்லையோட போய்டலாம்.''

ஆட்டுரல் கொல்லைப்புறம் இருந்தது. மூட்டை கனத்து கழுத்தை அழுத்தியது. சரவணன் தடங் தடங் கென்று வீதியில் மூட்டையோடு வந்தான்.

''வெங்கடலட்சுமி எங்கே போய்ட்டே?'' அவள் அம்மா கொல்லைப்புறம் வந்து கூவினாள். ''புறா பார்க்கப் போய்ட்டாளா?''

அவள் வீட்டுக் கொல்லையிலிருந்து அடுத்த வீட்டுக் கொல்லைப்புறம் மெல்ல நடந்து போனாள்.

அவர்கள் அன்பில் திணறிக் கொண்டிருந்தார்கள். சாரையும் நாகமுமாய் பின்னிக் கொண்டிருந்தார்கள். உடம்பு துாசாயிற்று. கட்டாந்தரையில் முதுகு தேய்ந்தது.

''என்னடா சரவணா, சட்டை கிழிஞ்சுருக்கு?''

''தாம்பரம் ஜங்ஷன்ல சண்டை சார்.'' எதிர்வீட்டு எல்.ஐ.சி. பெரியவருக்கு பதில் சொன்னான். ''பச்ச நெல்லி இடிச்சு ஜூஸ் சாப்படறீங்களா? ஒரு மூட்டை புடிச்சேன்.''

''பத்து கொடுடா போதும். உங்கப்பன் எங்க?''

''தெரியல? அப்படியே கிழிசல்ல கைவிட்டு எடுத்துக்கங்க?''

''பதினைஞ்சு வந்துருக்கே.''

''பரவாயில்லை. புரோக்கரு கோவிந்தரு ஆளு வச்சு அடிக்க வந்தாரு. போட்டேன் தபதபன்னு...''

''ஐயோ எப்ப...''

''இப்ப கொஞ்ச நேரம் முந்தி.''

''அவன் ஆத்திரக்கார ஆளு...''



''என்கிட்ட நடக்குமா?''

''அப்பறம்.''

''அங்கிளியே சமாதானமாயிடுச்சு. அவரு புடிச்ச மூட்டைதான்.''

''சுமை அதிகம். போய் இறக்கிட்டு வா.''

கிழவி கதவு திறந்தாள். அவன் மூட்டையோடு திரும்பினான்.

இருட்டில் பாம்பு மூச்சு மாதிரி கேட்டது. உலகமே மறந்து அழுந்தி கிடந்தார்கள்.

கிழவி பயந்தாள். சட்டென்று பெண் கால்தெரிந்தது. கொலுசு கண்ணில் பட்டது. ஐயோ, சரவணன் அம்மா கொலுசு. தப்பா நுழைஞ்சுட்டமா. இதென்ன பகல்ல... தப்பா... ரெகச்சாரம்...

அவன் மூட்டையோடு புறா சந்து கடந்து பின்புறம் போனான். வியர்வையில் கண்கள் மறைந்தன.

''யாரது?'' கிழவி பார்த்து அதட்டினாள்.

கிழவி பயந்து கதவு மீது கால் வைக்க விரியத் திறந்தது.

வெங்கடலட்சுமி தலை பிரிய எழுந்து உட்கார்ந்தாள். முருகர் புரண்டார்.

''ஐயோ, என்னாடி இது?'' கிழவி கத்தினாள்.

சரவணன் ஓடிப்போய் பார்த்தான். அப்பா இரும்பு உலக்கை மாதிரி வேட்டியை வாரிக்கொண்டு எழுந்து நிற்பது தெரிந்தது. வெங்கடலட்சுமி குலைந்து கிடந்தாள்.

''ஐயோ ஐயோ ஐயோ'' கிழவி கொல்லைப்புறம் அலைந்து நாலா பக்கமும் கத்தினாள். பகல் தூக்கம் தூங்கிக் கொண்டிருந்த தெரு விழித்துக் கொண்டது.

பத்து நிமிடத்தில் விவரம் தெரிந்து கொண்டது. ஜங்ஷனுக்கு தகவல் தர ஒரு பையன் ஓடினான்.

நெல்லி மூட்டை ஆட்டு உரலில் அரைபடக் காத்திருந்தது. அதன் அருகே சிதறிக் கிடந்தது.

''என்னப்பா இது?''

''சரவணா.''

''தொடாதப்பா. என்ன இது?''

''சரவணா நான் சொல்றது கேளு.''

''இது தப்புப்பா.''

''நான் உன் அப்பன், என்னைக் காப்பாத்த வேண்டியது உன் கடமை.

''கந்தன் மாறவேள் தன் தப்பி காரிக்குளிப்பாகையை கொள்ளிப்பாகை போரில் காப்பாற்றியிருக்கிறான்.'' பிரம்மதேவராயர் பேசினார்.

''பதினாறு வீரர்கள் சுற்றி காரிக்குளிப்பாகையை தாக்கினார்கள். மாமன்னர் முன்னேறி சென்ற பிறகு பின்னே தாக்குதல் நடந்தது. மன்னரை பின்னிருந்து தன் இடம்விட்டு தாக்குதலை எதிரி தனியே நடத்த வசமாய் சிக்கிக் கொண்டான்.'' வேறு சேனாபதி விவரம் சொன்னார்.

''மாமன்னர் அனுப்பினார். காரிக்குளிப்பாகைக்கு போய் உதவி செய் உடனே என்று, கந்தன் மாறவேளை துரத்தினார். தம்பி என்பதற்காக அல்ல. கந்தன் மாறவேள் மாமன்னரின் கட்டளை என்று ஓடி, தம்பியைக் காப்பாற்றினான், அறுவர் சிரமறுத்தான். நால்வரைப் படுகாயப்படுத்தினான், மீதமுள்ளோர் தப்பியோடினார்கள்.''

இராசராசர் சிரித்தார்.

''இப்போது தம்பி அண்ணனை காப்பாற்றக்கூடும்.''



''காப்பாற்றக் கூடாத இடம் இது.'' பரமி செருகினாள்.

''உனக்கென்ன ஆத்திரம் பரமி?''

''நாற்பது வயது ஆள், இருபது வயதுப் பெண். தகாத காதல். அல்ல காதல் காமம்.''

''காமம் பிழையோ பரமி?''

''அவனுக்குப் பத்தினிப் பெண்ணாய் மனைவி இருக்கிறாளே...''

''இருதாரம் பிழையோ பரமி?''

''ஆமெனில் நமது எல்லார் வாழ்வும் பிழைதான் மாமன்னா.'' பிரம்மராயர் சிரித்தார்.

''பரமி துறவியாய் இறந்தவள். அதனால் இப்படிப் பேசுகிறாளோ என்னவோ?''

''துறவியாய் பிறந்தவளா இல்லையே'' மாமன்னர் சொல்ல, மறுபடி சிரித்தார்கள்.

''முருங்கை மரம் அமர வசதியானது மன்னா.''

''அமர்வோம்.''

''சரவணா என்னை அப்பாவா பார்க்காதே.''

''பிறகு.''

''என்னை உன் சிநேகிதனா பாரு. கூடப் பொறந்தவனா பாரு''

''அடேயப்பா, கந்தன் மாறவேள் புரிந்து கொண்டு விட்டான்.''

''காரிக்குளிப்பாகைக்கு புரியுமா?''

''என்ன உளறிக் கொட்டறீங்க.''

"உனக்கு புரியும்டா. எனக்கு வேணும்'.

"எது வேணும்?"

"அந்தப் பொண்ணு வேணும்."

"எங்கம்மா?"

"அவ சரியில்லையடா"

"கொன்னுருவேன். ஒரே வெட்டு. தலை எகிறிடும்"

"நான் அப்படி சொல்லலை சரவணா. ஏய் உள்ள போ." வெங்கடலட்சுமியைத் துரத்தினார்.

"டேய்! வெளியே போய்டு" அவளை வெளியே துரத்த சரவணன் முற்பட்டான்.

"வாணாம். அவளை அடிச்சு கொன்னுருவாங்க."

"சாவட்டும் தேவிடியா."

"சரவணா உங்கம்மா மேல தப்பு சொல்லலை. அபாண்டம் சொல்லலை. அவளுக்குப் போறாது. வேற வகை. எனக்கு ஈடு தர முடியலை. நோஞ்சல். வேற புத்தி. எனக்கு அப்படியில்லை. சூரணம் சாப்பிட்டு சாப்பிட்டு உடம்பு பாரு."

"இதுக்கா சூரணம் சாப்பிட்டே."

"உங்க அம்மா இணையா இருப்பாளேன்னு சாப்பிட்டேன். முடியாதுன்றா."

"அசிங்கம்மா இருக்குப்பா."

"அப்படின்னா நீ புறந்ததும் அசிங்கம்டா."

"இது ஏன் உனக்கு?"

"வேணும். இல்லாட்டி செத்துருவேன்."

"முட்டாள்தனம்."



"முடியாது, என்னையும் அவளையும் ஊர்கிட்டேந்து காப்பாத்தி எங்கியாவது அனுப்பிரு."

"எங்கம்மா."

"நீ பார்த்துக்கடா"

"நான் உதவாக்கரை."

"இல்லைடா, உன்னால முடியும்."

"உனக்கோசரம் பேசற."

"ஆமா எனக்கோசரம் செய். நான் நல்லா இருக்கணும்னு செய். எனக்கு அவ வேணும். வெங்கட லட்சுமி வேணும். அவ மேல தூசுப்பட்டா எனக்குப் பொறுக்காது. அவ மேல எவன் கைவச்சாலும் வெட்டிருவேன்."

"யாரை?"

"முதல்ல அவளை வெட்டுவேன். அப்புறம் என்னை வெட்டிக்குவேன். மண்டி போட்டி சாமி படத்து எதிர்க்க ஒரே போடா கழுத்துல அரிவாளால போட்டுக்குவேன். கொலுசு போட்டுக்கட்டா, உங்கப்பன் செத்து போவட்டுமா?"

* * *

"காரிக்குளிப்பாகை, காரிக் குளிப்பாகை..." முருங்கை மரத்து பக்கமிருந்து யாரோ கூப்பிட்டார்கள்.

சரவணன் சட்டென்று திரும்பிப்பார்த்தான். முருங்கையின் எல்லா இலைகளும் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு இலையும் ஒவ்வொரு முகமாய்த் தெரிந்தது. சிரிப்பு கேட்டது.

யாரோ மண்டியிட்டுக் குடுமியை மூங்கில் நுனியில் இழுத்துக்கட்டி, அந்த மூங்கில் வளைய அமர்ந்து வீச்சரிவாளை எடுத்து உயரத்தூக்கி மாமன்னர் வாழ்க என்று

கூவுகிறார்கள். வீச்சரிவாள் மெல்ல அதே சமயம் கனத்துடன் வலது வீச்சுடன் தலைக்கு இறங்கி, கழுத்தில் பதிந்து பாதி, முக்கால் முக்காலே மூணு வீசம் அறுபட்டு, மிச்சம் மூங்கில் கம்பால் பிடுங்கப்பட்டு, ரத்தம்... ரத்தம் சரவணன் ரத்தமேறியது.

''முட்டாள் அப்பா நீ.''

''முட்டாள்தான். எனக்கு செய்வியா மாட்டியா?''

''டேய் முருகரு! அடப்பாவி. சண்டாளா டேய், கொலைகார பாவி, என் குடிய கெடுத்த பாவி'' யாரோ வாசல் கதவு இடித்தார்கள்.

அம்மா, அலறினாள். அவளை யாரோ இறுகப் பிடித்துக் கொண்டார்கள். 'நீ போவாத அங்கே' என்று அணைத்துக் கொண்டார்கள்.

''நாசம் பண்ணிட்டானே! நாப்பது வயசுகாரன் என் பொண்ணை கெடுத்துட்டானே. புறா அடிக்கற மாதிரி என் பொண்ணை அடிச்சுட்டானே.''

கிழவி குரல் கேட்டது.

புறா சந்தில் யாரோ ஓடி வந்தார்கள்,

''வெங்கட லட்சுமி, சாவறதுக்கு தயாரா இருடி.'' கத்தினார்கள்.

முருக வைத்தியர் வீச்சரிவாள் உயரத் தூக்கினார். அவருக்கும் கூட்டத்துக்கும் இடையே சரவணன் நின்றான்.

''தேவிடியா மவனே. உன்னை ஜங்ஷன்ல அடிச்சப்போ நியாயம் பேசினியேடா. அப்பனை இங்க கூட்டிக் கொடுத்துட்டு, அங்க நெல்லிக்கா திருட வந்துட்டியா. நாசகார பசங்களா, எங்க அவ? எங்க அந்த சிறுக்கி? டேய் ஒத்துடா விருந்தாளிக்குப் புறந்தவனே''

சரவணன் தள்ளப்பட்டான்.

பேச்சிலும் தள்ளலிலும் கோபப்பட்டான்.



''டேய் போடா'' ஒரே வீச்சில் புரோக்கரை வெளியே தள்ளினான்.

''தள்றே, என்னையத் தள்றே. டோய் கோவாலு, லட்சுமணா, அறிவழகா வாங்கடா. இங்க என் பொண்ணை அசிங்கம்படுத்திட்டு புடிச்சு தள்றாண்டா.''

தபதபவென்று கூட்டம் சேர்ந்தது.

''இரு இரு பெண்ணு எங்க?''

''எங்க வீட்டுல இருக்கு.''

''முதல்ல அதை அவ வூட்டுக்கு அனுப்பு.''

''மாட்டேன். அது இங்கேதான் இருக்கும்.''

''உதைபடுவ.''

''எவன், கிட்ட வந்தாலும் எமலோகம் போய்டுவீங்க. இது சத்தியம்.''

''பெரிய லவடா சத்தியம். டேய் கொம்பு எடுத்தாடா.''

பளிச்சென்று எட்டி யாரோ முருங்கைக் கிளையை முறித்தார்கள்.

மாமன்னர் மேல்கிளைக்கு நகர்ந்து கொண்டார். மரம் லேசாய் ஆடியது.

சடாரென்று வைத்தியர் முன்னே வீசினார்கள்.

நிலைப்படியில் கிளைபட்டு உடைந்து சரவணன்மீது அடித்தது.

சரவணன் உள்ளே போய் சிலம்புக் கழியை கூடத்திலிருந்து எடுத்தான். வெங்கடலட்சுமி ஜாக்கெட்டுக்குட் பட்டன் போட்டுக் கொண்டிருந்தாள்.

வெளியே வந்தான்.

''அந்தப் பொண்ணை நான் அனுப்பறேன். நீங்க போயிருங்க.''

''ஏன்? இப்ப நீ முடிக்கணுமா? வுடறா.''

''தேவையில்லாத பேசின உதைபடுவே.''

''அப்பனும் புள்ளையும் கொலைக்கு அஞ்சாத பாவிங்க. பச்சப் புள்ளைய சூரணம் கொடுத்து மயக் கிட்டானுங்களே.''

இன்னும் பத்து பேர் சேர்ந்தார்கள்.

''ஏன்யா பேசிக்கிட்டு, இழுத்துப் போட்டு மிதிங்கடா.''

மறுபடி முருங்க கிளை ஒடிக்கப்பட்டு சரவணன் மீது விழுந்தது.

வலது தோளில் பட்டு தோல் வழண்டு எரிச்சல் தந்தது.

சிலம்பு கட்டையை இறுகப் பிடித்து அடித்தவனை சரவணன் வெறியோடு பார்த்தான்.

''தாரிக்குளிப்பாகை. நீ இடங்கை வீரன்: கம்பு இடங்கைக்கு மாற்றிக் கொள்.'' சிலம்புக் கம்பு இடது வாட்டமாய் நின்றது. அவர்கள் வலது கையில் ஆயுதங் கள் தாங்கினார்கள்.

ஒரு அடி முன் வைத்து அவர்களை இடது பக்கமாய் கம்பால் தள்ளி பிரித்தான். அவனிடம் ஜங்ஷனில் அடி பட்டவர்கள் பின்வாங்க, அடிபடாதவர்கள் கோபப் பட்டார்கள்.

'தேவிடியா மவனே' ஒருவன் எகிற, நச்சென்ற கழி நுனியால் வாய் ஓரம் குத்தப்பட்டான். ரத்தம் பொங் கியது, முதலாவது கல் பொறுக்கி அவன் வீச சரவணன் வலது கையால் தடுக்கப்பட்டது.

''வெட்டு அலனை. வெட்டிக் கொல்லு அவனை.'' வெங்கடலட்சுமி அம்மா அரிவாள் கடப்பாரை, உலக்கை இரும்பு கம்பி தூக்கிப் போட்டாள்.

பொறுக்கிக் கொண்டார்கள்.



வியூகம் வளைத்தார்கள், தாக்கினார்கள்.

சரவணன் மண்டி போட்டு தட்டி தொட்டான்.

''மாமன்னர் ராசராசர் வாழ்க வாழ்க.'' குரல்கள் கேட்டன.

''திருமகள் போல பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக் கொள, காந்தளூர் சாலை கலமறுத் தருளி வெங்கொடு நாடும் கெங்க பாடியும்...''

யாரோ கூவினார்கள். யார் அது? என்ன இது சப்தம்? சரவணன் குழம்பினான். கடப்பாரை தூக்கி அடித்தவனை கோலால் நிறுத்தி, கோலால் புரட்டி, ஓங்கி அடித்தான். அடிபட்டவன் இடுப்பு முறிந்தது.

அரிவாள் வீசி ஒருவன் வர, இடதுபுறம் மற்றவன் கம்பி வீசினான்.

சரவணன் கோல் துடித்து நாலாதிசையும் தாக்கியது. முன்னேறினான். சூழ்ந்து கொண்டார்கள். அடித்தான். தடுத்தான், முட்டி தாக்கினான். விரட்டி விரட்டி சுவரோடு சாய்த்தான்.

முருக வைத்தியர் அரிவாள் இடுக்கிக் கொண்டு பீரோ திறந்தார். பெரிய வேட்டியைப் பிரித்துப் போட்டார். மனைவியின் நகைகளை, வெள்ளி பாத்திரங்களை, எப்போதோ வாங்கிய பதக்கத்தை வாரிப் போட்டுக் கொண்டார். சின்ன பாட்டிலில் சூரணம் இருந்தது. எடுத்துத் தனி துணியில் சுருட்டி வைத்துக் கொண்டார். வெளியே பலரின் அலறல் கேட்டது.

''எழுந்திரு''

வாசல் கதவு திறந்தார்.

அவனை கைப்பிடியாய் பிடித்துக் கொண்டு மூட்டையைத் தோளில் மாட்டி தெருவில் இறங்கினார்.

''முருக வைத்தியரே இது தப்பு'' எல். ஐ. சி. ஆள் கூவினார்.

''மன்னிச்சுடு தலைவா.'' கை கூப்பினார். அவர் கைகூப்பிய திக்கில் மனைவி இருந்தாள். வெங்கடலட்சுமியோட நடக்க தெரு கூச்சலிட்டது.

தெரு கூச்சல் கேட்டு, சிலர் அங்கே ஓடினார்கள்.

சரவணன் வாசல் வழியே அப்பாவுக்கு பின்னே ஓடினான். கோடி வீட்டில் ஆட்டோவில் யாரோ பெண்கள் இறங்கினார்கள்.

அப்பன் பெண்ணோடு ஓட, பிள்ளை அப்பனைத் தொடர்ந்து காபந்து செய்தது.

''யப்பா.''

''என்னடா?''

''ஆட்டோல ஏறு.''

''ஏத்த மாட்டானே.''

''நீ ஏறு. டேய் வண்டி வுடறா, வந்து தரேன்.''

''யாரு? என் வண்டி மடக்கறே,''

பிள்ளை ஆட்டோக்காரனை குப்புறத் தள்ளியது. வண்டி இழுத்து ஸ்டார்ட் செய்தது. எதிரே கூட்டம் வர நேராய் பிளந்து ஓட்டியது. தெரு முனையில் திரும்பி அடுத்த தெருவுக்கு அடுத்த தெரு பிடித்தது. ஜங்ஷன் நோக்கி ஓடியது.

சைக்கிளில் இரண்டு பேர் துரத்தினார்கள். ஆட்டோ பிரேக் போடப்பட்டது.



''என்னடா''

அப்பனிடமிருந்து வீச்சரிவாள் வாங்கி எதிரே வந்த சைக்கிளின் டயரை வெட்டினான். சைக்கிளை உயரத் தூக்கி அவர்கள் மீது வீசினான்.

மறுபடி நிதானமாய் வண்டியில் அமர்ந்து ஓட்டினான். ஜங்ஷன் மேலேறி திரும்பியபோது இன்னும் நாலு பேர் சைக்கிளில் வந்து மடக்கினார்கள். தடேர் தடேர் என்று கட்டைகள் ஆட்டோவில் விழுந்தன. சைக்கிள் ஓட்டியபடியே வெங்கடலட்சுமியின் முடியை கொத்தாய் யாரோ பிடிக்க, முருகர் அவன் கையை சட்டென்று இழுத்து அவன் முகத்தை ஆட்டோவில் மோதவிட்டார்.

வண்டி மவுண்ட் ரோட் நோக்கிப் போயிற்று. குரோம் பேட்டையில் பெட்ரோல் போட்டுக் கொண்டார்கள்.

''என்ன அரிவா கம்பு வெச்சுருக்கீங்க?''

''பெட்ரோல் போடறா பேமானி.''

''போடலைன்னா.''

''வெட்டிருவேன்.''

முழுவதும் போடப்பட்டது.

''எங்கப்பா போறது?''

''ஆந்திரா பார்டர் போயிடு.''

பல்லாவரம், கிண்டி, சைதாப்பேட்டை. மவுண்ட் ரோடு, சென்ட்ரல், வால்டாக்ஸ்ரோடு, பேஸின் பிரிட்ஜ், மூலக்கடை, புழல் ஏரி, இடது திரும்பி நகரி நாகலாபுரம், பெட்ரோல் அடைத்து அடைத்து வண்டி நின்றது.

''சரவணா, எங்கப்பனே'' தகப்பன் பிள்ளையைத் தழுவிக் கொண்டார்.

''வந்துருடா எங்களோட.''

''இல்லப்பா அது தப்பு.''

'ஓ'வென்ற நெடுஞ்சாலை. நெடுஞ்சாலை முழுவதும் புளிய மரம்.

அவர்கள் அனைவரும் மரத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்தார்கள்.

''எம்மேல கோவமாடா?''

''இல்லை.''

''சரவணா எனக்கு நீ புள்ளை இல்லடா. தெய்வம். ஏய் கீழ இறங்கு.''

வெங்கடலட்சுமி கீழே இறங்கினாள்.

அவளுக்குச் சரவணனைக் கட்டிக் கொண்டு முத்தமிட வேண்டும் போல் இருந்தது. இதுவும் வந்தா நல்லா ருக்கும்.

''அப்பா, அம்மாவ நினைச்சா கஷ்டமா இருக்குது.''

''நீ தப்புடா. அம்மா சரியாய்டும். அதுக்கு என்னை புடிக்கலை. அது வேற மாதிரி.''

''எங்கே போற.''

''எங்கேன்னா ஆந்திரால.''

''சாப்பாட்டுக்கு என்ன செய்வ?''

''கொஞ்சம் நகை, பாத்திரம் இருக்கு. கைல தொழில் இருக்கு.''

''அம்மா நகையா?''

''வேற யாருது நம்மகிட்ட.''

''அம்மா என்ன செய்யும்.''

''கழுத்துல, காதுல அதுக்கு இருக்குடா. டேய் திரும்பப் போக உனக்கு துட்டு வேணாம்?''



''சரக்கு போட்ட காசு மிச்சம் இருக்கு.''

''உடனே ஊட்டுக்குப் போவாதே.''

''சரி.''

''நான் வரட்டா.''

''சரி.''

''சரவணா, நீ தெய்வம்.''

''ஏய் இங்க வா, இவன் கால்ல வுழு.''

வெங்கடலட்சுமி பிரியமாய் அவன் காலில் விழுந்தான். 'இது வராதா வந்தா எவ்வளவோ நல்லா இருக்கும்' என்று மறுபடி நினைத்தாள்.

''வேணாம். வேணாம்'' பிள்ளை அவளைத் தடுக்க அப்பறும் குனிந்து பிள்ளைக் காலைத் தொட்டான்.

''ஐயோ என்னப்பா இது?''

''நீ எனக்கு தெய்வம்டா.''

பஸ் வருது. பஸ் வருது. மூவரும் கை காட்டினார்கள்.

''நீயும் வந்துட றியாடா. அப்பறம் போலாம்.''

''நா வரலை, நீ போ.''

''ரைட் ரைட். எங்க போணம்?''

''இந்தப் பஸ் எங்க போவுது?''

''நெல்லூர்.''

''இரண்டு நெல்லூர் கொடுங்க.''

புழுதியும் புகையும் அவன் முகத்தில் அடித்தன. சரவணன் மெல்ல சென்னைப் பட்டணம் நோக்கி நடந்தான்.

# 6

''இனி என்ன ஆகும். மாமன்னா?''

''யாருக்குத் தெரியும்.''

''சோதித்துப் பார்க்கலாம்.''

''எவ்விதம் பிரம்மராயரே.''

''காரிக்குளிப்பாகை இந்த உடலைத் துறக்கும் நேரம் வந்துவிட்டது'' என்று தோன்றுகிறது. சோதித்துப் பார்க்கலாம்.

''எப்படி சோதிப்பீர்.''

''நாம் தோன்றுவோம். அருகே போய் தூண்டுவோம். அவனால் நம்மைக் காணமுடிந்தது எனில் அவன் மரணம் அவனுக்கு சமீபம்.''

''யார் போவது.''

''நீங்கள் போவதே நல்லது மாமன்னா.''

''செய்வோம்.''

அவன் சாலையைவிட்டு இறங்கி மாந்தோப்பு வழியே மெல்ல நடந்தான்.

''காரிக்குளிப்பாகை, காரிக்குளிப்பாகை, காரிக்குளிப்பாகை'' இப்போது வேறு பல குரல்கள் கேட்டன.

அவன் பயந்தான். நெஞ்சு அடைத்துக் கொண்டது. கால்களில் வலுவு குறைவது உணர்ந்தான்.



''காரிக்குளிப்பாகை எங்களைத் தெரியவில்லையா?'' மறுபடி குரல் கேட்டது.

மாமன்னர் அவனெதிரே கனிவோடு நிற்பது அவன் கண்களுக்குத் தெரியவில்லை.

''மூச்சை சீராக்கு வீரனே...'' பிரம்மராயர் கட்டளையிட்டார். மூச்சு முழுவதும் நுரையீரலில் இழுத்து கும்பகம் செய். நாளிகையாய் பிரித்துவிடு. வாயு உயிர் தலத்தைத் தாக்கட்டும்.

சரவணனுக்கு மூச்சு நிறைந்தது. உள்ளே போன காற்று வெளியே வர முடியாமல் தவித்தது. பயத்தில் தொண்டை இறுகிற்று. தொண்டை இறுக மூச்சுக்குள் அடைத்துக் கொண்டது. வாயு திரும்பி இடுப்புக்குக் கீழே எங்கென்று முட்டியது. மூலாதார முக்கோணம் நசுக்கப்பட்டது. முதுகுத் தண்டு வழியே மின்னல் ஓடியது. தலை கனத்தது. சுழன்றது. கண்கள் இருண்டன. நாக்கு உள்ளிழுக்கப்பட்டது. மார்பு அகலமாகியது. வயிறு குழைந்தது. கைகளிலும், கால்களிலும் பரபரத்த ரத்த ஓட்டம் நிதானமாயிற்று. வலுவு குறைந்தது. நெற்றிப் பொட்டில் தெறிக்கிற வலி ஏற்பட்டது. பார்வை மூக்கின் மையத்தில் குவிந்தது. விழிகள் மேலே சொருகின. உள்ளே வர்ணங்கள் தோன்றின. இருட்டாயிற்று. இருட்டில் வெள்ளையாய் புகை உருவமாய் காகிதப்பட்டையாய் மாமன்னர் ராசராசர் இடுப்பில் கை வைத்து நின்றிருந்தார். பின்னே கிருஷ்ணன் ராமனாகிய பிரம்மராயர், பஞ்சவன் மாதேவியார், இலாடமாதேவியார், பொய்கை நாடு கிழவன் முதல் மந்திரி மும்முடிச் சோழன் போசன், விழுப்பரையன், பராந்தகப் பல்லவரையன், வடுகன், இடையன் நல்லாரன்.

''மன்னர்... மன்னர்.... எங்கள் ராசராசத்தேவர்...'' அவன் கைகூப்பி அழுதான். அங்கே நின்றிருந்த அத்தனை

பேரும் ஒருமித்த குரலில் ராசராசனின் மெய்க்கீர்த்தியைச் சொல்லத் துவங்கினார்கள்.

''திருமகள் போல பெருநிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மெனக் கெளக்
காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடும் கங்கபாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டுத் தொழிற் சிங்களர் ஈழமண்டலமும்
இரட்டபாடி ஏழரை இலக்கமும்
முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில் வளர் ஊழியுள் எல்லா ஆண்டும்
தொழுக விளங்கும் ஆண்டே
செழியரைத் தேசு கொள் ஸ்ரீராசராச
தேவர் வாழ்க வாழ்க...''

அவனுக்கு அத்தனை வெற்றியும் புரிந்தது. அத்தனை பேர்களும் நினைவுக்கு வந்தன. வாழ்ந்ததும், வென்றதும், வீழ்ந்ததும் நினைவுக்கு வந்தன. அவன் கரம் கூப்பினான். அழுதான்.

''மாமன்னா...மாமன்னா...'' என்று மல்லாக்க சாய்ந்தான்.

பரமி அவனைத் தாங்கிக் கொண்டாள். பிரம்மராயர் அவன் நெஞ்சில் கை வைத்தார். மாமன்னர் அவன் தலையை வருடினார்.

''ஐயன்...ஐயன்...இத்தனை நாள் எங்கிருந்தீர்கள் ஐயன்'' கதறினான். ''என்னை ஏன் கீழே தள்ளிவிட்டீர்கள், ஐயன்? என்னை மட்டும் ஏன் பிறப்புச் சேற்றில் அழுத்திவிட்டீர்கள் ஐயன்?'' குழறிக் குழறிப் பேசினான்.



''உங்கள் மீது எத்தனை பிரியம் பிரம்மராயரே காரிக்குளிப்பாகைக்கு?'' மாமன்னர் புன்சிரிப்புடன் சொன்னார்.

''இவன் என் படை வீரன். எனக்கு அந்தரங்கன். கந்தன் மாறவேளைவிட எனக்கு இவன்மீது பிரியம் உண்டு.''

''கந்தன் மாறவேளா... அண்ணாரா... அண்ணார் எங்கே...''

''என்ன பெயர் அது?'' மன்னர் கேட்டார்.

''முருக வைத்தியர்'' பரமி பதில் சொன்னாள்.

''அது அப்பா.''

''இல்லை, அது கந்தன் மாறவேள். உன் தமையன் அவரும் பிறப்பெடுத்தார்.''

''மன்னா... அப்பா... இல்லை... அண்ணார். ஒரு பெண்ணோடு என்னைப் பிரிந்து போய்விட்டார்.''

''போகட்டும். அவர் வினை இன்னும் தீரவில்லை.''

''அவர் தங்களுக்காக சிரமறுத்தவர். அவர் நலமாய் இருத்தல் வேண்டும்.''

''இறைவன் அருள்வாராக...''

''மன்னரே எனக்கு யாருமில்லை.''

''நாமிருக்கிறோம். நமது கூட்டமும் உண்டு.''

''என்னை விடுவியுங்களேன்...''

''அரை நாழிகையில் விடுவிக்கப்படுவாய். நேரம் வந்துவிட்டது.''

# 7

''ஹலோ...ஹலோ...'' ஒயர்லெஸ் உயிர் பெற்றது.

''ஆறு பேரை வெட்டிப் போட்டுட்டு மூணு பார்ட்டி தாம்பரம் வுட்டு ஓடிப் போச்சுங்க. இந்தப் பக்கம் டிராஃபிக் ஜாம் ஆயிடுச்சு. பார்ட்டி பார்டர் தாண்டிப் போயிருக்கணும். செக் போஸ்ட் டாப் பண்ணுங்க. டி.எம்.ஸி. 2323. ஆட்டோ தூக்கினு போயிட்டாங்க. எல்லார் கைலயும் லெத்தல் வெப்பன் இருக்கு. முரட்டுப் பார்ட்டி. ரெண்டு ஆம்பளை. ஒரு பொண்ணு, கிட்நாப் கேஸ்... ஓவர்...''

''ராஜா பார்ட்டி பேர் என்னா?''

''சரவணன். இருபது வயது. முருக வைத்தியர் நாற்பது வயது. வெங்கடலட்சுமி இருபது வயது ஓவர்...''

''ராஜா. இதோ கிளம்பிட்டோம்.''

ஜீப்பில் தாம்பரத்து ஆட்கள் இரண்டு பேரை ஏற்றிக் கொண்டார்கள். இரண்டு பேரும் சரவணனிடம் அடிபட்டவர்கள். நாலு போலீஸும் ஒரு இன்ஸ்பெக்டரும் தொற்றிக் கொள்ள ஜீப் புறப்பட்டது. இன்ஸ்பெக்டர் ரிவால்வரைப் பிரித்துச் சரி செய்து கொண்டார். உறையிலிட்டார்.

''யோவ் தாம்பரத்தாரே...கைல என்னய்யா வச்சிருக்காங்க...''

''வீச்சருவா, வேல்கம்பு ரெண்டு வச்சிருக்கானுங்க. அந்தப் பக்கத்து பசங்கள்லாம் சுருள்கத்தி ஆடறவனுங்க. காலைல மார்க்கெட்ல ஒண்டி ஆளா பத்து பேரை சமாளிச்சான்.''



''ரௌடியா?''

''ரௌடின்னு இல்லீங்க.''

''சாராயம் காச்சரானா?''

''அவுங்கள்ள பெரியவன் நாட்டு வைத்தியன் அரிஷ்டம் காச்சுறதா சொல்றாங்க. தெரியலை.''

பயமும் படபடப்பும் அதிகம் பொய் சொல்ல வைத்தன. மிகைப்படுத்த வைத்தன.

''சொல்லிப் பார்ப்பேன். படியலைன்னா சடார்னு சுட்டுடுவேன். அரிவாளை எடுத்து வெட்ட வந்தான்னு சொல்லிடுவேன். நீங்களும் அப்படியே சொல்லிடணும். என்னா?''

கலவரத்தினால் கற்பனையும் விரிந்தது.

''காலம் நெருங்கிவிட்டது. நாம் சற்று விலகுவோம்'' பிரம்மராயர் சொல்ல அவர்கள் அனைவரும் பின்னடைந்தார்கள்.

''மாமன்னரே...ராசராசரே... என்னைவிட்டு போக வேண்டாம்.''

''நாம் எங்கும் போவதில்லை. இங்கேதான் இருக்கிறோம். எங்களை நோக்கி நீ வரவேண்டும்.''

''நான் வருகிறேன். மன்னா...''

''இன்னும் கால் நாழிகை இருக்கிறது. சற்று பொறு.''

''டி.எம்.சி. 2323... ஆ? அரை அவர் முன்னாடி டோல்கேட் தாண்டிச்சு. நியாயத்துக்கு ஆட்டோக்காரன் பார்டர் தாண்டக்கூடாது. தாண்டறதுதான். தாண்டி திரும்பி வர்றதுதான். கேட்பாரில்லையே...''

''நீ மடக்கவேண்டியதுதானய்யா?''

''நாலு பேர்ல ரெண்டு பேர் லீவு. இருக்கிற ரெண்டு என்னத்த கேக்கறது...கேட்டா கத்தி காட்டுறான். எங்க ஆத்தாளுக்கு நான் ஒரே புள்ளை சார். அடிதடிக்கு கூப்புட்டா கூட போறதில்லை.''

ஜீப் வெறுப்பை புகையாய் கக்கி கோபத்துடன் கிளம்பியது. நகரி நாகலாபுரம் தாண்டியது.

''சார், ஆட்டோ நிக்குது பார் சார் அங்க...''

ஆட்டோவை சோதனை செய்தார்கள். இஞ்சின் சூடு குறையவில்லை. இப்போது தான் இறங்கியிருக்க வேண்டும். பஸ் டயர் தடங்களை சோதனையிட்டார்கள். வீச்சரிவாளுடன் தோப்புப் பக்கம் ஒற்றை ஆளாய்யாரோ போவதாக எவனோ துப்பு கொடுத்தான். தோப்பு எங்கே என்று விசாரித்து, வண்டி திரும்பியது.

சரவணன் எழுந்தான்... கால் தள்ளாடியது. ஈறுகள் வலித்தன. நெஞ்சுத் துடிப்பு காதுக்குக் கேட்டது. கண்கள் சற்று முன் கண்டவைகளைத் தேடின. இப்போது தெரிபவைகளை வியப்புடன் பார்த்தன. ''மாமன்னரோ... ராசராசரே...''சரவணன் பிதற்றினான். ஏன் இப்படி பிதற்றுகிறோம் என்று கவலைப்பட்டான். வயதாகி தள்ளாமை ஏற்பட்டது போல் உணர்ந்தான். மரம் பிடித்து மெல்ல மெல்ல நடந்தான். ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று உள்மனம் சொல்லிற்று. நெஞ்சு விரிந்தது.

''சார் அதோ போறான்... சரவணன் போறான்...'' தாம்பரத்து ஆட்கள் கத்தினார்கள்.

ஜீப் பயத்துடன் குலுங்கி நின்றது.

''கைல வீச்சருவா வச்சுருக்கான் சார். அதாலதான் காலைல நாலு பேர அடிச்சான்.''



''துப்பாக்கி எடுத்துருங்கோ... துப்பாக்கி எடுத்துருங்கோ'' இன்னொரு தாம்பரம் ஆள் பதறினான்.

''கை கட்டை கூட இல்லாத வந்துட்டம்.'' கருங்கற்களை பொறுக்கிக் கொண்டார்கள்.

''டேய்... யார்ரா அது?'' இன்ஸ்பெக்டர் கத்தினார்.

சரவணன் பயத்தோடு திரும்பினான். வீச்சரிவாளை இடது கைக்கு மாற்றிக் கொண்டான். அச்சிறுப்பாக்கம் ஞாபகம் வந்தது. அங்கேயும் ஒரு தோப்பு, புளியந்தோப்பு. அங்கேயும் போர் நடந்தது. துவம்சம் செய்து திரும்பிய போது மறைந்திருந்து தாக்கினார்கள். வேல் கம்பால் தலையில் அடித்தார்கள். தலையில் அடித்தவரை ஒரே வீச்சில வெட்டிக் கொன்றது ஞாபகம் வந்தது.

''யார்ரா நீ?''

''காரிக்குளிபாகை''

''எந்தூரு உனக்கு?''

''சோழ மண்டலம். தெரிஞ்ச கைக்கோளப்படை இடங்கை வீரன். ராசராசத் தேவரின் அடிமை. பிரம்மராயரின் அந்தரங்கப்படை.''

''இன்னாய்யா சொல்றான் அவன்...''

''ஃபுல்லா தண்ணி போட்டுருக்கான் சார்...''

''ஏய் அருவாளைக் கீழ போடுறா...'' தொலைவிலிருந்தபடி இன்ஸ்பெக்டர் குறி பார்த்தார்.

காவலர்கள் வியூகம் வகுத்தனர். தாம்பரத்து ஆள் மரத்துக்கு மரம் பதுங்கி சரவணனுக்குப் பின்பக்கம் போனான்.

''அருவாளைக் கீழ போடுறா, நாயே...''

''மரணத்திலும் இடங்கை வீரன் வாளைக் கீழ போட்டதில்லை.''

''பெரிய வீரனா நீ அடி செருப்பால... ஒரே புல்லட் — மூளை எகிறிடும். கீழ போட்டுரு.'' மறுபடி கத்தினார்.

தாம்பரத்தான் கல்லை வாட்டமாக வைத்துக் கொண்டான். குறி பார்த்தான். மூங்கிலால் அவன் குத்தப்பட்டது ஞாபகத்துக்கு வந்தது. முழு பலத்தோடு கருங்கல்லை எறிந்தான். கருங்கல் சரவணன் பின் தலையில் சென்று விழுந்தது. உயரே எழுந்தது. தரையில் விழுந்தது.

''மாமன்னா...'' சரவணன் அலறினான். மண்டியிட்டான். பின்தலைபிய்ந்து மண்டையோடு விரிசல் கண்டது. மூளையைச் சுற்றியுள்ள நீர் வழியத் துவங்கியது. வலி முதுகெலும்பு வழியே இறங்கி மூலாதாரம் அழுத்தியது. முக்கோணம் உடைந்து முழு வேகத்தில் ஒரு சக்தி அவன் உடலெங்கும் பரவியது. சரவணன் வலியில் துடித்தான்.

இன்ஸ்பெக்டர் ஓடி வந்து அவன் இடது கை அரிவாளை எட்டி உதைத்தார் பிடி தளரவில்லை. சரவணன் அரிவாளோடு மல்லாக்க விழுந்தான்.

''உம் பேர் என்ன?''

''காரிக்குளிப்பாகை...''

''உம்பேர் சொல்லுடான்னா ஏதோ மருந்து பேர் சொல்ற... உங்கப்பா எங்கடா?''

''அவர் அப்பார் இல்லை. அண்ணார். கந்தன் மாறவேள்.''

''என்னடா கதை வுடற.''

''மாமன்னரே எனக்கு விடுதலை கிடைத்து விட்டதா?''

* * *



''கூத்து கட்டற பையனா இவன்?... கன்னாபின்னான்னு உளர்றான். எங்க அந்தப் பொண்ணு?''

''திருமகள்போல பெருநிறைச் செல்வியும்...''

''அவ பேரு செல்வியா? நீ என்னமோ லட்சுமின்ன..?''

''தனக்கே உரிமை பூண்டு மெனக்கெட
காந்தளூர் சாலை கலமறுத்தருளி...''

சரவணனுக்கு மூச்சு திணறியது.

''லொட்டுன்னு மண்டைல அடிச்சியேய்யா. இரு இரு என்னமோ சொல்றான். எழுதிக்க...''

''வேங்கை நாடும் கங்கபாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டு தொழிற் சிங்களர் ஈழ மண்டலமும்...''

''அட, இவன் விடுதலைப்புலி...சொல்லு...சொல்லு... அப்புறம் என்னா சொல்லு...''

''ரெட்டைப்பாடி ஏழரை இலக்கமும்
முன்னீர் பழந் தீவு பன்னீராயிரமும்...''

''ஏதோ துட்டுக் கணக்கு சொல்றான் சார்...''

திண்டிறல் வெறித் தண்டாற் கொண்டதன்...

எழில் வளர் ஊழியுள் எல்லா ஆண்டும் தொழுதக விளங்கும் ஆண்டே... போலீஸுக்கு இதை எழுதத் தெரியவில்லை.

''செழியரைத் தேசுகொள்... ஸ்ரீராசராசத் தேவர் வாழ்க''

''யாருங்க ராசராசர்? அவன் கூட்டாளியா இருக்குமா?''

''சார்... நெஞ்சுத் துடிப்பு இழுக்குது...''

''சரவணா... சரவணா எழுந்திரு... லொட்டுன்னு மண்டைல அடிச்சிட்டீங்களேய்யா...'' இன்ஸ்பெக்டர் கன்னம் தட்ட அவன் முகம் தரைல படிந்தது. இடது கை பிடி இன்னும் இறுகியது ! அவனைத் தூக்கும்போது பிடி நழுவாத வீச்சரிவான் தரையில் கோடு போட்டுக்கொண்டு வந்தது.

□ □ □

''ராசராசர் அடிமை... தெரிஞ்ச கைக்கோளப்படை... இடங்கை வீரன்... காரிக்குளிப்பாகை வாழ்க... வாழ்க...''

மாந்தோப்பு முழுவதும் மகிழ்வுக் குரல்கள் கேட்டன. காரிக்குளிப்பாகையை மாமன்னர் ராசராசர் தழுவிக் கொண்டார். அவன் தோள் மீது கை போட்டுக் கொண்டார்.

''மன்னரின் சேவகத்துக்கு மறுபடி வந்ததில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.''

''எனக்கும் மகிழ்ச்சி காரிக்குளிப்பாகை. இனி உனக்கு பிறப்பே இல்லை.''

''என் அண்ணார் நலமா மன்னரே.''

''அதோ பார், ஒரு ஊர்தியில் தன் துணையோடு போய்க்கொண்டிருக்கிறார்.''

□ □ □

பஸ் காலியாக இருந்தது. வெங்கட லட்சுமி முருகு வைத்தியர் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தாள். முருகு வைத்தியர் இவள் இடுப்பை மெல்ல தடவிக் கொண்டிருந் தார். 'சிலை மாதிரி இருக்கா பார், தூங்கற போதும்.



உன்னை விட மாட்டேன்டி. சாவற மட்டும் விட மாட் டேன்.

□ □ □

''காதல் என்பது என்ன? காரிக்குளிப்பாகை?'' பரமி அவன் அருகே வந்து கேட்டாள்.

''தன் மீது தான் கொள்ளும் ஆசை'' காரிக்குளிப் பாகை பதில் சொன்னான்.

அவர்கள் எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். கண் சிமிட்டும் நேரத்தில் தஞ்சையில் நின்றார்கள்.

''மாமன்னா... இன்னும் இருக்கிறது நீங்கள் கட்டிய கோயில்.'' காரிக்குளிப்பாகை வியந்தான். ''ஆயிரம் ஆண்டாயிற்று. இன்னும் அழியாமல் இருக்கிறது.''

''விமானத்தில் முன் மண்டபம் இடிந்துவிட்டது.'' மாமன்னர் பதில் சொன்னார்.

''ஆமாம். நாட்டிய மண்டபம், கீழே வேத பாட சாலை...''

''ஆனால், விமானம் இருக்கிறது.''

''அழகிய விமானம்.''

''யாராலும் கட்ட முடியாத விமானம். யாராலும் கட்ட முடியாத கோயில். நமது ராசராசரால் மட்டும் தான் கட்ட முடியும். தென்னாடுடைய சிவனுக்கு கோயில் கட்ட முடியும்.''

''ராசராசேஸ்வரர்...''

''பிரகதீஸ்வரர்.''

''தஞ்சை பெரிய கோயில்.''

''எங்கள் கோயில்.''

கோவில் வெளிப்பரப்பில் புழுதி சுருண்டு சுருண்டு பறந்தது.

□ □ □

அவர்கள்... ஆயிரக்கணக்கான அவர்கள்... ஆசை அடங்காது அந்தக் கோயிலைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இனி இந்த உலகம் அழியும் மட்டும் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அந்தக் கோயிலுக்கருகிலேயே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

முற்றும்